பக்கங்கள்: இருபத்தெட்டு + II

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 18 புதன்கிழமை (03.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 250







# ஊடக ஒடுக்குமுறையை உடனே தடுத்து நிறுத்து

## குகா மீதான தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம்

-கொழும்பிலிருந்து இரா. புத்திரசிகாமணி-

கொழும்பு, ஓகஸ்ட் 3

*உதயன்* பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மீது நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான, மனிதநேயமற்ற தாக்குதலைக் கண்டித்து, ஊடக ஒடுக்குமுறையை உடன் தடுத்து நிறுத்து என்ற கோஷத்துடன் தலைநகர் கொழும்பில் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. லிப்டன் சதுக்கத்தில் முற்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிங்கள, தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கைத் தமிழ்ப் பத்திரிகையாளர் ஒன்றியம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை ஊடக ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனம் ஆகிய அமைப்புக்கள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன.

தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறீதரன், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், ஐக்கியத் தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, மங்கள சமரவீர, ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கொட்டகொட, அனோமா பொன்சேகா, இடதுசாரிகள் முன்னணியைச் சேர்ந்த விக்கிரமபாகு கருணாரட்ன உட்படப் பல அரசியல்வாதிகளும் கலந்து கொண்டனர். ஒன்றரை மணி நேரம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஊடக சுதந்திரத்தையும் மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கோஷம் எழுப்பினர். (உ)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு அரச அனுசரணை எப்போதுமே உண்டு

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 3

''மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னரே வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் நூற்றுக்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டும், கொலை செய்யப்பட்டும் உள்ளனர். ஆனால் இன்றுவரை ஒருவரையாவது இந்த அரசு கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவில்லை. காரணம் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் அனைத்துக்கும் அரச அனுசரணை உண்டு'' - என்று குற்றஞ்சாட்டினார் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

*உதயன்* பத்திரிகையின் செய்தி ஆசிரியர் குகநாதன் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகங்கள் மீதான 'மாபியா' பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவின் கட்டுப்பாட்டிலேயே செயற்படுகின்றது. ஜனாதிபதி

பக் 25

# மன்னாரில் சடலம் கரையொதுங்கியது

## இந்திய மீனவருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகம்

மன்னார், ஓக. 3

இந்திய மீனவருடையது என்று கருதப்படும் சடலம் ஒன்று நேற்று மன்னார் சௌத்பார் கடற்கரையில் கரையொதுங்கியது என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் கடற்படையினர் சடலத்தைப் பார்வையிட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே கரையொதுங்கி உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். நண்பகலில் கடற்கரைக்கு வந்த நீதிவான் திருமதி கே.ஜீவராணி, சடலத்தைப் பார்வையிட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்க

பக் 27

# யாழ். குடாநாட்டு எம்.பிக்கள் குறைப்பு அரசு-கூட்டமைப்பு பேச்சைப் பாதிக்கும்

கொழும்பு, ஓக. 3

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் திட்டமானது, அரசியல் தீர்வை எட்டுவதற்காக அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுக்களைப் பாதிக்கும் என்று ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் அவர் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒன்பதிலிருந்து ஆறாகக் குறைக்க இருப்பதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

பக் 27

# 11,664 முன்னாள் புலிகளும் சாட்சியமளிக்கத் தயாராம்

## சிறிலங்காவின் கொலைக்களத்துக்கு எதிராக

கொழும்பு, ஓக. 3

சனல் - 4 தொலைக்காட்சிக்கு எதிராக சாட்சியமளித்து இலங்கை அரசைக் காப்பாற்ற 11 ஆயிரத்து 664 முன்னாள் போராளிகள் தயாராகவுள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க

பக் 27

# சுஷ்மா சுவராஜ் யாழ். வருகிறார்

கொழும்பு, ஓக. 3

இந்திய எதிர்க்கட்சித் தலைவி திருமதி சுஷ்மா சுவராஜ் அடுத்த மாதம் 17ஆம் திகதி இலங்கை வருகிறார். அவர் இரண்டு நாள்கள் இலங்கை

பக் 27

# விளக்கம் கோருகிறது கபே

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பான தீர்மானம் தொடர்பாக சரியான விளக்கத்தைத் தருமாறு தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்பு தேர்தல்கள் ஆணையாளரிடம் கேட்டுள்ளது.

இ. து தொடர்பாக அந்த


பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங் களி லும் தெளிவான வானம் காணப்படும் சாத்தியம் உள்ளது.

# குகநாதனின் மருத்துவ செலவுக்கு ஜனாதிபதி நிதியம் உதவ வேண்டும்

## லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக.3

கடுமையான தாக்குதலுக்கு உள்ளான உதயன் செய்தி ஆசிரியர் குகநாதனின் வைத்தியச் செலவுக்கு ஜனாதிபதி நிதியத்தினூடாக உதவி வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் வீதியோரத்தில் வைத்து இனந்தெரியாதோரால் கடுமையாக தாக்கப்பட்ட உதயன் செய்தி ஆசிரியரின் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தாக்குதல் சம்பவங்கள் 5 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றன.

இதுவரை 30 க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் இவ்வாறு கொல்லப்பட்ட, தாக்கப்பட்ட, கடத்தப் பட்ட சம்பவங்களுடன் தொடர் புடைய குற்றவாளிகள் எவரும் இதுவரை கைது செய்யப்பட வில்லை.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வேட்பாளர்கள் மீதும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. கடந்த வாரம் உதயன் செய்தி ஆசிரியர் மீது தாக்கப்பட்ட சம்பவத்துடன் அரசாங்கத்தின் பின்னணியில் உள்ளோரே காரணமாக இருக்கின்றனர்.

இவ்வாறு ஊடகங்கள் அடக்குமுறைக்கு உள்ளாவதை அமெரிக்கா கண்டிப்பதுடன் உதவிகளையும் தடைசெய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக அரசு கவனத்தில் எடுத்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைகள் வழங்குவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (ம)

# லண்டனிலிருந்து வந்தவர் தூக்கில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக.3

சாவகச்சேரியில் தூக்கில் தொங்கிய நிலையில் லண்டனிலிருந்து வந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த 32 வயதுடைய இரத்தினம் சிவகுமார் என்பவரே இவ்வாறு சடலமாக நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

லண்டனில் இருந்து தமது பிள்ளைகளைப் பார்ப்பதற்காக பிரஸ்தாப நபர் யாழ்ப்பாணம் வந்துள்ளார். நேற்று முன்தினம் வீட்டில் கால் நிலத்தில் ஊன்றிய நிலையில் இவரது சடலம் மீட்கப்பட்டது.

பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்றுமுன்தினமே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவரது மரணம் தூக்கில் தொங்கியதாலேயே நிகழ்ந்ததாகவும் உடலில் காயங்கள் காணப்படவில்லை என்றும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-15-4-207)

# இருவர் மறியலில்

யாழ்ப்பாணம், ஒக.3

நாவற்குழி பகுதியில் ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான தண்டவாளத்தை அறுத்ததாக குற்றம் சாட்டப்பட்டு அப்பகுதியை சேர்ந்த இருவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்து இருவரையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-207)



புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது அலுவலகத்தில் ம.திமு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்றுச் சந்தித்து உரையாடினார். அப்போது ஈழத்தமிழர் தொடர்பான 3 கோரிக்கைகளை வைகோ முன்வைத்தார். அருகில் ம.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி (செய்தி 21 ஆம் பக்கத்தில்) (ஒ)

# கிணற்றில் வீழ்ந்த சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், ஒக.3

விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் தவறி கிணற்றில் வீழ்ந்து விட்டான்! அவனை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியில் மரணமானான்.

யாழ்ப்பாணம், கொட்டடி ஆஸ்பத்திரி வீதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கருணாகரன் ஜெய்சன் (வயது 5) என்ற சிறுவனே மரணமானான். (ஒ-4)

# விழி வெண்படல சத்திரசிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஒக.3

'பார்வை 2020' திட்டத்தின் கீழ் விழிவெண்படல குறைபாடுடைய நோயாளர்களுக்கு இலவசமாக கண் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தச் சத்திர கிசிச்சை முகாமுக்கு நோயாளர்களைத் தெரிவு செய்யும் சிகிச்சை முகாம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி முதல் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையிலும் முற்பகல் 11 மணிமுதல் வேலணை பிரதேச வைத்திய சாலையிலும் இடம்பெறும்.

இச்சிகிச்சை முகாமில் கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் நோயாளர்களை தெரிவு செய்யவுள்ளதால் விழிவெண்படல குறைபாடுடைய நோயாளர்கள் சிகிச்சை முகாமில் பங்குபற்றி தமது பெயர்களை பதிவு செய்யுமாறு யாழ். சுகாதார சேவைகள் பணிமனை பிராந்தியப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-எ)

# பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை உலகத்தை ஏமாற்றும் முயற்சி

## மனித உரிமை கண்காணிப்பகம் கூறுகிறது

நியூயோர்க், ஒக. 3

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள 'மனிதாபிமான நடவடிக்கையின் உண்மைப் பகுப்பாய்வு' என்ற பெயரிலான புதிய அறிக்கையை விமர்சித்துள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், இது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் குற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று உலகை நம்பச்செய்வதற்கான ஓர் ஏமாற்று முயற்சி எனக் கூறியுள்ளது.

'யுத்தத்தின் கடைசி மாதங்களில் பொதுமக்கள் உயிரிழந்ததை இலங்கை அரசு இறுதியாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், திருப்தியளிக்காத வகையில், அதற்கு பொறுப்பேற்கவில்லை' என நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பணிப்பாளர் பிரையன் அடம்ஸ் கூறியுள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது அரசின் மோசமான அட்டூழியங்கள் தொடர்பாக குவியும் சாட்சியங்களை மூடிமறைப்பதற்கான தந்திரமான - பளபளப்பான புதிய முயற்சி இது என்றும் -

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையானது, அதிகரித்து வரும் சாட்சியங்களுக்கு முரணாக, தமிழ் புலிகளுடனான யுத்தத்தின் போது, அரச படைகளினால் அட்டூழியங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்றும் உலகை நம்பச்செய்வதற்கான மற்றொரு பலவீனமான முயற்சி என பிரையன் அடம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்ட சர்வதேச பொறுப்புடைமை முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு உண்மைத்தன்மை கேள்விக்குட்படுத்தப்பட்ட இந்த அறிக்கையை சம்பந்தப்பட்ட அரசுகள் பயன்படுத்த வேண்டும் என அவர் கூறியுள்ளார். (ஒ-எ)

# நுண்கலைப் பட்டதாரிகள் ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக.3

ஜனாதிபதியால் அண்மையில் அலரி மாளிகையில் வைத்து நியமனம் வழங்கப்பட்ட வடமாகாணத்தைச் சேர்ந்த நுண்கலைப் பட்டதாரிகளும் வடமாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆசிரியர் நியமனம் பெற்ற நுண்கலைப் பட்டதாரிகள் மற்றும் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் பிரதிச் செயலர் வே.தி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார்.

(த-313)

# நிகழ்வுகள்

### கள்ளுத் தவறணை குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 3

சுன்னாகம் கதிரமலை வீதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணை தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கள்ளுத் தவறணை காரணமாகப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்து சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றம் வலி. தெற்கு பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றை கையளித்திருந்தது.

கூட்ட மண்டபம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தவறணையை மக்கள் செறிந்து வாழும் இப்பிரதேசத்தில் இருந்து அகற்றுமாறு அம்மகஜரில் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

முன்னதாக 'கூட்ட மண்டபம் உருமாறி கள்ளுத் தவறணையானது' என்ற தலைப்பில் உதயனில் செய்தி வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-38)

### பரிசில் தினம்

மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை பரிசில் தினம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்

அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, வைத்திய கலாநிதி லியோன் புஷ்பராணி ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் முடிந்த கையோடு குகநாதன் தாக்கப்பட்டது கவலை தருகிறது

## நல்லை ஆதீனம் கண்டனம்

"உதயன்" நாளிதழின் செய்தி ஆசிரியரான ஞா. குகநாதன் தாக்கப்பட்டதை அறிந்து மிகவும் கவலை அடைகிறோம். அவர் ஒரு தலைசிறந்த பத்திரிகையாளர். உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த கையோடு இத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது மிகவும் கவலை தரும் விடய மாகும்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடக்கில் பொதுவாகக் கருத்துச் சுதந்திரம் இருக்கவேண்டும். "எல்லோரும் வாழ வேண்டும்" என்றபடி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மக்களின் மனம் நிறைந்த நாளிதழான "உதயன்" செய்தி ஆசிரியர் அனைவருக்கும் பொதுவானவர். அவரது சேவை நாட்டுக்குத்தேவை. ஆகவே, அவரைத் தாக்கினால் எந்தவித நன்மையும் வந்துவிடப்போவதில்லை.

இத்தகைய கொடூரச் செயல் தகாத ஒன்று. மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமல் வாழ்வதே மனித நேயப்பண்பு.

சைவசமயத்தின் கோட்பாடு யாதெனில் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழ வேண்டும். மறந்தும் கேடு நினைக்கக்கூடாது. "கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி எல்லா உயிருந்தொழும்" என்ற வான்புகழ் வள்ளுவரின் கூற்றுப்படி சைவமக்களாகிய நாம் பிற உயிர்களுக்குத் துன்பந்தரக் கூடாது என்பதே நியதி. ஆகவே, "உதயன்" செய்தியாளர் ஞா.குகநாதன் உடல்நலம் தேறிச் சுகமாக வீடு வந்து சேர வேண்டுமென்று எல்லாம்வல்ல நல்லைக்கந்தன் திருவடிகளைப் பிரார்த்திக்கிறோம்.

மேலும் நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து தாக்கப்பட்ட செய்தியாளர் நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். - என்றுள்ளது. (ம)

# மூத்த ஊடகவியலாளர் மீதான தாக்குதல் கோழைத்தனமானோரின் செயற்பாடாகும்

## யாழ்.மாநகரசபை உறுப்பினர் விஜயகாந்

உதயன் செய்தி ஆசிரியரும் மூத்த ஊடகவியலாளருமான ஞா.குகநாதன் மீது கடந்த 29.07.2011 அன்று இரவு இனந்தெரியாதவர்களால் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறு யாழ். மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எஸ்.விஜயகாந் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மிகச் சிறந்த பத்திரிகையாளனாக ஞா. குகநாதன் தமிழ்த் தேசிய சிந்தனையை மனதில் வரித்துக் கொண்டு குடாநாட்டில் மட்டும் அல்ல தமிழ் மக்கள் எங்கெல்லாம் பாதிக்கப் படுகின்றார்களோ அவர்களின் மன வேதனைகளையும் உரிமைகளையும் தன் பேனா முனையினால் உலகத்துக்கும் மாற்றுத் தரப்பினருக்கும் எடுத்துக் காட்டியவர். துணிச்சலுடனும், நேர்மையுடனும் செயலாற்றி வருபவர். கருத்துக்களைக் கருத்துக்களால் வெல்ல முயற்சிக்காமல் மிகவும் கேழைத்தனமான இந்தத் தாக்கு தலை நடத்திய காட்டுமிராண்டிகள் சாதிக்கப் போவது ஒன்றுமில்லை.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப் போற்றப்படும் ஊடகத்தைத் தாக்குவது அதிகபட்ச ஜனநாயக விரோதச் செயற்பாடாகும். போர் ஓய்ந்து அமைதியும் ஜனநாயகமும் நிலவுகின்ற தற்போதைய சூழ்நிலையில்கூட ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியவில்லை என்பது மிகவும் கவலை தருகின்ற விடயம். உதயன் செய்தி ஆசிரியர் மீதான தாக்குதலின் சூத்திரதா ரிகள் கண்டுபிடிக்கப்பட்டுச் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண் டும். அதேநேரம் ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களையும் காப்பாற்றும் பெரும் பொறுப்பு அதிகாரத் தரப்பிடம் மட்டுமன்றி பொது மக்களிடமும் உள்ளது.

இந்தப் பொறுப்பை உதாசீனம் செய்கின்ற சமூகமும் நிர்வாகமும் தம் தலையில் தாமே மண் அள்ளிப் போட்டுக் கொண்டதாகும். எனவே அனைவரும் ஓர் அணியில் திரண்டு ஊடக சுதந்திரத்தைக் காக்கக் குரல் கொடுப்போம்.-என்றுள்ளது. (ம)

# இனந்தெரியாதோர் என்று விட்டுவிடுவதால் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன

## வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் கண்டனம்

சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளரும் உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியருமான குகநாதன் இனம்தெரியாத நபர்கள் என வழமை போன்று வர்ணிக்கப்படுபவர்களால் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட சம்பவமானது அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி.வடக்குப் பிரதேசசபை உறுப்பினர் ச.சஜீவன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது:

இந்த நாட்டில் மக்கள் தொடர்பியலில் முக்கிய பங்கை வகிக்கும் ஊடகங்களின் பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் மற்றும் அத்துறை சார்ந்தோர்களுக்குத் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் அச்சுறுத்தல்களும் அவலங்களும் இந்த நாட்டில் ஊடக சுதந்திரம் எவ்வாறு மதிக்கப்படுகிறது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

கருத்தியலைக் கருத்தியலால் சந்திக்கும் திறனற்றவர்களின் கையாலாகாத்தனம் தான் ஊடகவியலாளர்களின் மீதான தாக்குதல்களாகும்.

ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் இலக்குவைக்கப்படுவதால் இந்த நாட்டின் ஜனநாயக ஆட்சி முறை குறித்து சந்தேகங்களை மேலும் அதிகப்படுத்துவதாகவும், மனித உரிமைகளுக்கு இந்த நாட்டில் எத்தகைய மதிப்பு உள்ளது என்பதை உலகம் அறிந்து கொள்வதற்கும் உதவி செய்வதாகவே உள்ளது-என்றுள்ளது. (ம)

## மக்கள் கருத்து

### யாழ்ப்பாணத்தில் என்னதான் நடக்குது?

பத்திரிகையாளர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

கருத்துச் சுதந்திரம் ஜனநாயகம் உள்ள ஒரு நாட்டில், இத்தகைய அராஜகம் இடம்பெறுவது, ஆட்சியிலுள்ளோருக்கு அவமானத்தை ஏற்படுத்தும் செயலாகுமல்லவா?

ஆட்சியாளர்களை இழிவுபடுத்துவதற்கென்று திட்டமிட்ட வகையில் யாரும் செயற்படுகிறார்களா? இதனை அலசி ஆராய்ந்து ஜனநாயகச் செயற்பாடு ஒன்றில் ஈடுபட்டிருக்கும் ஒரு பத்திரிகையாளனை தாக்க முற்பட்ட அதிகாரரைக் கண்டுபிடித்து தகுந்த பாடம் படிப்பிப்பதனூடாக நல்லபெயரை ஆட்சியாளர்கள் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். (ம)

உதயன் வாசகர்.

### கோழைகளின் வீரம்

கடந்த 29.07.2011 அன்று உதயன் செய்தி ஆசிரியர் ஞா. குகநாதன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நிச்சயமாக எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு காட்டுமிராண்டித் தனமானதும், காடைத்தனமானதாகும்.

கடந்த காலங்களில் பல்வேறு கொலைவெறித் தாக்குதல்களை உதயன் சந்தித்திருந்தாலும் மக்களின் ஆதரவும், ஆசியும் அவனை எப்போதும் முன்னிறுத்தியே வந்துள்ளன.

இதனைப் பார்க்க கேட்க சகிக்காத 'சிலரே' மீண்டும் தமது 'வீரத்தை' இந்த 59 வயதான பிரமுகரிடம் காட்டியிருக்கின்றனர்.

இப்படிக் கருத்து சுதந்திரத்தை ஆயுதங்களால் அடக்க முற்படும் இந்தக் 'கும்பல்' பற்றி உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகத் துறை அமைப்புக்களும் அரசும் என்ன பதிலை சொல்லப்போகின்றன?

அதிலும் யாழ். குடாநாடு பூரண அமைதியில் இருப்பதாக ஒவ்வொரு கொலை, கொள்ளைகளுக்கும் பின்னால் விதவிதமாக அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கும் அரசும் பாதுகாப்புத்தரப்பும் இதற்கு என்ன சொல்வார்கள்?

ஒன்று மட்டும் உண்மை, அரசும் அதன் ஆதரவுக் கட்சிகளும், பாதுகாப்புத் தரப்பினரும் என்ன மாதிரியான பதிலை வழங்கினாலும் அதனால் எதுவித பயனுமில்லை. ஏனெனில் நாம் இப்படி எத்தனையோ பயனற்ற அறிக்கை மழையில் நனைந்தவர்களே!

யாழ்ப்பாணம். கொட்டடியாள்.

### உதயனுக்கு மக்கள் பலம் இருக்கும்

இரத்த வெறிப்பிடித்த மனிதக் காட்டேரிகள் இருவரால் உதயன் செய்தியாசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் கோழைத்தனமாக, மிருகத்தனமாகத் தாக்கப்படுள்ளமை ஊடக ஜனநாயகத்துக்கு விழுந்த மரண அடியாகவே கொள்ளப்படுகின்றது.

தேர்தலின் போது தமிழ் மக்கள் அதிகார பீடத்தின் உச்சந் தலைகளுக்கு விழுந்த சம்மட்டி அடியை தாங்கிக் கொள்ள முடியாத தமிழ் மக்களின் பெயரால் அரசியல் கூத்தடிப்பு நடத்தும் கூட்டம் தனது இயலாமையை இவர் மீது காட்டியுள்ளது.

ஆனால் தனது வலிகளையும் தாங்கி வலிமையுடன் தமிழ் தேசியத்துக்காக ஊடகக் களமாடும் உதயனுக்கு தமிழ் மக்களின் பின்புலம் - தோன்றாகத் துணை தொடர்ந்தும் இருக்கும் என்பது உறுதி.

வல்வெட்டித்துறை. பதுமன்.

# இந்துமத பீடம் கண்டனம்

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் எவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தனது பத்திரிகைப் பணியை மிகவும் சிறப்பாக நடத்தி வருபவர் குகநாதன்.

இவர் சமய, மொழிப் பற்றுடன் செயலாற்றும் மூத்த சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆவார்.இவர் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளமை கண்ட னத்துக்குரியது.

இவ்வாறு சர்வதேச இந்துமத பீடம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டியது

## மகளிர் அபிவிருத்தி நிலையம்

உதயன் பத்திரிகையின் ஊடகவியலாளர் கம்பிகளால் தாக்கப்பட்டு படுகாயமடைந்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், அவரை இந்த நிலைக்குத் தள்ளிய கயவர்களின் கொலை முயற்சியை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு மகளிர் அபிவிருத்தி நிலையம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் உள்ளதாவது:

ஜனநாயகத்தின் காவலனாக விளங்கும் ஊடகத்துறையை விரும்பாத சக்திகளே இனங் கண்டு இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்குத் தகுந்த தண்டனையை நீதித்துறையின் காவலர்கள் பெற்றுக்கொடுப்பார்கள் என நம்புகின்றோம்.

ஊடகத்துறைக்குப் பலராலும் காட்டப்படும் அடக்குமுறை சவாலாக இருந்தபோதிலும் ஊடகத்துறையின் உண்மைத் தன்மையையும் விரிவாக்கமும் தகவல் பரிமாற்றத்தின் வளர்ச்சியும் செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்கும் வீச்சும் இன்று பல மாற்றங்களை ஏற்படுத்திவருவதை அவதானிக்க முடிகின்றது.

வட மாகாணத்தில் ஏற்பட்ட ஜனநாயகப் புரட்சிக்கு வித்திட்டவர்கள் ஊடகத் துறையினரே, இதன் விளைவாகப் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களே. பத்திரிகைத் துறைக்கு விடுக்கப்பட்ட சவால்மூலம் முழு உலகுமே இன்று விழிப்படைந்துள்ளது.-என்றுள்ளது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 101 ஆசனங்கள் இருந்தபோது 7 பிரதிநிதித்துவம் 225 உள்ளபோது அது 6 ஆகக் குறைவது எப்படி?

## கேலிக் கூத்தான விடயம் என்கிறார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், ஒக. 3

101 பேர் சபையில் இருந்தவேளையில் யாழ்.மாவட்டத்துக்கு 7 எம்.பிக்கள் எண்ணிக்கை வழங்கப்பட்டது. 64 ஆண்டுகள் கழித்து 225 ஆசனங்களைக் கொண்ட சபையில் யாழ். மாவட்டத்துக்கு 6 ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது வெறும் கேலிக் கூத்தான விடயம்

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு;

யாழ். தேர்தல் மாவட்டத்தின் 9 நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை ஆறாக குறைக்க தாங்கள் எடுத்த தீர்மானம் எனக்கு பெரும் ஆச்சரியத்தைத் தருகின்றது. இந்த விடயத்தில் மாறாட்டம் தேவையில்லை. யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகியவை இணைந்த யாழ். தேர்தல் மாவட்டத்தை குறிப்பிடுகின்றீர்கள் என்று நான் நம்புகின்றேன். யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி பிரிக்கப்படுவதற்கு முன்னர் யாழ். மாவட்டத்துக்கு இருந்த பிரதிநிதித்துவம் 11 ஆகும். ஒரு கட்டத்தில் வடக்கே சீரற்ற நிலைமை காரணமாக இரு ஆசனங்கள் குறைக்கப்பட்ட போது யாரும் அதைப் பெரிதுபடுத்தவில்லை. தற்போது தாங்கள் 9இல் இருந்து ஆசனங்களை 6 ஆகக் குறைப்பது எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. 1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரமடைய முன்னோடியாக இலங்கை நாடாளுமன்றத்தின் முதல் தேர்தல் 1947 ஆம் ஆண்டு நடைபெற்றபோது 95 ஆசனங்கள் தேர்தல் தொகுதிரீதியாகவும் 6 ஆசனங்கள் பிரதிநிதித்துவப்படாதவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக என மொத்தம் 101 ஆசனங்களில் யாழ் மாவட்டத்துக்கு மட்டும் கிடைத்த ஆசனங்கள் 7 ஆகும். சட்டரீதியான சரி, பிழை ஒரு புறம் இருக்க 101 பேர் இருந்த சபையில் 7 பேர் யாழ். மாவட்டத்துக்கு இருந்த நிலையில் 64 ஆண்டுகளுக்குப் பின்னர் அதே சபையில் 225 ஆசனங்களுக்கு 6 ஆசனங்கள் மட்டுமே யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கு கிடைக்க இருப்பது வெறும் கேலிக்கூத்தாக எனக்குத் தோன்றுகிறது. இந்த நிலையை நோக்கும் போது ஏதோ ஒரு தப்பான கணக்கீடு செய்யப்பட்டிருப்பதாக நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். இதற்குப் பரிகாரம் தேட நல்ல சில சிபாரிசுகளை ஜனாதிபதிக்கு அளித்து நிலைமையை சீராக்க வேண்டியது உங்கள் கடமையாகும். அவ்வேளையில் பின்வரும் விடயங்களும் கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டியவையாகும்.

* இடம்பெயர்ந்து தெற்கில் குடியேறியவர்கள் பலர் படிப்படியாக தமது வீடுகளுக்கு வந்து குடியேற இப்போது தான் ஆரம்பித்துள்ளார்கள்.

* நீங்கள் நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ள புதிய வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்ட போது இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பான்மையானோர் வீடு திரும்பவில்லை.

* பயம் காரணமாகவும் போதிய வசதிகள் இன்மை காரணமாகவும் வீடுகள் மனிதர்கள் குடியேறி வாழ முடியாத நிலையில் உள்ளதாலும் தயக்கம் காட்டுகின்றார்கள். அனேக வீடுகள் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அகப்பட்டுள்ளதாலும் மேலும் வீடுகள் இராணுவத்தினர் பலாத்காரமாக பிடித்து வைத்துள்ளமையாலும் அனேகர் மீளக்குடியேறவில்லை.

* சொத்துக்கள் அனைத்தையும் இழந்தும் உயிர் உட்பட எதுவித நட்டஈடுகள் பெறாத மக்கள் வாழ வழியின்றி குடியேற முடியவில்லை.

* யுத்தத்தில் உயிரிழந்த மக்களின் புள்ளிவிவரம் இன்மையால் இவற்றுள் அடங்கும் வாக்காளர்களின் நிலைமை என்னவென்று தெரியாமை மற்றும் காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்களின் நிலைமை என்னவென்று தெரியாமல் உள்ளமையால் வாக்காளர்களின் பதிவில் சரியான கணக்குச் சொல்ல முடியாமல் உள்ளது.

* வீட்டுத்தலைவர் தடுப்புக்காவலில் உள்ளமையால் குடும்பத்தவர் சொந்த வீட்டுக்குப் போகமுடியாத நிலைமை.

* குடிசன மதிப்பீடு எடுத்துக்கொண்டிருக்கின்ற நிலைமையில் பழைய அரசியல் சாசனத்தில் இருந்தமை போன்று கணக்கெடுப்பு முடிந்த பின் தொகுதி நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழு முடிவுகளை எடுக்கலாம்.

* எல்லாவற்றுக்கும் மேலாக தாங்கள் எடுக்க இருக்கின்ற நடவடிக்கை நாட்டில் நிலைமையை மேலும் மோசமடையச் செய்வதோடு இனப்பிரச்சினை தீர்வை பின் தள்ளிவிடும்.

ஆகவே பூரணமான சகஜ நிலை ஏற்படும் வரைக்கும் முறையற்ற குடியேற்றங்கள் வாபஸ் பெறப்படும் வரைக்கும் தற்போது இருக்கும் நிலையை தக்க வைத்து, பொதுசன வாக்கெடுப்பினைத் தொடர்ந்து உருவாக்கப்படும் தொகுதி நிர்ணயக்குழு தீர்மானிக்கும் வரை அங்கத்தவர்களின் எண்ணிக்கையை 225 ஆகவே இருக்குமாறு ஆலோசனையை அரசுக்கு வழங்கி இவ்விடயத்தில் முன்யோசனையோடு செயற்பட்டால் பெரிய விளைவுகளைத் தவிர்க்கலாம்- என்றுள்ளது.

(த)

# கொழும்பு - காலிக்கிடையிலான அதிவேக வீதியை திறக்க ஏற்பாடு

கொழும்பு, ஒக. 3

தெற்கின் அதிவேகப் பெருந்தெரு மார்க்கத்தில் கொழும்புக்கும் காலிக்கும் இடையிலான பகுதி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி பாவனைக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த அதிவேகப் பெருந்தெருவின் நிர்மாணத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் மற்றும் சீனா கடனுதவிகளை வழங்கியுள்ளன.

கொட்டாவையிலிருந்து மாத்தறை - கொடகம வரையில் நீளும் தெற்கு அதிவேகப் பெருந்தெரு 126 கிலோ மீற்றர்களைக் கொண்டது

இது தொடர்பாகச் செலவிடப்படும் முழுத் தொகை 638 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். காலியிலிருந்து மாத்தறை வரையில் நீண்டு செல்லும் அதிவேகப் பெருந் தெருவின் எஞ்சிய பகுதியை அடுத்த ஆண்டுக்குள் நிர்மாணித்து முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. (ம-22)

## இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு
### பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடமாகாண சபை
## கேள்விகளுக்கான கோரல்

| | |
|---|---|
| கடன் இலக்கமும் தலைப்பும்: | கடன் -2626 - Sri - முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம், பகுதி C - அடிப்படை சமுதாயத்துக்கான சேவைகளை மேம்படுத்தல் |
| நிதி மூலம்: | இலங்கை அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன்மூலம் |
| கேள்வி சமர்ப்பிக்கும் திகதி: | இறுதித் திகதி 30.08.2011 : பி.ப 2.00 மணி |

| இல. | ஒப்பந்த இல. | மாவட்டம் | வேலையின் பெயர் | கட்டுமானக் காலம் | கேள்விப் பிணையின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1. | CAREP/NPC/ID/NCB/W/8-21(I) | முல்லைத்தீவு | மடவாளசிங்கம் நீர்ப்பாசன அணைக்கட்டு வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் | ரூ.250,000 |
| 2. | CAREP/NPC/ID/NCB/W/8-21(II) | முல்லைத்தீவு | மடவாளசிங்கம் நீர்ப்பாசன வாய்க்கால் வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் | ரூ.300,000 |
| 3. | CAREP/NPC/ID/NCB/W/8-26 (I) | முல்லைத்தீவு | விசுவமடு நீர்ப்பாசன அணைக்கட்டு வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் | ரூ.450,000 |
| 4. | CAREP/NPC/ID/NCB/W/8-26(II) | முல்லைத்தீவு | விசுவமடு நீர்ப்பாசன வாய்க்கால் வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் | ரூ.450,000 |
| 5. | CAREP/NPC/ID/NCB/W/8-22 | முல்லைத்தீவு | உடையார்கட்டு நீர்ப்பாசன அணைக்கட்டுவேலை புனரமைப்பு | 9 மாதங்கள் | ரூ.600,000 |

1. மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக திட்டப் பணிப்பாளர், முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம், நீர்ப்பாசனம், வ.மா./ தலைவர் கருத்திட்ட பெறுகைக்குழு அவர்கள் 05 கட்டுமான வேலைகளுக்கான மூடிய கேள்விகளை கோருகிறார். வேலைகளின் பெயர்கள், கட்டுமானக் காலம், கேள்விப் பிணையின் பெறுமதி என்பன மேலே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.
2. கேள்வியாளர்களுக்கான முதன்மை தகுதிகாண் காரணிகள். கேள்விப்பத்திரத்தினை ஆங்கிலத்தில் பெற்றுக்கொள்வதற்கு கேள்வியாளர்கள் செய்யவேண்டியவை, கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்தல் திறத்தல், கேள்விப்பிணை, கேள்வி விளக்கக்கூட்டம் என்பன தொடர்பான மேலதிக விவரங்களை கேள்வியாளர்கள் 29.07.2011 ஆம் திகதியில் Daily News பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்வியாளர்களுக்கான கோரலை பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ளலாம். அல்லது பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் அறிந்துகொள்ளலாம்.

எந்திரி க.சோ.சிவபாதம்,
திட்டப்பணிப்பாளர்
முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம்
நீர்ப்பாசனத் திணைக்களம், வ.மா.
கச்சேரி ஒழுங்கை, கிளிநொச்சி.
தொலை பேசி இல. 0212285472, தொலை நகல் இல: 0212285440
மின் அஞ்சல் : npirri@sltnet.lk
(C/2361)

## தேவை

சாறி வியாபாரத்தில் அனுபவமுள்ள (ஆண்) சேல்ஸ்மென் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.

**நல்லி சில்க்ஸ்**
*மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.*

## மரண அறிவித்தல்

### முத்தையா மகாலிங்கம் (கிளி)

(உரிமையாளர் நித்தி லைற்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தச்சன்தோப்பு, கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மகாலிங்கம் (கிளி) 26.07.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் முத்தையா - அம்மாப்பிள்ளை தம்பதியரின் இரண்டாவது மகனும் இராசையா - கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் நிசாந்தினி, நீயூட்டன், உதயகீதா, துஷ்யந்தி, நிவாஸ், தயாபரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாகரன் (சுதா)வின் அன்பு மாமனும் துலக்ஷாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2011) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்துக்கு (சீயாக்காடு) தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணசேகரம் (தம்பி),
நியூட்டன் (மகன்),
சிவா (மச்சான்).

தச்சன்தோப்பு,
கைதடி. (6450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சர்வதேசம் தலையில் குட்டாதிருப்பதற்கு....

''மனிதாபிமான நடவடிக்கை: உண்மைப் பகுப்பாய்வு ஜூலை 2006 - மே 2009'' என்ற அறிக்கையை அரசாங்கம் நேற்றுமுன்தினம் கொழும்பில் வெளியிட்டது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டு வைக்க, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அதனைப் பெற்றுக்கொண்டார்.

வன்னியில் நடைபெற்ற போரின்போது போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன, மனித உரிமைகள் மீறப்பட்டன என்று ஐ.நா. நிபுணர் குழு தெரிவித்த குற்றச்சாட்டுக்களை மறுப்பதே - அரசின் வாதங்களை முன்வைப்பதே - இந்த அறிக்கையின் பிரதான நோக்கம். அத்தோடு சனல்-4 வெளியிட்ட காணொளிகள் வேண்டுமென்றே போலியாக உருவாக்கப்பட்டவை என்று உலகத்துக்கு நிறுவுவதும் இன்னொரு குறியாகும்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து மக்களை மீட்பதற்காக மனிதாபிமான நடவடிக்கை ஒன்று வன்னியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 2008 ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி அரசினால் அறிவிக்கப்பட்டிருந்தமை ஞாபகத்துக்கு வருகின்றது.

பொதுமக்களுக்கு உயிராபத்து ஏற்படக் கூடாது என்பதற்காக மோதல் தவிர்ப்புப் பகுதிகளை நிர்ணயித்து அறிவித்து, குறிப்பிட்ட பகுதிகளுக்குச் செல்லுமாறு அவர்கள் கேட்கப்பட்டனர்.

அதற்கடுத்து விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் முன்னேறாமல் தடுப்பதற்காக நவீன ரகக் குண்டு வீச்சுக்களை வான்படை நடத்தியது. இத்தகைய தாக்குதல்கள் நடைபெற்றவேளை போர்ப் பிரதேசத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள் எதுவுமோ ஏனைய சர்வதேசத் தொண்டர் அமைப்புக்களோ அங்கு பிரசன்னமாக நிலைகொண்டிருக்கவில்லை. ஏற்கனவே வெளியேற்றப்பட்டுவிட்டன.

பொதுமக்களின் மரணங்களுக்கு அவர்களின் உறவுகளே சாட்சிகளாக நேரிட்டது. அதனால் போரின்போது பொதுமக்கள் மரணித்ததற்குப் பெறுமதியான சாட்சிகள் எதுவும் இல்லாத வெற்றுவெளி ஒன்று உருவாக்கப்பட்டது.

அதனால், போரில் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்று பழுக்கக் காய்ச்சிய இரும்பு போன்ற ஒரு நிலைமை உருவாக்கப்பட்டது. இத்தகைய புறக்காரணிகளை வைத்துப் போரின்போது பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்ற வாய்ப்பாடு அரசினால் நிரந்தரமாக்கப்பட்டது.

ஆயினும் 40,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையும், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் போரில் உயிரிழந்தார்கள் என்று மனித உரிமை அமைப்புக்களும் எடுத்துக் காட்டின.

எனினும் அப்போதெல்லாம் அரசின் மனிதாபிமான நடவடிக்கையின் போது பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்று அரச தரப்புச் சாதித்து வந்தது.

அதன்பின்னரான சில காலஇடைவெளியில், போரின்போது ஏழாயிரம் மக்கள் மட்டுமே மரணமானார்கள் என்ற சிறிய கணக்கு அரசு தரப்பில் வெளிக்கிளம்பியது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், ஐ.நா.நிபுணர் குழு அறிக்கையை மறுதலிக்கும் வகையில், அரசினால் தயாரிக்கப்பட்ட உண்மைப் பகுப்பாய்வு அறிக்கை வெளியீட்டு நிகழ்வில் வைத்து, போரின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதனை பாதுகாப்புச் செயலாளர் ஒப்புக்கொண்டுள்ளார். அதுமட்டுமன்றி வெளிநாடுகளுக்கு இலங்கை அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் பகுப்பாய்வு அறிக்கையிலும் அது வெள்ளையில் கறுப்பாகப் பதியப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் மாவிலாறு அணைக்கட்டைத் திறந்து சிங்கள விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட உதவுவதற்காக அரசாங்கம் ஆரம்பித்த ''மிஷன் வாட்டர் செட்'' படை நடவடிக்கை, பின்னர் மனிதாபிமான நடவடிக்கையாகப் பெயர் சூட்டப்பட்டது. பின்னர் அதற்கு தற்காப்பு நடவடிக்கையாகவும் நாமகரணம் செய்யப்பட்டது.

வன்னியில் நடத்தப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையின்போது கொத்துக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக களமுனைச் செய்திகள் வெளிவந்தபோதிலும் அரசாங்கம் அவற்றை முற்றாக மறுத்தது.

இத்தகைய முன்-பின்னணிகளில் வன்னிப் போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பது அரசு தயாரித்த, தன்னைக் காப்பாற்ற எழுத்தில் வடித்த ''ஒப்புதல் வாக்குமூலத்தின்'' ஊடாக வெளியே வந்துள்ளது.

இதேவேளை, எவரும் எங்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதையோ, எம்மை ஓரங்கட்டுவதையோ நாங்கள் விரும்புவதில்லை. இலங்கை மீது பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவரப் போவதாகக் கூறி எவரும் எம்மை வீணாக அச்சுறுத்தத் தேவையில்லை - என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், உண்மைப் பகுப்பாய்வு அறிக்கையைப் பெற்றுக்கொண்டபின்னர் தெரிவித்திருக்கின்றார்.

மறைக்க முயன்ற பெரும் உண்மையை ஒருவர் ஒப்புக்கொண்ட அதே வேளை, இன்னொருவர் உலக நாடுகளுடன் வலுச் சண்டைக்குப் போகும் பாங்கில் பொருமியுள்ளார்.

சர்வதேசத்தை அரவணைத்துக் கொள்ளாமல் தனித்து நின்று இயங்க முடியாது, முன்னேற முடியாது, வளர்ச்சி காண இயலாது என்பதனை உணரும்வரை, தாம் விட்ட தவறுகளை ஒப்புக்கொள்ளும் தாராள மனம் இலங்கை அரசியல்வாதிகளுக்கு வரும்வரை, பின்விளைவுகள் தொடரவே செய்யும்.

நாட்டின் இனசமத்துவத்தையும் சமசனநாயக உரிமைகளையும் நிலைநாட்டும் நல்லெண்ணம் தெற்கின் அரசியல் தலைவர்களிடம் உதிக்கும் காலம் எப்போது வரும், வளரும்? அப்போதுதான் சர்வதேசம் எமது தலையில் குட்டுவதற்கு முனையாது என்ற தாற்பரியத்தை தெற்கின் அரசியல்தலைவர்கள் எப்போது உணரப்போகிறார்களோ?!

# நல்லூர் கந்தனுக்கு நாளை கொடியேற்றம்



யாழ்ப்பாணம், ஒக.3

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 25 நாள்களுக்கு திருவிழா இடம்பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை விசேட பூசை, அபிசேகங்கள் இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து திருவிழா ஆரம்பமாகி 25 தினங்கள் இடம்பெறும்.

நல்லூர் ஆலயத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. அத்துடன் பக்தர்களின் நலன் கருதி குடிதண்ணீர், சுகாதார வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நல்லூர் ஆலய வீதியினூடான போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆலய வீதியில் விசேட முதலுதவிச் சிகிச்சைப் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நல்லூர் உற்சவகாலத்தின் போது தமிழ் பொலிஸார் கடமையில் ஈடுபடவுள்ளனர். அத்துடன் ஆலயத்தின் வீதிகளில் கண்காணிப்பு வீடியோக் கமராக்கள் பொருத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நல்லூர் ஆலய முன்வீதி, பின்வீதி, அரசடி வீதி ஆகியவற்றில் அலங்காரப் பந்தல்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பெருந் திருவிழா வில் இம்முறை ஏராளமானோர் வந்து கொள்வார்கள் என்று எதிர்க்கப்படுகின்றது. (த-15-26)

# நல்லூர் உற்சவ காலத்தில் சுதேச மருத்துவ சேவைகள்

## இலைக்கஞ்சி, நன்னாரிப் பானமும் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக.3

நல்லூர் கந்தன் உற்சவகாலத்தில் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள வழிகாட்டலில் பக்தர்களுக்கு இலவச மருத்துவ முகாமும் இலைக்கஞ்சி, நன்னாரி பானம் விநியோ்கமும் நடைபெறவுள்ளன.

இலவச மருத்துவ முகாமானது யாழ்.மாநகர சபையின் சுதேச மருத்துவப் பிரிவு இயங்கும் நேரம் தவிர்ந்த நேரங்களில் திங்கள் தொடக்கம் வெள்ளிவரை காலை 7 மணி தொடக்கம் 8.30 மணிவரையும், மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரையும், சனிக்கிழமை பி.ப 1 மணி தொடக்கம் 6 மணிவரையும், ஞாயிறு காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையும் நடைபெறும்.

அதுபோன்று காலைவேளைகளில் மு.ப. 10 மணிவரை இலைக்கஞ்சி விநியோகமும், மாலையில் நன்னாரி பான விநியோகமும் இடம்பெறவுள்ளது என மாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் அறிவித்துள்ளார். (த)

# வீதி அகலிப்புப் பணிகள் அனைத்தும் இரண்டரை வருடங்களில் நிறைவுறும்

## வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர்

யாழ்ப்பாணம், ஒக. 3

யாழ்.மாவட்டத்தில் தற்போது 4 வீதிகள் அகலமாக்கி புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பணிகள் இன்னும் இரண்டரை வருடங்களில் முடிவடையும்.

இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார். வீதி அபிவிருத்திப் பணிகளின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமைவருமாறு:

யாழ்.-பருத்தித்துறை வீதியின் புனரமைப்பு பணிகள் தற்போது மெதுவாக இடம்பெற்று வருகின்றன. இதை நாம் அவதானித் துள்ளோம். இந்த விடயம் தொடர்பில் குறித்த பணிகளில் ஈடுபட்டு வரும் ஒப்பந்த நிறுவனங்களிடமும் தெரியப்படுத்தியுள்ளோம். எனவே உரிய காலப்பகுதிக்குள் இந்தப் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போது யாழ்.-பருத்தித்துறை வீதி, யாழ்.-காங்கேசன்துறைவீதி, யாழ்.- பலாலி வீதி, புத்தூர்-மீசாலைவீதி ஆகிய நான்கும் தற்போது அகலிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் இன்னும் இரண்டரை வருடங்களில் முடிவடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-15)

# இந்தியக் கலைஞர்களின் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 3

இந்திய சமகால கலைஞர்கள் நால்வரின் கலைக்கண்காட்சி ஒன்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நாளை 4 ஆம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கண்காட்சியை நாளை முற்பகல் 11 மணிக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி திறந்து வைப்பார்.

இயற்கையின் நான்கு வித அம்சங்களை இக்கலைஞர்கள் வர்ணங்கள், ஒலிகள், கோலங்கள் மற்றும் மனிதத்துவ சூழல் போன்றவற்றால் வெளிப்படுத்துவதாக இந்த கலைக்காட்சி நிகழ்ச்சி அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'' ஹார்மனி அன் நிதம்'' (இசைகளும் இசைவும் ) என்ற தலைப்பில் இடம்பெறும் இந்த நிகழ்வை சந்தியாசிங், சோனிக்கா அகர்வால், டீப்பா செத் பாண்டு மற்றும் ரூச்சி கோயல் கவுரா ஆகிய நான்கு இந்திய கலைஞர்கள் வழங்குகிறார்கள். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தைக் காட்டிக் கொடுத்தவர் சங்கிலியன் சிலையைத் திறக்கிறார்

## அதனால் நிகழ்வை புறக்கணிக்கிறது மாநகர சபை எதிர்க்கட்சி

யாழ்ப்பாணம் ஒக. 3

தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து அரசியல் பிழைப்பு நடத்தி வரும் ஒருவர் சுதந்திர வீரன் சங்கிலியனின் சிலையைத் திறந்து வைப்பதை மானமுள்ள தமிழன் எவனும் விரும்பமாட்டான். அதனால் இந்தத் திறப்பு விழாவை நாம் அடியோடு புறக்கணிக்கிறோம்.

இவ்வாறு யாழ். மாநகர சபை எதிர்க்கட்சி உறுப்பினர் 7 பேர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:

யாழ்ப்பாண இராஜதானியின் கடைசி மன்னனான சங்கிலியனின் உருவச் சிலையானது புனரமைக்கப்பட்டு இன்று திரை நீக்கம் செய்யப்படவிருப்பது யாவரும்அறிந்ததே.

இதற்கான நினைவுக் கல்லில் உள்ள வாக்கியங்களின் உள்ளடக்கமும் இதைத் திரைநீக்கம் செய்து வைப்பவர் குறித்தும் எமக்கு உடன்பாடாக இல்லாத படியினால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்ந்த மாநகர சபை உறுப்பினராகிய நாம் இந்த நிகழ்வைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம்.

இந்தச் சிலையானது ஆரம்பத்தில் முன்னாள் மாநகர முதல்வர் அல்பிறட் துரையப்பாவின் தலைமையிலான நிர்வாகத்தின் காலத்திலேயே வைக்கப்பட்டது. பின்னர் ஆயுதப்படையினரின் வன்முறையின் மூலம் இது இடித்து வீழ்த்தப்பட்டது. பின்னர் இராணுவத்தினர் இதைப் புனரமைத்தனர். ஆனாலும் இதன் உருவம் சரியாக அமைக்கப்படவில்லையெனப் பலராலும் கூறப்பட்டு வந்த நிலையில் மாநகர சபை இதைப் புனரமைக்க முன்வந்தபோது நாமும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம்.

ஆனால் தற்போது வைக்கப்படும் நினைவுக் கல்லில் இதன் முன்னைய வரலாறு நீக்கப்பட்டு தற்போதுதான் புதிதாக வைப்பதான தோற்றப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சங்கிலி மன்னன் போத்துக்கேயருடனான போரில் ஈடுபட்டு அவர்களைத் தோற்கடிக்க முடியாத நிலையில் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து மறைந்திருந்தபோது காட்டிக் கொடுக்கப்பட்டு பிடிபட்டு சிரச்சேதம் செய்யப்பட்டதுதான் வரலாறு.

இங்கும் தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு மாறாக எமது இனத்தைக் காட்டிக் கொடுத்து அரசியல் பிழைப்பு நடத்திவரும் ஒருவரால் சுதந்திர வீரன் சங்கிலியனின் உருவச் சிலையைத் திறந்து வைப்பதை மானமுள்ள ஒரு தமிழனும் விரும்பமாட்டான். ஆகவே நாம் இந்தச் சிலைத் திறப்பு விழாவை அடியோடு புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம்.

ஆகவே மறத்தமிழ் வீர இனத்தின் மக்களாகிய நீங்களும் இந்த நிகழ்வை புறக்கணிக்குமாறு தமிழினத்தின்பேரால் வேண்டிக் கொள்கின்றோம்.- என்றுள்ளது. (த)

# பாஷையூர் இறைச்சிக்கடை சேதம் அடைந்த நிலையில்



யாழ்ப்பாணம், ஒக.3

பாஷையூர் சந்தையில் உள்ள இரண்டு மாட்டிறைச்சிக் கடைகளில் ஒன்றின் கூரைப்பகுதி மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

எவ்வித திருத்த வேலைகளையும் செய்யாமல் யாழ். மாநகர சபை சேதமுற்றுள்ள இந்தக் கடையை வாடகைக்கு வழங்கியுள்ளது.

கூரை இன்றிப் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும் இந்தக் கடையில் இறைச்சி விற்பனை செய்வதற்கான சுகாதார வசதிகள் எதுவும் இல்லை.

இவ்வாறான நிலையிலும் அங்கு இறைச்சி விற்பனை நடைபெற்று வருகின்றது. இதனை உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-23)

# சகல கூட்டுறவுப் பணியாளருக்கும் உலக உணவுத் திட்டத்தின் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக. 3

யாழ்.குடாநாட்டில் நலிவுற்றுள்ள பலநோக்குக் கூட்டறவுச் சங்கங்களைப் பலப்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள பயிற்சி வகுப்பு சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் இடம்பெறும் எனக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந் தவநாதன் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

இந்தப் பயிற்சி வகுப்பு முதலில் கிளை முகாமையாளர்களுக்கும், பின்னர் சகல பொது முகாமையாளர்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் நடத்தப்படும்.

இன்று புதன்கிழமை நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் இடம்பெறும் பயிற்சி வகுப்பில் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

நாளை வியாழக்கிழமை காரைநகர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை முகாமையாளர்களுக்கான பயிற்சி காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் என்றார். (த-26)

# சகல சங்கங்களின் பொதுமுகாமையாளர்களுக்கான கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஒக.3

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்களுக்குமான விசேட கூட்டம் ஒன்று இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் சகல பொது முகாமையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கேட்டுள்ளார். (த-26)


# பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ-து)

## பதிவு இலக்கமும் திகதியும் :-PA/48,12-02-1971

# அறிவித்தல்

## கிளைக் குழுக்களைத் தெரிவு செய்தல் 06.08.2011

வடக்கு,கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-16 ஆம் திகதிய 1028 /6 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு, கிழக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இதற்கு அமைய குமாரசிங்கம் அருந்தவநாதன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகிய நான் 2009 .04.08 ஆம் திகதிய 1596/17ம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத்தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக்கூட்டங்கள் பின்வரும் கால அட்ட வணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்கங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

* இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களிற்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
* கிளைப்பொதுச் சபைக்கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர், 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
* தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இதில் குறைந்தது இருவராவது 18-35 வயதிற்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் அவ்வத்தொகைகளிற்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
* இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
* தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச்செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
* தகுதியுள்ள கிளைப்பொதுச்சபை அங்கத்தவரிற்கு கிளைக்குழுத்தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொண்டு இக்கிளை பொதுச் சபை நடைபெறும் திகதியில் தங்களிற்குரிய கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும்: 06.08.2011 சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு.

| தொ.இ | கிளை.இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 01. | 01 | மட்டுவில் நாடு | ந.நாவேந்தன் | பூநகரி மகா வித்தியாலயம் |
| 02. | 02 | வில்லடி | இ.விஜயகுமார் | பிரதேச செயலகம், பூநகரி. |
| 03 | 03 | ஞானிமடம் | ஜெ.சஞ்சீவ் | ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. |
| 04. | 04 | செட்டியாகுறிச்சி | வ.ரஞ்சன் | ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. |
| 05. | 05. | கறுக்காய் தீவு | க.செல்வகுமார் | கறுக்காய் தீவு மகாவித்தியாலம். |
| 06. | 06 | தம்பிராய் | உ.ஜெயந்தபிரகாஸ் | பொதுநோக்கு மண்டபம்,தம்பிராய். |
| 07. | 07. | செல்விபுரம் | இ. ஜெகதீபன் | செல்லியாதீவு அரசினர் தமிழ்கலவன் பாடசாலை. |
| 08 | 08. | நல்லூர் | சி.சிவாகரன் | நல்லூர் மகாவித்தியாலயம் |
| 09. | 09. | கௌதாரிமுனை | இ.ரஜீவ்ரதன் | வினாசியோடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. |
| 10. | 10 | கிராஞ்சி | க.உதயரூபன் | கிராஞ்சி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை. |
| 11. | 11. | வேரவில் | ப.தவப்பிரியன் | வேரவில் மகாவித்தியாலயம். |
| 12 | 12. | வலைப்பாடு | சோ.கிருஸ்ணகுமார் | வலைப்பாடு றோமன் கத்தோலிக்க பாடசாலை. |
| 13 | 13. | முழங்காவில் | வி.சிவபாலன் | முழங்காவில் மகா வித்தியாலயம். |
| 14. | 14. | இரணைதீவு | இ.சுதன் | இரணைதீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை. |
| 15 | 15. | பல்லவராயன்கட்டு சோலை | செல்வி க.கார்த்திகா | பல்லவராயன்கட்டு சோலை, அ.த.க.பாடசாலை. |
| 16. | 16. | நாச்சிக்குடா | வி.சிறீஸ்கந்தராசா | நாச்சிக்குடா கிளை முன்றல். |
| 17. | 18. | ஜெயபுரம் | ரி.என்.ராஜா | ஜெயபுரம் மகாவித்தியாலயம். |
| 18. | 20. | குமுழமுனை | [illegible] | குமுழமுனை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை. |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனை,
கிளிநொச்சி. 03.08.2011.

(6460)

ஒப்பம்: வி.கே.அருந்தவநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.


6460

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர எல்லைக்குள் பெரு வீதிகளுக்கு 'காப்பெற்' இடும் பணிகள் நிறைவு

யாழ்ப்பாணம், ஒக.3

யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீதிகள் அனைத்தும் 'காப்பெற்' வீதிகளாக்கும் பணிகள் முற்றாக நிறைவடைந்துள்ளன. இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியிலாளர் லி.சுதாகர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த வருடம் நவம்பர் மாதம் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 6 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு 'காப்பெற்' வீதிகளாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 18 கிலோமீற்றர் நீளமான வீதிகள் 'காப்பெற்' வீதிகளாக்கப்பட்டுள்ளன. இதற்காக 210 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

மேலும் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகள் வீதி அகலிப்பின் போது 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்படும் -என்றார். (த-15)

# பெண்கள் அமைப்புகளுக்கு பழ மரக்கன்று விநியோகம்

தென்மராட்சி, ஒக. 3

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 10 பெண்கள் அமைப்புக்களுக்குப் பழ மரங்கன்றுகள் பிரதேச செயலகத்தில் விநியோகிக்கப்பட்டன.

பெண்கள் அமைப்பினரை வீட்டுத் தோட்டச் செய்கையில் ஊக்குவிக்கப் பல்வேறு பழ மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

மா, பலா, தோடை, தேசி, மாதுளை, ஈரப்பலா, பப்பாளி, கற்பூரவள்ளி, கோப்பி, ஜம்பு ஆகிய மரக்கன்றுகளும் விவசாய உபகரணங்களும் உர வகைகளும் விநியோகிக்கப்பட்டன.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்பட்ட இவற்றை உதவிப் பிரதேச செயலர் செல்வி நவரத்தினம் றஞ்சனா பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் கையளித்தார். (த-207)

# உலக உணவுத் திட்டத்தின்கீழ் நிவாரணம் சிறப்பாக விநியோகம்

## அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 3

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டட மக்களுக்கான நிவாரண விநியோகம் சிறந்த முறையில் நடைபெறுவதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

உலக உணவுத் திட்டத்தால் விநியோகிக்கப்படும் நிவாரணம் தொடர்பாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களுக்கு நடத்தப்படும் பயிற்சி வகுப்பை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு உலக உணவு நிறுவனம் சிறப்பான முறையில் தரமான உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றது.

கிளை முகாமையாளர்களும் மிக அர்ப்பணிப்புடன் இந்தப் பொருள்கள் மக்களுக்குச் சென்றடையக்கூடிய வகையில் விநியோகத்தை மேற்கொள்கின்றனர் - என்றார். (த-26)

## ஆரம்பமானது...



அபிவிருத்திப் பணி: மக்கள் மீளக்குடியர அனுமதிக்கப்பட்ட அரியாலை ஜே/ 90 கிராம அலுவலர் பிரிவில் இந்திய அரசின் வீடமைப்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (த-7)

# சங்கிலியன் சிலை திறப்புக்காக வாகனப் போக்குவரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக.3

சங்கிலியன் சிலை திறப்பு விழா நிகழ்வையொட்டி இன்று புதன்கிழமை காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணி வரை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாகச் செல்லும் சகல வாகனங்களுக்கும் வேறு பாதை மார்க்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சகல வாகனங்களும் நல்லூரி கோயில் வீதி வழியாக முடமாவடிச் சந்தியில் திரும்பி சட்டநாதர் வீதி வழியாகப் பருத்தித்துறை வீதிக்குச் சென்று தமது பயணத்தைத் தொடரும். பருத்தித்துறையில் இருந்து யாழ்.நோக்கிவரும் வாகனங்களும் இதே மார்க்கத்தில் தமது பயணத்தை தொடரும் என்று யாழ் மாநகர முதல்வர் அறிவித்துள்ளார். (த-7)

# கொட்டுக் கிணற்றடி பிள்ளையார் ஆலயம் புனரமைப்பு

நாவற்குழி, ஒக.3

அரியாலை கிழக்கு கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் கோயிலைப் புனரமைக்கும் பணிகளை மீள்குடியேறிய மக்கள் முன்னெடுத்துள்ளனர்.

1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வைத் தொடர்ந்து கைவிடப்பட்ட இப் பிரதேசத்தில் அண்மையில் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

காடு மண்டிப்போயிருந்த இந்தக் கோயிலின் சுற்றாடல் துப்புரவு செய்யப்பட்டுப் புனரமைப்புப் பணிகள் வேகமாக இடம்பெற்றுவருகின்றன. கோயில் கட்டுமானப் பணிகளும் வேகமாக நடைபெறுகிறது.

நீண்டகால வரலாற்றைக் கொண்ட இக்கோயிலின் புனரமைப்புப் பணிகளுக்கு இங்கு குடியேறிய மக்கள் உதவியளித்து வருகின்றனர். (த-121)

# நள்ளிரவில் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையரில் ஒருவர் சிக்கினார்

## சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

சண்டிலிப்பாய், ஒக.3

நள்ளிரவு நேரம் வாளுடன் வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியைக் கொள்ளையடிக்க முற்பட்ட இருவரில் ஒருவர் வகையாக மாட்டிக் கொண்டார். அங்கிருந்தவர்கள் இவரை மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

திருடனைப் பிடிக்கமுற்பட்ட போது வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தத் துணிகரமான சம்பவம் சுன்னாகம் பொலிஸ் பகுதியிலுள்ள உடுவில் தெற்கு, பாலா வோடை என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது. இது பற்றி மேலும் கூறப்படுவதாவது:

கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு மரணமான ஒரு பெண்ணின் வீட்டுக்கிருத்தியத்துக்குத் தேவையான பலகாரங்களைப் பெண் ஒருவர் செய்துகொண்டிருந்தார். இதன் போது நள்ளிரவு 12 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வாளுடன் வந்த இருவர் வீட்டுக்குள் சென்று அங்கு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பெண் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை கொள்ளையடிக்க முற்பட்டனர். அதன் போது ஒருவர் வகையாக மாட்டிக் கொண்டார். அங்கிருந்தவர்கள் இவரைப் பிடித்துச் சுன்னாகம் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

கொள்ளையர்களைப் பிடிக்க முற்பட்ட போது வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுபற்றி விசாரணையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் தப்பியோடி கொள்ளையனைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். (த-115-86)

# கிராம மட்டத்தில் நாற்று மேடைகள் அமைப்பதற்கான பயிற்சிப் பட்டறை



யாழ்ப்பாணம், ஒக.3

''திவிநெகும'' தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கிராமமட்டத்தில் 14 ஆயிரம் நாற்று மேடைமையங்கள் அமைப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை நேற்று செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் பேராதனைப் பல்கலைக்கழக விவசாயபீடம் நடத்திய ஒரு நாள் பயிற்சிப்பட்டறையில் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மாகாண பிரதித்திட்ட பணிப்பாளர் கா.சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.பிரதி விவசாயப்பணிப்பாளர் எஸ்.சிவகுமார் உரையாற்றினார். கிராம மட்டத்தில் விவசாய உற்பத்திக்கான நல்லரக விதைகளை உருவாக்குவது குறித்து அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பயிற்சிகளை வழங்குவதே இதன் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# மக்கள் வங்கி ஓய்வூதியச் சங்கத்தின் கிளைகள் மாவட்டங்கள் தோறும்

யாழ்ப்பாணம், ஒக.3

மக்கள் வங்கியின் ஓய்வூதியர் சங்கத்தின் கிளைகளை மாவட்ட ரீதியாக அமைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் சேவையில் பொன்விழாக் கண்டுள்ள மக்கள் வங்கி கடந்த 23 வருடங்களாக ஓய்வூதியர் சங்கக் கிளைகளை அமைத்து ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்களுக்குப் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட மக்கள் வங்கியின் ஓய்வூதியர் சங்கம் ஊழிர்களின் சேவையைக் கருத்தில் கொண்டு மாவட்ட ரீதியாக இவைகளை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

இந்தக் கிளைகள் ஊடாக ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்களுக்கு மரணக் கொடுப்பனவு உட்பட ஏனைய கொடுப்பனவுகளையும் தாய் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

யுத்த காலத்தில் பல இடர்களுக்கு மத்தியில் சேவையாற்றிய வங்கி ஊழியர்கள் இதன் மூலம் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் தேடப்பட்ட இலங்கை குற்றவாளி அமெரிக்க சிறையில்

கனடாவில் போர்க்குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த குத்துச்சண்டை வீரரான இளந்தரிதேவஹே குலதுங்க அமெரிக்க மியாமி சிறைச் சாலையில் சிறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவுக்குள் போர்க் குற்றவாளிகள் ஊடுருவியிருக்கலாம் என்று கனேடிய எல்லைப் பாதுகாப்புச் சேவை முகவர் அமைப்பு அமெரிக்காவுக்கு அறிவுறுத்தியிருந்ததை அடுத்து, இளந்தரி தேவஹே என்பவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அவரை கனடாவுக்கு திருப்பி அனுப்பக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் 2011/2012 ஆம் ஆண்டுக்கான 14 ஆவது பட்டய விழா மற்றும்15ஆவது பதவியேற்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட இரண்டாவது ஆளுநர் 306 B1லயன் றஞ்சித் பெனாண்டோ உட்பட விருந்தினர்கள் மானிப்பாய் செண். அந்தோனியார் ஆலயத்திலிருந்து முன்பள்ளி மாணவர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்படுகின்றனர். (4)

# மலேசியாவுக்கு அனுப்பப்படும் அகதிகள் பயணக்காணொளி விரைவில் வெளியீடு

## ஆஸி.குடிவரவுத்துறை அமைச்சர் தகவல்

மலேசியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆஸ்திரேலியாவிலிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ள அகதிகளின் பயணக் காணொளியை ஆஸ்திரேலியா வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

பாதுகாப்பற்ற முறையில் பயணங்களை மேற்கொண்டு சட்ட விரோதமாக தஞ்சம் கோருபவர்களின் மனநிலையை சோர்வடையச் செய்யும் முயற்சியாக இந்தக் காணொளி யூடியுப்பில் (youtube) வெளியிடப்படவுள்ளது.

அகதிகளை பரஸ்பரம் பரிமாறுகின்ற ஒப்பந்தத்தில் ஆஸ்திரேலியா - மலேசியா ஆகிய நாடுகள் கடந்த 25 ஆம் திகதி கைச்சாத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின்படி அடுத்து வரும் நான்காண்டுகள் வரை 800 அரசியல் தஞ்சக்கோரிக்கையாளர்களை மலேசியாவிடம் ஆஸ்திரேலியா கையளிக்கும். அத்துடன் மலேசியாவில் உள்ள 4000 அகதிகள் ஆஸ்திரேலியாவில் குடியேற்றப்படுவர்.

இவ்வாறான காணொளிகளை வெளியிடும் போது ஆள்கடத்தல் காரர்களுக் கும், அவர்கள் மூலம் சட்ட விரோதமாக ஆஸ்திரேலியாவுக் குள் நுழைய முற்படுபவர்களுக் கும் இது முக்கியம் வாய்ந்த விடயமாகஅமையும். இதன்மூலம்நியாயமான முறையில் அரசின் புதிய கொள்கைகளை மிகத் தெளிவாக விளக்குகிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# இலங்கையின் குறிப்பிட்ட இடங்களில் கம்பியில்லா முறையில் இணையச் சேவை

இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட சில இடங்கள் கம்பியில்லா முறையில் இணையச் சேவையை பெற்றுக் கொள்ளக்கூடிய வை-பை (WiFi) வலயங்களாக மாற்றப்படவுள்ளதாக இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளதாக சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வை-பைவலயங்களாகமாற்றப்படக்கூடிய இடங்கள் ஏற்கெனவே இனங்காணப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவை வை-பை வலயங்களாக செயற்படவுள்ளன.

அதிகமாக ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், அரச கட்டடங்கள், பாடசாலைகள் என்பவை இதனுள் உள்ளடக்கப்படவுள்ளன.

கொழும்பு நகரம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்புக்கான வீதிகள், பேருவளை முதல் ஹம்பாந்தோட்டை வரையான கரையோரப் பகுதி, அருகம்பை திட்டத்துக்குள் உள்ளடக்கப்படுவதற்கு இனம் காணப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகள் ஈர்க்கப்படுவதுடன் உள்ளூர் மக்கள் பிரயாணம் செய்யும் போது இணையத்தைப் பயன்ப டுத்தவும் முடியும்.

எனினும் மின்னஞ்சல்களை வேகமாகப் பெற்றுக்கொள்ள உதவுவதே இந்தத்திட்டத்தின் பிரதான இலக்கு எனவும் பெரிய கோப்புகள் ஆவணங்களை தரவிறக்கம் செய்து மட்டுப்படுத்தப்படும் எனவும் அதில் குறிப்பிடப்படுகிறது. (வ)

## தேவை

1. முன் அனுபவம் வாய்ந்த 50 வயதுக்குட்பட்ட உதவித் தொழில் மேற்பார்வையாளர் (Asst. Works Supervisor) தேவை. கட்டட வேலைகள் தொடர்பான முன் அனுபவம் விரும்பத்தக்கது.
2. தோட்டப்பணியாளர் (Labourer) 08.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

அதிபர்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## தேவை

இரண்டு பெண்கள் ஒருவருடம் தங்குவதற்கு இரண்டு படுக்கை அறை கொண்ட சிறிய வீடு அல்லது ANNEX யாழ்.நகருக்கு 3 அல்லது 4 கிலோ மீற்றர் தூரத்துக் கிடையில் தேவை.

தொடர்பு: மேரி டேவிற்
0214920011
0779147154

# இலங்கை வங்கிக் கிளை கொடிகாமத்தில் திறப்பு

இலங்கை வங்கியின் விரிவாக்கல் சேவை நிலையம் கொடிகாமத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணிக்கு புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருத்தினராகக் கலந்து கொண்ட வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.சி.டி. சுமணசிறியா நடா வெட்டி திறந்து வைத்தார்.

பிரதம அதிதிகளாக இலங்கை வங்கியின் வடபகுதியின் அதிகாரிகள் மற்றும் இளைப்பாறிய வங்கி உத்தியோகத்தர்கள் வர்த்தக, பிரமுகர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-207-122)

## மனம் கனிந்த நன்றிகள்



வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கான தேர்தலில் 2011 இடையூறுகளுக்கு மத்தியிலும் சலுகைகளைப் புறந்தள்ளி இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இத் தேர்தலில் நான்காம் இலக்கத்துக்கு வாக்களித்து என்னை நான்காவது விருப்பு வாக்குப் பெற்று வெற்றி பெறச் செய்த அனைவருக்கும் எனது மனங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் எமது கட்சியின் சக உறுப்பினர்களுடன் சேர்ந்து தங்கள் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற உழைப்பேன் என உறுதி கூறுகிறேன்.

(6448) என்றும் நன்றியுடன் இ.கந்தசாமி (மெம்பர்)

SRM UNIVERSITY
INDIA No.1
WALK IN FOR SPOT ADMISSION 2011
INTERNATIONAL AND NRI STUDENTS

B.Tech | M.Tech | M.Arch | M.S | M.B.A |
Science & Humanities - BBA | MCA | M.Ed | M. Sc |
Hotel Management | Medicine & Health Sciences - M.B.B.S| B.D.S
B. Pharm| BASLP | B. Sc Optometry | Ph. D

For Course and Other details visit www.srmuniv.ac.in

CONTACT:
The Principal Coordinator, Office of International Relations, SRM University, SRM Nagar, Kattankulathur - 603 203, Tamil Nadu, India.
Tel : +91 44 2745 2270, +91 90031 77786,
Fax : +91 44 2745 6701, +91 44 2745 2343
E-mail : admissions@ir.srmuniv.ac.in
pcoordinator@ir.srmuniv.ac.in

HOW TO APPLY: You can apply (1) Online by visiting www.srmuniv.ac.in (2) Download the application from www.srmuniv.ac.in (3) Write to the Principal Coordinator with a DD for US$ 50 or ₹ 2500 drawn on 'SRMIST' payable at Chennai

IMPORTANT DATES
Last date for payment of full Tuition and other Fees: 20th August 2011

For Spot Admissions:
Meet Mr. S. VENKATA NARAYANAN from SRM, India
To Meet in Jaffna between
3rd - 5th August, 2011
Contact : 0711323582/0714737904
India Contact No : +91 9841063724
Email Address : venkat@srmlt.in

SRM UNIVERSITY
(Under section 3 of UGC Act 1956)

CAMPUSES: CHENNAI | DELHI
ENGINEERING | MEDICNE & HEALTH SCIENCES | MANAGEMENT | SCIENCE AND HUMANITIES

INVITING BUSINESS PARTNERS
OVER 225 CENTRES ACROSS INDIA
ALL OVER SRILANKA

SRM, A Pioneer in Education in India

- Legacy for over 4 decades in Education
- Technology Competence
- Course Ware & Certification
- Academics & Operational Support
- Professional Business Guidance
- Optimum Investment & Good Returns

SRM Learning Tree (P) Ltd. - Initiative
ISO 9001 : 2008 Certified Company

SRM Infotech COMPUTER EDUCATION www.srminfotech.com
SRM speakEng Spoken English & Skills Development Training www.srmspeakeng.com
SRM Technokrat HR CONSULTING SERVICES www.srmjobs.com

SRM, The Indian Brand to Reckon with
Corporate Solutions | Institutional tie-ups | Govt. Projects
SW Development | Manpower Placements
E-mail : venkat@srmlt.in

Please Call for Appointment
To Meet in Jaffna between
3rd - 5th August, 2011
Mr. S. Venkata Narayanan
Mobile : 0711323582, India Contact : 09841063724

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?


## யாழ்.மக்களின் ஆத்மாவில் சங்கிலியன் அவனை மீண்டும் மீண்டும் கொல்லாதீர்கள்!

யாழ்ப்பாணத்தின் தமிழர்கள் இறைமையை நிலை நாட்டியதன் இறுதி வரலாற்றுச் சான்றாக அடையாளப்படுத்தப் படுபவன் சங்கிலியன். உள்ளூர் சிற்பியால் வடிக்கப்பட்ட அவனது சிலை இடித்தழிக்கப்பட்டு, இந்திய சிற்பியால் வடிக்கப்பட்ட புதிய சிலை திறந்து வைக்கப்படுகின்றது. சங்கிலியனது சிலை தவறான அமைப்புடையது எனில் பழைய சிலையை அகற்றி அரும் பொருள்காட்சியகத்தில் வைப்பதும், அந்த இடத்தில் புதிய சிலையை நிறுவுவதுமே பொருத்தமானதாகும்.

அவ்வாறல்லாது அவனது பழைய சிலையைத் தகர்த்து அழித்தமை 1990 இல் சோவியத் ஒன்றியம் பிரிந்தபோது லெனினுடைய சிலைகளை உடைத்தது போலாகும். ஆப்கானிஸ்தானில் மலையில் அமைக்கப்பட்டிருந்த பாமியன் புத்தர் சிலைகளும் இவ்வாறே தலிபான்கள் ஆட்சியமைத்திருந்தபோது அகற்றப்பட்டிருந்தன.

யாழ்ப்பாண அரசர் வரிசையில் இரண்டு சங்கிலியன்கள் வருகிறார்கள். யாழ்ப்பாண வைபவ மாலை எனும் முக்கிய வரலாற்று நூலை எழுதிய மாதகல் மயில்வாகனப் புலவர் இவ்விருவரும் ஒருவரென்றே மயங்குகிறார். பின்வந்த வரலாற்றாசிரியர்கள் மற்றும் போர்த்துக்கேய,ஒல்லாந்தர் குறிப்புக்கள் இருவரையும் வேறாகக் காண்கின்றன.

முதலாமவன் கனகசூரிய சிங்கையாரியனுடைய மகனான 6ஆம் பரராசசேகரனின் மகனாவான். சிங்கைப் பரராசசேகரன் எனப்படும் இவனுக்கு வள்ளியம்மை, இராசலட்சுமி அம்மாள் என இரு மனைவியர். அதற்குப் புறம்பாக மங்கத்தம்மாள் என்ற வைப்பு (சின்ன வீடு) இருந்தது. மங்கத்தம்மாளுக்கும் பரராசசேகரனுக்கும் பிறந்தவனே முதலாம் சங்கிலி அல்லது 7ஆம் செகராசசேகரனாவான். இவன் முறையான வாரிசுக்கள் இருக்க முறையற்ற விதத்தில் அரசுரிமையைக் கைப்பற்றி ஆண்டதாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.


1519 முதல் 1561 வரை யாழ்ப்பாணத்தை ஆண்ட முதலாவது சங்கிலியனின் சிலை

42 ஆண்டுகள் இவனது ஆட்சி நிலவியதாக ஒல்லாந்தர் குறிப்புக்கள் கூறுகின்றன. 1519 முதல் 1561 வரை இவனது ஆட்சி நிலவியது என்பார் சுவாமி ஞானப்பிரகாசர்.

இவன் மதத்தையும், வணிகத்தையும் பயன்படுத்தி ஆக்கிரமிப்பை மேற்கொண்ட போர்த்துக்சேயரைக் கடுமையாக எதிர்த்தான். கடலிலும் பலமாகத் திகழ்ந்த சங்கிலியன் போர்த்துக்கேயரின் வாணிகக் கப்பல்களைக் கைப்பற்றி, பொருள்களையும் பறிமுதல் செய்தான். சீதவாக்கை மன்னன் மாயாதுன்னையுடன் இணைந்து போர்த்துக்சேயரை ஆதரித்த கோட்டை மன்னன் புவனேகபாகுவின் மீதும் தாக்குதல் நடத்தினான். கோட்டை மன்னன் தனது நிலையை விளக்கியதைத் தொடர்ந்து கோட்டையைத் தாக்குவதை நிறுத்தினான்.

யாழ்ப்பாண அரசின் ஆளுகைக்கு உட்பட்ட மன்னாரில் சவேரியார் பாதிரியாரால் கத்தோலிக்க மதத்துக்கு மாற்றப்பட்ட 700 வரையான தமிழர்கள் சங்கிலியனால் படுகொலை செய்யப்பட்டனர். இச்செயலுக்காக இவன் மீது போர் தொடுக்க வேண்டி பாதிரியார் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 1543இல் இந்தியாவின் சோவாவிலிருந்து மார்ட்டீன் அல்போன்சா தேதோசா தலைமையில் முதலாவது படையெடுப்பு நடத்தப்பட்டது.வந்த படைகள் சங்கிலியனது இராஜதந்திரச் செயற்பாட்டினால் அன்பளிப்புக்களைப் பெற்றுத் திரும்பின.1560இல் கோவாவின் பதிலாளுநராக இருந்த கொன்சான்தின் தே பிறகன்சா யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தான்.

இப்போரில் தோல்வியடைந்த சங்கிலியன் நல்லூர் இராசதானியைத் தீ மூட்டிவிட்டு வன்னிப் பிரதேசத்தில் கரந்துறைந்திருந்தான். அவ்வேளை போர்த்துக்கேயருக்கு எதிராக மக்கள் போராட்டத்தை மேற்கொண்டு அவர்களைப் புறமுதுகிடச் செய்தான். இவனுக்குப் பின் இவனது மகனான புவிராச பண்டாரம் ஆட்சி செய்தான். சங்கிலியன் 1565இல் காலமானான் என செ.இராசநாயகன் குறிப்பிடுகிறார்.

இரண்டாமவர் 1591 இல் அந்திரே புரத்தாடு தலைமையில் போர் தொடுத்து யாழ்ப்பாண அரசனைக் கொன்ற பின் ஆட்சியில் அமர்த்திய எதிர்மன்ன சிங்கனின் மகனாவான். அவன் இறக்க சிறுவனான சங்கிலி குமாரனை விடுத்து மைத்துனரான அரசகேசரியை மன்னனாக்கினர். இதைப் பொறுக்காத அவன் அரசகேசரியைக் கொல்வித்து, ஆட்சியைக் கைப்பற்றினான். எதிர் மன்னசிங்கன் கத்தோலிக்க மதத்தைத் தழுவ முயன்றும் சங்கிலியனே அதைத் தடுத்ததாக குவைறோஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்சேயரைக் கடுமையாக எதிர்த்த இவனை அழிக்க கொழும்பிலிருந்தும், இந்தியாவின் கோவாவிலிருந்தும் 5 ஆயிரம் படைகளை அனுப்பிப் போர் தொடுக்கப்பட்டது. ஈற்றில் சிறை பிடிக்கப்பட்ட சங்கிலிகுமாரன் 1621இல் கோவாவில் வைத்து தூக்கிலிடப்பட்டான்.

பிழை சரிகளுக்கு அப்பால் யாழ்ப்பாணத்தின் வீரமிகு சாட்சியாக, தமிழர்களின் இறைமையின் சின்னமாக சங்கிலியன் யாழ்ப்பாண மக்களின் ஆத்மாவில் நிறைந்துள்ளான். தயவு கூர்ந்து அவனை மீண்டும் மீண்டும் கொல்லாதீர்கள்!

விழிச்சான் குஞ்சு.

# முல்லை தமிழ் மீனவர்களின் மீன்பிடி உரிமங்கள் சிங்களவரிடம் பறிபோயின

## அரசு மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக.3

போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசத்தில் கரைவலை தொழிலில் ஈடுபட்டு வந்த தமிழர்களின் உரிமங்கள், சிங்கள மீனவர்களுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுவிட்டன. அங்கு தமிழர்கள் எவரும் கரைவலைத் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை என்று முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

கொக்கிளாயிலிருந்து கொக்குத் தொடுவாய், நாயாறு, செம்மலை, அளம்பல், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் முன்னர் இருந்த 44 கரைவலை பாடுகளில் ஒரிரு பாடுகளுக்கே சிங்களவர்கள் உரிமம் வைத்திருந்தனர். மற்றைய பாடுகளுக்குரிய உரிமத்தைத் தமிழர்களே வைத்திருந்தனர் எனவும் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் உறுப்பினரான முன்னாள் கல்வியதிகாரி அண்டனி ஜெகநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

1984 ஆம் ஆண்டில் தமிழர்கள் இராணுவத்தால் வெளியேற்றப்பட்டு, அங்கு சிங்கள மீனவர்கள் வரவழைக்கப்பட்டு கரை வலை உரிமங்கள் கொடுக்கப்பட்டன எனவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

முன்னர் இருந்த 44 பாடுகள் இன்று 150ஆக அதிகரித்துள்ளன எனவும் அண்டனி ஜெகநாதன் தெரிவித்தார்.

கொக்கிளாய்ப் பகுதிக்கு உரிம ஆவணங்களை எடுத்துக் கொண்டு சென்ற தமிழ் மீனவர்கள், அங்கு சிங்கள முதலாளிமார் உரிமங்களைக் காட்டி தொழில் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து ஏமாற்றத்துடன் திரும்பி வந்துவிட்டனர் எனவும் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (ச)

# குற்றச்சாட்டை மறுக்கிறார் மீன்வளத்துறை அமைச்சர்

கொழும்பு, ஒக. 3

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் தமிழ் மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டை மீன்வளத்துறை அமைச்சரான ராஜித சேனாரத்ன மறுத்துள்ளார்.

அதேவேளை, தமிழர்கள் எவருக்காவது உரிமம் இருந்து, அவர்கள் அங்கு கரைவலை தொழிலில் ஈடுபடுவது தடுக்கப்பட்டால், தன்னிடம் முறைப்பாடு செய்யும் பட்சத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அந்தப் பகுதியில் பாரம்பரியமாக மீன்பிடித்து வந்த சிங்கள மீனவர்களுக்கு மாத்திரமே அங்கு மீண்டும் கரைவலைத் தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அதுதவிர, தென்பகுதியிலிருந்து எவரும் புதிதாக அங்கு அனுமதிக்கப்படவில்லை. தமிழர்களின் உரிமங்கள் சிங்களவர்களுக்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படுவதில் உண்மை எதுவும் கிடையாது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஒரே நாளில் 203 தீர்ப்புகள்

கொழும்பு,ஒக.3

அனுராதபுர நீதிவான் ஒரே நாளில் 203 தீர்ப்புகளை வழங்கியுள்ளார். நீண்டகாலமாக நிலுவையில் இருந்த வழக்கு விசாரணைகள் தொடர்பில் ஒரே நாளில் தீர்ப்பளித்துள்ளார்.

நீதிவான் தர்ஷிக்கா விமல சிறியினால் இந்தத் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வழக்குகளுடன் தொடர்புடைய 55 வீதமான சந்தேகநபர்களுக்கு தண்டனை விதித்ததுடன் ஏனையவர்கள் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.(ச)

## சத்தியப் பிரமாணம்...


கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கட்சி சார்பாக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சத்தியப் பிரமாணம் செய்தனர்.

# குற்றவாளிகளை உடன் கைதுசெய்க பொலிஸ் மா அதிபர்

கொழும்பு,ஒக.3

குற்றங்கள் இடம்பெறும் பட்சத்தில் அதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்குத் தாமதிக்க வேண்டாமென பொலிஸ் மாஅதிபர் என்.கே இளங்ககோன் பொலிஸ் அதிகாரி களுக்குப் பணிப்புரை விடுத் துள்ளார்.

அவ்வாறு சந்தேகநபர்களை உடனடியாகக் கைது செய்வதனூடாக குற்றங்கள் அதிகரிப்பதனை குறைக்க முடியும்.

குற்றவாளிகள் நீண்டகாலம் மறைந்து சுதந்திரமாக நடமாடுகின்றமையே குற்றங்கள் அதிகரிப்பதற்கான முக்கிய காரணம் என்று அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ச)

# ரணிலை பதவி விலகக்கோரி பிக்குகள் உண்ணாவிரதம் இருப்பர்

கொழும்பு,ஒக.3

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலகுமாறு வலியுறுத்தும் நோக்கில் பௌத்த பிக்குகள் சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்களினால் இந்தப் போராட்டம் நடத்தப்பட உள்ளது. ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதாக எழுத்து மூலம் அறிவிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் அமைந்துள்ள சிறிகொத்தவிற்கு எதிரில் பௌத்த பிக்குகள் சாகும்வரையில் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.தலைமைப் பதவியை கரு ஜயசூரியவிடம் ஒப்படைக்குமாறு சஜித் தரப்பினர், ரணில் விக்ரமசிங்கவிற்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர்.

2001 ஆம் ஆண்டின் பின்னர் நடைபெற்ற சகல தேர்தல்களிலும் கட்சி தோல்வியைத் தழுவியுள்ளதாகவும், இதற்கு கட்சித் தலைவரே பொறுப்பு எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
03 ஒகஸ்ட் 2011 புதன்கிழமை

# வேலி அமைக்க தோண்டிய குழிகளில் சவப்பெட்டியும் எலும்புக் கூடுகளும்

முல்லைத்தீவு, ஓக. 3

தற்போது மக்கள் மீள்குடியமர்ந்து வரும் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கைவேலிப்பகுதியில் வேலிகள் அமைப்பதற்காகக் கிடங்குகள் கிண்டியபோது சவப்பெட்டியும் எலும்புக்கூடுகளும் வெளிவந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்கள் தமது வீடுகளைத் துப்புரவு செய்வதோடு எல்லைகளை அமைக்கும் வேலைகளிலும் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு வேலிகளை அமைப்பதற்காகக் கிடங்கு கிண்டியபோதே மேற்குறிப்பிட்டவாறு சவப்பெட்டியும் எலும்புக் கூடுகளும் வெளிக்கிளம்பியுள்ளன.

இதனால் இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்கள் மத்தியில் அச்சநிலை உருவாகியுள்ளது.

மேலும் இந்தப் பகுதியில் காவல்துறையினர் இல்லாததால் சட்டவிரோதமான முறையில் சாராய உற்பத்தியும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

அத்துடன் களவுகளும் நடைபெறுகின்றன. தென்னந்தோட்டங்களின் உரிமையாளர்கள் இல்லாத வேளைகளில் அவற்றினுள் பிரவேசிக்கும் நபர்கள் தேங்காய்களைத் திருடிச் செல்கின்றனர். இவர்கள் குழுக்களாக வருவதால் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் இவர்களைத் தட்டிக்கேட்க முடியாத நிலையிலுள்ளனர். அப்படியும் கேட்டால் இந்தத் திருட்டு நபர்கள் அவர்களை மிரட்டுவதுடன் காணிக்கான ஆவணங்களையும் காட்டுமாறு கேட்கின்றனர். இதனால் உரிமையாளர்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

மேலும் இந்த நபர்கள் மக்கள் மீள்குடியமராத பகுதிகளில் காணப்படும் வீடுகளில் கூரை மரங்களைக் கழற்றியெடுத்து புலிகளின் இனங்காணப்பட்ட சொத்துக்களைச் சுற்றி வேலி அமைப்பதற்கும் பயன்படுத்துகின்றனர்.

மேலும் அந்தப் பகுதியில் ''இராணுவத்துக்குச் சொந்தமான சொத்து - உட்பிரவேசிக்கக் கூடாது'' என அறிவித்தல் பலகை வைத்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. (க-ரி)

# மோதிரத்தை அடகுவைக்கச் சென்றவர் காட்டுப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்

முல்லைத்தீவு, ஓக. 3

வங்கியில் தனது மேதிரத்தை அடகுவைத்துப் பணம் பெறச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனையைச் சேர்ந்தவர் பிலிப் செல்வநாயகம். இவர் தனது மேதிரத்தை அடகு வைப்பதற் காகச் சென்றுவிட்டு தண்ணீரூற்று - முறியடி தேக்கம் காட்டினூடாக வீடு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் குமுழமுனைக்கு அருகில் தேக்கம் காட்டுப் பகுதியில் இராணுவச் சாவடிக்கு அருகில் இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இராணுவச் சாவடியில் இருந்தவர்கள் விடுப்பில் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவரின் சடலம் மேலதிகப் பரிசோதனைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் இராணுவத்தினருக்கு மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது உடலைக் கொழும்பிலிருந்து கொண்டுவருவதற்கு 50 ஆயிரம் ரூபா செலவாகுமெனத் தெரிவித்த இராணுவத்தினர் இதில் ஒரு பகுதியை மீனவர் சங்கம் வழங்குமெனவும் மீதியை அரச திணைக்களங்களில் பணியாற்றுவோர் வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி)

## மாற்றுவலுவுள்ளோருக்கு மலசல கூடங்கள்

மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் வடமாகாண சமூகசேவைகள் திணைக்களித்தின் நிதியத்திலிருந்து மாற்றுவலுவுள்ள ஐந்து குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

மொத்தமாக 25 குடும்பங்கள் இந்த நிதியுதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மாகாண விசேட அபிவிருத்தி நிதியத்தின் கீழ் தலா ஒரு லட்சம் குடும்பங்களுக்கும் வழங்கப்படுகின்றது. (க-121)


## மனம் உவந்து நன்றி தெரிவிக்கின்றேன்



வலி. தென் மேற்குப் பிரதேச சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்ட எனக்கு அதிகப்படியான வாக்குகளை அளித்து என்னை வெற்றி பெறச் செய்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் எனது வெற்றிக்காக உழைத்த அன்பு நெஞ் சங்களுக்கும் எனது பணிவான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

சண்முகம் சிவகுமாரன் J.P
ஒய்வு நிலை கிராம அலுவலர்.

கட்டுடை,
மானிப்பாய்.


## வவுனியாவில் மாபெரும் சைக்கிளோட்டப் போட்டிகள்

வவுனியாவில் நடைபெறும் விவசாய வாரத்தை முன்னிட்டு மாபெரும் சைக்கிளோட்டப் போட்டியொன்றும் இடம்பெறவுள்ளது.

ஆண்கள் போன்றே பெண்கள் பங்கேற்கும் சைக்கிளோட்டப் போட்டியும் இன்று காலை 7 மணிக்கு வவுனியாவிலிருந்து ஆரம்பமாகி அனுராதபுரம் வரையில் சென்று மீளவும் வவுனியாவை வந்தடையவுள்ளது.

வரையறுக்கப்பட்ட இலங்கை உர நிறுவனத்தின் தலைவரான புத்திக்க மடிகஹேவாவின் வழிகாட்டலில் மேற்படி உர நிறுவனத்தின் முழுமையான அனுசரணையுடன் ''லக் பொஹர சைக்கிள் சவாரி'' இடம்பெறுகிறது.

ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் முதலிடத் தைத் தட்டிக் கொள்ளும் வீரருக்கு லக்பொஹர கேடயத்துடன் பணப்பரிசாக 25 ஆயிரம் ரூபாவும் துவிச்சக்கர வண்டி யொன்றும் வழங்கப்படவுள்ளது.

இரண்டாமிடத்தைப் பெறும் வீரருக்குப் பணப் பரிசாக 20 ஆயிரம் ரூபா வும் துவிச்சக்கர வண்டியொன்றும் வழங்கப்படவுள்ளதோடு, மூன்றாம் இடத்தைப் பெறும் வீரருக்கு பணப் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் துவிச்சக்கர வண்டியொன்றும் வழங்கப்படவுள்ளது.

பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி யில் முதற் பரிசாக லக் பொஹர கேடயத்துடன் 20 ஆயிரம் ரூபாவும் துவிச்சக்கர வண்டியொன்றும் வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் துவிச்சக்கர வண்டியொன்றும் வழங்கப்படவுள்ளது. மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபா வும் துவிச்சக்கர வண்டியொன் றும் வழங்கப்படவுள்ளது.

நான்காம் இடம் முதல் பத்தாம் இடம் வரையிலும் வெற்றி பெறுவோருக் கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.(க-22)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்லத்துரை
வள்ளிப்பிள்ளை

திதி: சதுர்த்தி

பிறப்பு
26 ★ 12 ★ 1951

இறப்பு
25 ★ 07 ★ 2009

ஈராண்டுகள் கடந்தாலும் - நெஞ்சம்
ஈரமாய் உள்ளன
பல்லாண்டுகள் சென்றாலும்
மறையாமல் இருப்பாய் - எம்முன்

கைதடி மேற்கு,
கைதடி.

(6451) குடும்பத்தினர்.

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 ★ 10 ★ 1939



மறைவு
01 ★ 08 ★ 2003

அமரர் சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை
(பங்குதாரர் நியூசோபிதா நகைமாடம்)
திதி - 03.08.2011

அன்பைக் காட்டி அறிவையூட்டிய அன்புத் தந்தையே
பாசமும் பரிவும் காட்டி எம்மை ஆளாக்கிய அப்பாவே
ஆண்டெட்டு ஆகியும் ஆறவில்லை எம் துயரம்
என்றும் பிரார்த்திப்போம் ஆத்ம சாந்திக்காக

திருவேரகம்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

நியூசோபிதா நகைமாடம்,
184, 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (6457)

## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 818
சீட்டிழுப்பு திகதி 01.08.2011

எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 13 48 62 63

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 13,040,129.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 17 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 356 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 701 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 17185 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9779 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 245020 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 38560 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 11,534,260.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 13,223,471.20

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரிதமாகப் புனரமைக்கப்படுகின்றது பண்டாரவன்னியனின் உருவச் சிலை

## வவுனியா நகரசபையின் உபதலைவர் தகவல்

வவுனியா, ஒக.3

ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடி வீழ்ந்த வீரமறவன் பண்டாரவன்னியனின் உருவச்சிலையைப் புனரமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாக வவுனியா நகரசபையின் உப தலைவரான எம்.எம்.ரதன் தெரிவித்தார்.

வவுனியா நகரசபையின் இந்த மாதக் கூட்டம் கடந்த புதன்கிழமை நகரசபையின் புதிய தலைவரான ஐ.கனகையா தலைமையில் இடம்பெற்ற போது விசேட பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் இனத்தின் விடுதலைக்காக ஆரம்பகாலத்தில் போராடி வீழ்ந்தவன் வன்னியை ஆண்ட மானவீரனான பண்டாரவன்னியன். ஒரு கட்டத்தில் எதிரிக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய இந்த வீரமறவன் இறுதியில் கற்சிலைமடுவில் வீரமரணத்தைத் தழுவினான்.

இந்த வீரமறவனின் ஞாபகார்த்தமாக 1983 ஆம் ஆண்டு பிரமாண்டமான முறையில் வவுனியா கச்சேரி வளாகத்தினுள் அவனது உருவச் சிலை அமைக்கப்பட்டது.

இந்தச் சிலை கவனிப்பாரற்றுக் கிடந்த சூழ்நிலையில் இதற்கான புனரமைப்புப் பணிகளும், நவீனமயப்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கென ஐந்து லட்சம் ரூபாவை வவுனியா நகரசபை ஒதுக்கியுள்ளதாகவும் நகரசபையின் உப தலைவர் மேலும் தெரிவித்தார் (க-ரி)



# கல்மடுக்குளம் புனரமைப்பு

கிளிநொச்சி, ஒக. 3

என்றிப் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கல்மடுக்குளம் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்தத்தின் போது இந்தக் குளத்தின் அணைக்கட்டும் சேதமடைந்தது. இதனால் இந்தக் குளத்தை அண்டியிருந்த விவசாயிகள் விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

தற்போது மழை காலத்தில் இடைநிறுத்தப்பட்ட இந்தக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகியதும் இந்தப் பகுதி விவசாயிகள் அதிக ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையைமேற்கொள்ளமுடியும். (க)

# புறாப் பிடிக்க ஏறிய மாணவன் வீழ்ந்ததில் விலா முறிந்தது

முல்லைத்தீவு, ஒக.3

புறாப்பிடிப்பதற்காக ஆலயக் கோபுரத்தில் ஏறிய பாடசாலை மாணவன் தவறிக் கீழே வீழ்ந்து ஆபத்தான நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் 12 வயது நிறைந்த ஆ.பாவோஜிதன் என்பவரே புறாப் பிடிப்பதற்காக முல்லைத்தீவு பி.டபிள்யூ வீதியில் அமைந்துள்ள புனித பேதுருவானவர் ஆலயத்தின் 150 அடிக்கு மேற்பட்ட உயரமான கோபுரத்தில் ஏறியுள்ளார்.

ஆனால் கால் தடக்கி கீழேயுள்ள பீடத்தில் வீழ்ந்துள்ளார். இதனால் தலை, விலா எலும்புகள் என்பன உடைந்த நிலையில் உடனடியாக மாஞ்சோலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவரது நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-ரி)

# தேசிய விவசாயிகள் வாரம் வவுனியாவில் ஆரம்பம்

மன்னார், ஒக. 3

வவுனியா தாண்டிக்குளம் விவசாயப் பண்ணையில் நேற்று முன்தினம் காலை தேசிய விவசாயிகள் வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த முறை தேசிய விவசாயிகள் வாரம் வவுனியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் இதன் ஆரம்ப நிகழ்வுக்கு வருகைதந்த விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் தாண்டிக்குளம் விவசாயப் பண்ணைக்கு அழைத்து வரப்பட்டனர்.

விவசாயக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அரங்கத்தின் பிரதான நுழைவாயிலில் நாடாவை வெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர், வவுனியா அரச அதிபர், நகரசபைத் தலைவர் மற்றும் அரச உயரதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுகள் ஐந்து நாள்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-421)

# யானைகள் அட்டகாசம்

முல்லைத்தீவு, ஒக.3

மக்கள் மீள்குடியமர்ந்த புதுக்குடியிருப்புப் பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த யானைகள் இந்தப் பகுதிகளிலுள்ள தென்னை மற்றும் பயன்தருமரங்களையும், பயிர் வகைகளையும் தொடர்ந்து அழித்து வருகின்றன. அத்துடன் கண்ணில் தென்படுபவர்களைத் துரத்தியும் வருகின்றன. இதனால் மீள்குடியமர்ந்த மக்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழிக்கின்றனர்.

இந்த யானைகள் தென்பகுதியில் வளர்க்கப்பட்டு வயது முதிர்ந்த காரணத்தால் உபயோகமில்லாத நிலையில் இந்தப் பகுதியில் கொண்டு வந்து விடப்பட்டுள்ளதாகப் பலரும் தெரிவித்துள்ளனர்.

மேலும் திட்டமிடப்பட்ட முறையில் இவை தமது சொத்துக்களை அழிப்பதற்கென்றே இறக்கி விடப்பட்டுள்ளதோ என்ற ஐயத்தையும் இங்குள்ள மக்கள் வெளியிட்டுள்ளனர்.

போருக்குத் தப்பிப் பிழைத்து மீள்குடியமர்ந்த தமக்கு இப்படியுமொரு சோதனையாவென இந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (க-ரி)

## ரம்மியமான தோற்றம்...



விவசாயிகளுக்குக் கௌரவம்: வவுனியா தாண்டிக்குளம் விவசாயப் பண்ணையில் தேசிய விவசாயிகள் வாரம் கொண்டாடப்படும் அரங்கின் நுழைவாயிலின் எழில்மிகு தோற்றத்தையும் விவசாய அமைச்சர் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் காணலாம். (421)

# மன்னாரில் முறையற்ற பாலியல் சம்பவங்களை கட்டுப்படுத்துமாறு செல்வம் எம்.பியிடம் கோரிக்கை

மன்னார், ஒக. 3

மன்னாரில் அதிகரித்துச் செல்லும் பாலியல் தொடர்பான முறையற்ற சம்பவங்களை உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனிடம் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்த நிலையில் மன்னார் மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களுக்கு மக்கள் சென்றுவரக்கூடிய ஏது நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில் இளவயதினர் தகாத பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை அதிகரித்துக் காணப்படுகின்றது. விடுமுறை தினங்களிலும், மாலை வேளைகளிலும் சில இளைஞர் குழுக்கள் இவ்வாறான தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

சில பெண்கள் தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுத் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களுக்கு மன்னாரிலுள்ள சில முச்சக்கரவண்டிச் சாரதிகளும் உடந்தையாக இருப்பது தெரிய வருகின்றது.

எனவே இத்தகைய சம்பவங்களால் மன்னார் மாவட்டத்தின் நற்பெயருக்கும் இங்குள்ள பெண்களுக்கும் ஏற்படக்கூடிய களங்கத்தைத் துடைப்பதற்கு முச்சக்கர வண்டிச் சாரதிகள் உதவ வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை அண்மையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவரின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது சிறுவர், சிறுமிகள் தகாத பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பிலும் ஆராயப்பட்டது.

குறிப்பாக மன்னார் பாலத்தடி, காட்டுப்பள்ளி, கீரிக் கடற்கரை போன்ற பகுதிகள் இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (க-601)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உயரமான பாலம்

மலேசியாவில் உள்ள இந்தப் பாலம் 700 மீற்றர் நீளமும், 125 அடி உயரமலையில் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பாலம் இரண்டு மலைகளை இணைக்கும் பாலமாக அமைந்துள்ளது.



# அரியவகை மலர்கள்





உலகில் பூக்கும் பூக்கள் பலவகை. அவற்றுள் சில மலர்கள் பல ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் பூக்கின்றன. அவ்வாறு அரிதாகப் பூக்கும் பூக்களை இங்கு காணலாம்.

# வைரங்களில் பள்ளத்தை ஏற்படுத்தும் சூரிய ஒளி



வைரத்தின் மீது புறஊதாக் கதிர்கள் தொடர்ந்துபடுவதால் அதில் பள்ளங்கள் ஏற்படுகின்றன என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பூமியின் மிக விலை உயர்ந்த கொடை வைரம். இதை விரும்பாத பெண்கள் அரிது. அதனால்தான் விலை அதிகம் என்றாலும் அதன் கேள்வியும் குறையாமல் இருக்கிறது.

வைரத்தின் தன்மை மற்றும் கதிர்வீச்சுகளால் அதில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள மெக்கரி பல்கலைக்கழகத்தில் வைர ஆராய்ச்சியாளர் ரிச்சர்ட் மில்டர்ன் தலைமையில் அண்மையில் விரிவான ஆய்வு நடத்தப்பட்டது.

அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முத்துக்களைப்போல் வைரங்களும் ஆவியாகும் தன்மை கொண்டது என்பது தற்போது தெரியவந்துள்ளது. குறிப்பாக புறஊதாக் கதிர்கள் படும் போது வைரம் விரைவில் ஆவியாகிறது.

வேறு சில உலோகங்களைப் போல் வைரத்தையும் ஆவியாக்கக்கூடிய சக்தி புறஊதா கதிர்களுக்கு உள்ளது. புறஊதாக் கதிர்களைத் தொடர்ந்து செலுத்தியதில் ஒரு சில வினாடிகளிலேயே வைரக் கல்லில் நுண்ணிய பள்ளங்கள் ஏற்பட்டன.

அதிக வெப்பத்தில் நீண்ட நேரம் இந்தக் கதிர்வீச்சில் இருந்த வைரக் கற்கள் அதிகம் கரைந்தன. சூரிய ஒளியில் புறஊதாக் கதிர்கள் இருந்தாலும், வைரக் கல்லைப் பாதிக்கும் அளவுக்கு அவற்றின் வீரியம் இருப்பதில்லை. இதனால் வெயிலில் அணிந்து செல்வதால் வைரம் பாதிக்கப்படுவதில்லை.

# வான்வெளிப் பகுதியில் புதிய கிரகம் கண்டுபிடிப்பு

வான்வெளிப் பகுதியில் மிகச் சிறிய கிரகமான புளூட்டோ உள்ளது.

இந்தக் கிரகத்தைச் சுற்றி உள்ள வளையங்கள் குறித்து அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வாளர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

இந்தச் சிறிய கிரகத்தைச் சுற்றி புதிய கிரகம் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.


ஹப்ளே விண்வெளி நுண்ணோக்கியின் மூலம் இந்தப் புதிய கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்கு பி4 என்ற பெயரை நிபுணர்கள் தற்காலிகமாக சூட்டி உள்ளனர். இந்தச் சிறிய கோள் நான்காவது கண்டுபிடிப்பாகவும் மிகச்சிறிய வடிவம் கொண்டதாகவும் உள்ளது.

இது புளூட்டோவின் நான்காவது துணைக் கிரகம் ஆகும்.

இந்தப் புதிய கிரகம் 13 முதல் 34 கிலோ மீற்றர் அகலம் கொண்டதாக இருக்கும் என மதிப்பிடப்பட்டு உள்ளது. மேலும் 1043 கிலோமீற்றர் குறுக்களவு கொண்டது.

# வீடாக மாறிய மா மரம்



வளர்ந்து வரும் மா மரத்தை வெட்டாமல் மரத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப கட்டப்பட்ட அழகான வீடு.

மாமரத்தின் கிளைகள் மற்றும் இலைகள் வீட்டின் அனைத்துப் பகுதியிலும் படர்ந்து காணப்படுகின்றன.

# நிலத்துக்கடியில் கட்டப்பட்ட வீடு




நம்முடைய பார்வையில் பல வினோதமான வீடுகளைப் பார்த்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட வினோதங்களில் ஒன்றும்தான் சுவிஸ் சர்லாந்தில் நிலத்துக்கடியில் கட்டப்பட்டுள்ள அழகான வீடு.

# குகையில் அமைக்கப்பட்ட விடுதி

துருக்கியில் உள்ள Gamirasu என்றழைக்கப்படும் இந்த விடுதி குகையினுள் வடிவமைக்கப்பட்டுள்ளது. குகைகளில் உள்ள 30 அறைகளும் குளிர்காலத்தில் வெப்பமான சூழ்நிலையையும் வெயில் காலத்தில் குளிரான சூழ்நிலையையும் கொடுக்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரைகளை திரிபுபடுத்தி வெளியிடுவதால் இலக்குகளில் தவறிப்போகும் நிலை ஏற்படும்

## நீதி அமைச்சர் கூறுகிறார்

அம்பாறை, ஓக.3

யுத்தத்தை அன்றும், இன்றும், என்றும் வெறுப்பவன் நான். இன்றுள்ள நெருக்கடியான நிலையில் பொறுப்பு வாய்ந்த நாம் ஆற்றும் உரைகளைத் திரிபுபடுத்தி வெளியிடுவது, நாம் அடைய நினைக்கும் இலக்குகளில் தவறிப்போகும் நிலைமையைத் தோற்றுவிக்கும்.

இவ்வாறு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கவிஞர் நபீலின் ''எதுவும் பேசாத மழைநாள்'' எனும் கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் விடுதலைப் புலிகள் யுத்தத்தில் வென்றிருந்தால், தமிழர்களுக்கு நிச்சயமாக ஏதாவது கிடைத்திருக்கும். முஸ்லிம்களுக்கு ஒன்றுமே கிடைத்திருக்காது.

அதேபோல் அரசு யுத்தத்தில் வென்றாலும், தமிழர்களுக்கும் ஒன்றுமில்லை. முஸ்லிம்களுக்கும் ஒன்றுமில்லை. மொத்தத்தில் இந்த இரு நிலைகளிலும் முஸ்லிம்களுக்கு ஒன்றுமில்லை.

தமிழ் மக்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டேயிருக்க வேண்டுமென்பதும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர்களுடன் நெருக்கமாகவும், புரிந்துணர்வுடனும் செயல்பட வேண்டுமென்பதிலும் உறுதி கொண்டவர்களாக நாமிருக்கின்றோம்.

ஆனால் இந்த இக்கட்டான கால கட்டத்தில் எமது நல்லுறவுக்கும் புரிந்துணர்வுக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் பிரசுரிக்கப்படுவது கவலைதரும் விடயமாகும்.


சிலபத்திரிகைகள் செய்யும் விபரீதம் சொற்பமானதல்ல, அண்மையில் அட்டாளைச்சேனையில்,முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் பிரதிநிதிகளைப் பாராட்டும் விழாவில் நான் பேசியது உண்மை. ஆனால் எனது பேச்சை முழுமையாகப் பிரசுரிக்காமலும் எனது பேச்சின் உண்மையான கருப்பொருளை விளங்கிக் கொள்ளாமலும் திரிபுபடுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது கடும்போக்கில் கண்டனம் தெரிவித்ததாக தலைப்புச் செய்தியே வெளியிடப்பட்டிருப்பது விசனிக்கத்தக்க செயலாகும்.



எனது கருத்தை மாற்றி வேறு அர்த்தம் கற்பித்தும் எனது பேச்சின் இடைநடுவில், அங்கும் இங்கும் பிய்த்து எழுதி விடுவதால் இன்றைய நெருக்கடி நிலையில் எத்தகைய விளைவுகள் எற்படும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அரச சார்பு வாரப் பத்திரிகை ஒன்று செய்த இந்தப் பொறுப்பற்ற செய்தி வெளியிடலைப் பார்த்து நானே எனக்குள் சிரித்துக் கொண்டேன். இதனால் எனது முழுப் பேச்சையுமே பிரசுரிக்க வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டுள்ளது. அப்பொழுதுதான் உண்மையான கருப்பொருள் தெளிவாகும்.

அரசியல்வாதிகளாகிய நாம் அரசியல் பேசிப்பேசி சலித்துப் போகும் நிலையில், இத்தகைய இலக்கிய நிகழ்வுகளில் பங்கு கொள்வதில் கிடைக்கும் ஆசுவாசம் பெரும் உள மகிழ்வைத் தருகின்றது - என்றார். (ச-30)

## கவனிப்பார்களா...



மட்டக்களப்பு,மாவடி ஓடைப்பாலம் நீண்ட நாள்களாகப் புனரமைக்கப்படாமையால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குப் பயணிக்கின்றனர்.

# மகப்பேற்று வைத்தியர் நியமனம்

மூதூர் ஆதார வைத்தியசாலையில் நீண்ட காலமாக நிலவிவந்த மகப்பேற்று வைத்தியரில்லாக் குறைபாடு நீங்கியுள்ளது. இங்கு மகப்பேற்று வைத்தியராக டாக்டர் ஆர்.ஆர்.விதானகே நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்தால் மூதூர் கிழக்கு, கிளிவெட்டி, சேருவில, வெருகல், ஈச்சிலம்பற்று ஆகிய பிரதேச பிரிவுகளிலுள்ள கர்ப்பிணித் தாய்மாரின் அசௌகரியம் நீங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் இந்த வைத்தியசாலையில் மகப்பேற்று வைத்தியர் இன்மையால், கர்ப்பிணிகள் மூதூர் பிரதேசத்திலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி போன்ற இடங்களில் உள்ள வைத்தியசாலைகளையே நாட வேண்டியவர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐந்து வருடங்களின் பின் மீள்குடியேற்றம்

மட்டக்களப்பு,ஓக.3

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பமலை, அழியாஓடை கிராம மக்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தங்களது பகுதிகளில் 5 வருடங்களின் பின்பு மீண்டும் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

இவர்கள் 2006ஆம் ஆண்டு நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தார்கள்.

23 குடும்பங்களைச் சேர்ந்த 107 பேர் இவ்வாறு குடியமர்த்தப்பட்டனர்.

இந்த மக்களுக்கு கிரான் பிரதேச செயலாளர் வி.தவராஜா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சரீப் ஆகியோர் உணவுப் பொருள்களை வழங்கி மீள்குடியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச)

# லஞ்சம் பெற்ற கிராம அதிகாரி கைது

நுவரெலியா,ஓக.3

வாக்காளர் இடாப்பில் ஒருவருடைய பெயரை பதிவதற்காக 3000 ரூபாய் லஞ்சம் பெற்றார் என்று குற்றம்சாட்டப்பட்ட கிராம அதிகாரி ஒருவரை லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

கண்டி, கங்கவட்ட, கோரலய பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மாவில்மட கிராம அதிகாரி ஒருவருடைய பெயரை வாக்காளர் இடாப்பில் பதிவதற்கு 5000 ரூபாய் லஞ்சம் கோரி அதில் 3000 ரூபாயைப் பெற்றுக்கொள்ளும்போது கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கண்டி பிரதம நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டபோது விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (ச)

# திருகோணமலையில் கசிப்பு குகை அதிரடி நடவடிக்கையில் அழிப்பு

திருகோணமலை,ஓக.3

திருகோணமலை, கண்டல்காட்டுப் பகுதியில் மதுவரி திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது கசிப்பு கைப்பற்றப்பட்டு அவ்விடத்திலேயே முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களில் தகவல் ஒன்றின் பேரில் திருகோணமலை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ஏ.எம்.ஆஸாட் தலைமையில் 10 பேர்கள் கொண்ட குழுவினர் இந்தத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது சட்டவிரோத மதுபானம் காய்ச்சும் 5 தளங்கள் முற்றாக கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாகவும், இவை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தென்கிழக்குப் பல்கலையில் புவியியல் துறை ஆரம்பம்

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை, கலாசார பீடத்தில் ஒரு புதிய துறையாக புவியியல் துறை அண்மையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக அதன் பீடாதிபதி எஸ்.எம்.ஆலிப் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய துறையின் உருவாக்கம் கலை, கலாசாரப் பீடத்தின் வளர்ச்சிக்குப் பிரதான ஒருமைல் கல்லாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

விரைவில் மேலும் இரண்டும் புதிய துறைகள் உருவாக்குவதற்கு முயற்சி எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் இதுவரை காலமும் இரண்டு துறைகளுடன் இயங்கிவந்த கலை, கலாசார பீடமானது எதிர்வரும் காலங்களில் ஐந்துக்கும் மேற்பட்ட துறைகளுடன் இயங்கிவருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-4)

# தோட்டத்தில் தீ விபத்து; 19 பேர் நிர்க்கதி நிலை

நுவரெலியா,ஓக.3

பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மவுண்ட்வேர்ணன் மத்திய பிரிவு தோட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் மூன்று வீடுகள் சேதமாகியுள்ளன.

இந்தத் தோட்டத்தின் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 17பேர் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தத் தீ விபத்தில் எவருக்கும் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லை எனினும் பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. சேத விவரங்கள் குறித்து நுவரெலியா பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வீடுகளை உடனடியாகத் திருத்தி அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக மவுண்ட்வேர்ணன் முகாமையாளர் ரொஹான் எட்வர்ட் தெரிவித்தார்.

இந்தத் தீ விபத்துத் தொடர்பான விசாரணைகளில் பத்தனை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச)

# மாணவியுடன் உல்லாசமாக இருந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் கைது

கண்டி, ஓக.3

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் உல்லாச விடுதியில் மாணவியொருவருடன் தங்கியிருந்தார் என்ற குற்றச்சாட்டில் உதவிக் கல்விப் பணிப்பாளரொருவர் கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு பிரதேசமக்களுக்குக் கிடைத்த தகவலையடுத்து, அந்த இடத்திற்குச் சென்ற இளைஞர்கள் இந்த இருவரையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டதுடன், மாணவி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் சம்பந்தமாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் உத்தரவின் பேரில் விசேட விசாரணை நடைபெற்று வருகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
தொழில் ரீதியான அல்லது குடும்ப ரீதியான விடயங்களில், சரியான முடிவு எடுக்க முடியாமல் தவிக்கலாம். பெண்கள் வழியில் அனுகூலமான உதவி கிடைக்கும். உங்களுக்குக் கீழே உள்ள சிலர், உங்களை விமர்சிக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் சில வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். இறை வழிபாடுகள் மூலம் அமைதி பெறுவீர்கள்.

**இடபம்:**
நடக்காது என தெரிந்தும், சிலக் காரியங்களைத் துணிச்சலாகச் செய்வீர்கள். எதிர்காலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். உங்களிடம் நன்றாகப் பேசிய ஒருவர், மறைமுகமாக விமர்சிப்பதை அறிந்து கொள்வீர்கள். மற்றவர்கள் ஆதாயம் பெற, நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். சிலரின் தகுதிக்கு மீறிய செயற்பாடுகளைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள்.

**மிதுனம்:**
புதிய திட்டங்கள் போட்டு செயற்படுத்தும் நாள். கடன் பிரச்சினைகளை மாற்றி அமைக்க முற்படுவீர்கள். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். பணிபுரியும் இடத்தில் சிலர் உங்களைப் பார்த்து பொறாமைப்படலாம். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று, நல்ல விதமாக நடந்து விடலாம். அனுகூலமான நாள்.

**கடகம்:**
சிலரிடம் வாக்குக் கொடுத்து, அதைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். சொத்துக்களால் ஆதாயம் பெற வாய்ப்பு உண்டு. உறவினர்களின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்படலாம். சில வேலைகளை அவசரமாக முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். தேவையற்ற பிரச்சினை ஒன்றை நினைத்து மனதைப் போட்டு குழப்பிக் கொள்வீர்கள்.

**சிங்கம்:**
உங்களின் யோசனைகளுக்கு, குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். உங்கள் நலனில் அக்கறை கொண்ட சிலரைச் சந்தித்துப் பேசுவீர்கள். வழக்கமான பணிகளில் ஆர்வமாகச் செயற்படுவீர்கள். புதிய வர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:**
பணத்திற்கு தட்டுப்பாடு ஏற்படலாம். சிலரின் ஏச்சு, பேச்சுகளுக்கு ஆளாகலாம். தொழில் ரீதியான விடயங்களில் சிறு தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்து விட்டு தேடலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். விருந்தினர்கள் வருகையால் சிரமங்கள் நேரும்.

**துலாம்:**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை அடைவீர்கள். பெண்கள் வழியில் ஏற்பட்ட பிரச்னைகள் குறையும். சகோதரர்களின் செயற்பாட்டால் அதிருப்தி அடையலாம். இதோ அதோ என, இழுத்துக் கொண்டிருந்த பணவரவுகள் வரலாம். வாய்ப்புகளை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்படுவீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**விருச்சிகம்:**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்று வீர்கள். தொழிலில் உங்களின் திறமை, சாதுர்யம் வெளிப்படும். உங்களின் வேலை ஒன்றை, மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். சில விடயங்களுக்காகக் காத்திருக்க நேரிட்டாலும், இறுதியில் சுமூகமாக முடியும். தொழில் ரீதியான பணவரவு உண்டு.

**தனுசு:**
குடும்ப உறுப்பினர்கள் பற்றிய கவலைகள் அதிகரிக்கலாம். நீண்ட நாள்களாகப் பார்க்காத நண்பர் ஒருவரை பாதையில் சந்திக்கலாம். மனதில் பட்டதை சிலரிடம் வெளிப்படையாகப் பேசுவீர்கள். வரவாக வந்த பணம் ஒன்றில் பாதியை மற்றவர்களுக்குக் கடனாகக் கொடுப்பீர்கள். நண்பர்கள் சிலருடன் விருந்து, விசேடங்களில் பங்கேற்கலாம்.

**மகரம்:**
சிலர் உங்களை மரியாதைக் குறைவாக நடத்தலாம். தொழில் விடயங்களில் ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கை அவசியம். வீண் வம்பு விவகாரங்களில் தலையிட வேண்டாம். அயலாரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். எதிலும் அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:**
சுபச்செலவுகள் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வருவர். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும் வகையில் புதிய வரவுகள் வந்து சேரும். குடும்பப் பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். சந்தோஷமான அனுபவம் உண்டு.

**மீனம்:**
வியாபாரிகள், தொழில் அபிவிருத்திக்காக சிலரிடம் பணம் கடன் வாங்கலாம். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் ஒருவரைப் பார்க்கலாம். சிறிய வேலை ஒன்றுக்காக பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். சிரமம் இல்லாமல், சில காரியங்களை இருந்த இடத்திலிருந்தே முடித்துக் கொள்வீர்கள். நாள் முழுவதும் பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

# தமிழர்க
# பேசுவதற்
# சிங்கள
# ஆணை
# தெளிவா

பல நெருக்கடிகளின் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அமோக வெற்றிகளைப் பெற்றுள்ளது.

யாழ். குடாநாட்டில் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்துறைப் பிரதேச சபைகள் தவிர ஏனைய இடங்களில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகக் கூடிய வாக்குகளைப் பெற்றுள்ளது.

நீண்ட காலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் தீவகப் பகுதிகளான வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களில் வாழும் வாக்காளர்களின் வாக்குகள் மட்டுமே அரச தரப்புக்குக் கிடைத்துள்ளன.

### முஸ்லிம்களே அரசுக்கு ஆதரவு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் மிகப் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. குறிப்பாக, அளிக்கப்பட்ட வாக்குகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 71 சதவீத வாக்குகளையும், கிளிநொச்சியில் 68 சதவீத வாக்குகளையும், முல்லைத்தீவில் 82 சதவீத வாக்குகளையும் மன்னாரில் 59 சதவீத வாக்குகளையும், வவுனியாவில் 55 சதவீத வாக்குகளையும் கூட்டமைப்புப் பெற்றுள்ளது.

வடக்கில் வரலாறு காணாத வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்ட ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது 30 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றது. வடக்கில் வாழும் முஸ்லீம் மக்களின் வாக்குகளே இதில் அதிகம் உள்ளடங்குகின்றன.

ஆளுங் கட்சியுடன் இணைந்த முஸ்லீம் கட்சிகளின் தேர்தல் பரப்புரையின் விளைவாகவே வடக்கில் வாழும் முஸ்லீம்கள் தமது வாக்குகளை மஹிந்த அரசின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வழங்கியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, வடக்கில் தமிழ் மொழியைப் பேசுகின்ற முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் தமது கட்சி சார்பாக முஸ்லீம் சமூகத்தவர் ஒருவரையேனும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வேட்பாளாராக நிறுத்தாதது கூட்டமைப்பு செய்த தவறாகும். இது அவர்களது பலவீனத்தையே காட்டுகின்றது.

### மூன்றாவது எதிர்ப்பு

இலங்கையின் வடக்கில் வாழும் மக்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குத் தமது ஆதரவை வழங்காத மூன்றாவது சந்தர்ப்பமாக தற்போது இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் உள்ளது.

இதற்கு முதல் 2010 ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2010 ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல் ஆகிய இரண்டிலும் வடக்கில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமது ஆதரவுகளை வழங்கியிருந்தனர்.


இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இணக்கப்பாட்டு முயற்சிக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் விளைவுகள் பின்வருமாறு அமைந்துள்ளன:

### தேர்தலின் எதிரொலிகள்

1. வட மாகாண சபைக்கான தேர்தல் மிக அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தற்போது நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வெற்றி பெற்றதைப் போன்று மாகாண சபைத் தேர்தலிலும் வெற்றி பெறும். அத்துடன் நாடாளுமன்றில் உள்ள எதிர்க்கட்சி ஒன்று அதிகாரத்தைத் தனது கையில் எடுத்துக் கொள்கின்ற ஒரேயொரு மாகாண சபையாக வடக்கு அமையும். ஆனால் எதிர்க்கட்சி ஒன்றால் ஆளப்படுகின்ற மாகாண சபையானது மிகச் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான அனுமதி வழங்கப்படவேண்டும்.

2. அண்மைக் காலங்களில் இடம்பெற்ற சில தேர்தலின் பெறுபேறுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கில் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசியற் கட்சி என்பதை நிரூபித்துள்ளது. அத்துடன் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களால் அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏகப் பிரதிநிதிகளாகவும் கூட்டமைப்பினர் உள்ளனர். இந்த அடிப்படையில், இலங்கை அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் பல சுற்றுப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படவேண்டும்.

3. இலங்கையின் தென்பகுதியில் வாழும் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அரசுக்கு விசுவாசமாக இருக்கும் அதேவேளையில், வடக்கில் வாழும் தமிழ் மக்கள் தற்போதைய இலங்கை அரசுக்கு எதிராளிகளாக உள்ளனர். இந்த நிலையில் போரின் பின்னரான காலப்பகுதியிலும் கூட இலங்கையில் வாழும் இனக்குழுமங்களுக்கிடையில் மிகப் பெரும்




வேறுபாடுகள் உள்ளன என்பது தெட்டத் தெளிவாகின்றது. இனப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் அரசியல் பிளவு என்பது இந்த நாட்டில் உண்மையான இணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான மிகப் பெரும் சவாலாக உள்ளது.

### சந்திரிகாவின் ஞானம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தற்போது நாட்டில் நடைபெற்று வரும் சம்பவங்கள் தொடர்பாகக் கடந்த வார இறுதியில் பேசி இருந்தார். முன்னாள் நீதியரசர் பாலகிட்ணர் நினைவுப் பேருரையை ஆற்றிய அவர் தனது மனதைத் திறந்து பல உண்மைகளை எடுத்துரைத்துள்ளார்.

தான் ஜனாதிபதியாகப் பதவியிலிருந்த இரு ஆட்சிக் காலத்திலும் மக்கள் தனது அரசுக்கு ஏகோபித்த ஆதரவை வழங்கியிருந்தனர் என அவர் தனது உரையில் தெரிவித்தார்.

''போரை வெற்றி கொண்டதுடன் எல்லாம் முடிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..களுடன்
# ..ற்கான
# .. மக்களின்
# ..னது

**"வடக்கு வாழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை மீண்டும் ஒரு முறை பெற்றுக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை மேற்கொள்வதற்கான சந்தரப்பமாக இலங்கை அரசு தென்பகுதி மக்களிடம் இருந்து தான் பெற்றுக் கொண்ட தெளிவான ஆணையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்"**




விட்டது என அரசு நினைக்கக் கூடாது. இந்த நாட்டில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் சமமாக மதிக்கப்படுவதுடன், அவர்களுக்கான அரசியல் அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கான அபிவிருத்தியை மட்டும் மேற்கொள்வதன் மூலம் அவர்கள் தமக்கான சகல உரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியாது'' என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரக் கட்சியிலுள்ள ஏனைய முக்கிய உறுப்பனர்களின் ஆதரவுடன் சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்க தற்போது தனது மன உணர்வை வெளிப்படுத்தியுள்ளார்.

பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள், முஸ்லீம் கட்சிகள், மலையக தமிழ்க் கட்சிகள் ஆகியனவும் சந்திரிக்காவின் கருத்துக்களுக்கான தமது ஆதரவுகளைத் தெரிவித்துள்ளன.

இலங்கையில் உண்மையான இணக்கப்பாடு ஒன்றை உருவாக்குவதன் மூலம், இங்கு வாழும் அனைத்து இன மக்களும் கௌரவத்துடன் வாழ்வதற்கேற்ற நல்லதோர் அரசியல் தீர்வு உருவாக்கபட வேண்டும் என்பதை இக்கட்சிகள் மிகவும் விரும்புகின்றன.

**நித்திய பாரதி**

### அரசு முயலட்டும்

இந்த நிலையில் வடக்கு வாழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை மீண்டு மொருமுறை பெற்றுக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பமாக இலங்கை அரசு தென்பகுதி மக்களிடமிருந்து தான் பெற்றுக் கொண்ட தெளிவான ஆணையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ★

(நன்றி: புதினப்பலகை)

## படகைச் சுமக்கும் பக்தர்கள்



ஒரு காட்டு வழியே எட்டு அறிவாளிகள் நடந்து சென்று கொண்டிருந்தனர். அந்த எட்டுப் பேரும் நன்றாகப் படித்தவர்களும் விவரம் தெரிந்தவர்களுமாக இருந்தனர்.

அவர்கள் சென்றுகொண்டிருந்த போது ஆறு ஒன்று குறுக்கிட்டது. அதைக் கடந்து தான் மறுகரையை அடைய வேண்டியிருந்தது. எனவே எப் படிச் செல்வது என்று யோசித் தனர். அப்பொழுது கரையோர மாகப் படகு ஒன்று கட்டப் பட்டிருந்தது. ''அதோ படகு!'' என்றார் ஓர் அறிவாளி.

''வாருங்கள், அதில் போகலாம்!'' என்றார் இன்னொருவர். உடனே, அதுதான் சரி என்றார் மற்றொருவர்.

''எட்டுப்பேரும் ஏறி உட்கார்ந்தார்கள். படகைச் செலுத்தினார்கள். அடுத்த கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அதன்பின்பு அவர்களுக்குள் ஓர் விவாதம் ஆரம்பமானது. அதிகம் படித்தவர்கள் அல்லவா?

ஒருவர் சொன்னார்.

''இந்தப் படகு எமக்கு உதவி செய்திருக்கு! இது இல்லை என்றால் நாம் இந்தக் கரையை அடைந்திருக்க முடியாது!'' என்றார்.

''நீங்க சொல்வது சரிதான்!'' என்றார் இன்னொருவர்.

''இது செய்த உதவி மூலமாகத்தான் நாம் எட்டுப்பேரும் இந்த ஆற்றைக் கடந்திருக்கிறோம் இதன் உதவிக்கு நாம் நன்றிக்கடன் பட்டிருக்கின்றோம். ஆகவே இந்தப் படகுக்கு நாம் பதில் மரியாதை செய்யவேண்டும்! '' என்றார் அவர்.

''அதை எப்படிச் செய்வது?'' என்றார் இன்னொருவர்.

''நான் ஒரு யோசனை சொல்கிறேன்'' என்றார் மற்றையவர்.

''சொல்லுங்கள்?'' என்றார்.

''எமக்கு உதவி செய்திருக்கும் இந்தப் படகுக்கு மரியாதையும் நன்றியும் செலுத்தும் முறையில் அதையும் எல்லோரும் சேர்ந்து தூக்கி, நம் தலையிலே சுமந்து செல்வதுதான் நியாயமானது. என்ன சொல்கிறீங்க? என்று கேட்டார்.

''உண்மைதான்! எம்மை அந்தப் படகு சுமந்தது இல்லையா? அதனால் பதிலுக்கு நாம் அதைச் சுமக்கிறதுதான் சரியான நன்றியாக இருக்கும்''

''இதுதான் சரியான யோசனை!'' என்றார் ஒருவர்.

எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். அவ்வளவுதான். உடனே அந்தப் படகைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு எட்டுப்பேரும் நடக்க ஆரம்பித்தனர். அப்படியே அவர்கள் போகவேண்டிய கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தனர்.

அந்த ஊர் மக்களுக்கு இவர்களின் செயல் வேடிக்கையாக இருந் தது. வியப்பாகவும் இருந்தது.

'' எதுக்காக இப்படிச் செய்கிறீங்கள்?'' என்று ஊர்மக்கள் கேட் டனர்.

''படகு என்பதே மனிதர்களைக் கரை சேர்ப்பதற்காக இருக்கிறது. நாம் எதுக்காக அதைச் சுமக்க வேண்டும்? அதை ஆற்றங்கரையிலேயே விட்டுவிட்டு வந்துவிட வேண்டியது தானே?'' என்றனர்.

இதைக்கேட்டுவிட்டு அந்த எட்டுப்பேரில் ஒருவர் சொன்னார்.

''என்ன இப்படிச் சொல்கிறீங்கள். உங்களுக்கு நன்றி உணர்வே கிடையாதா? நல்ல மனிதர்களுக்கு நன்றி உணர்வு மிகவும் முக்கியம். அது எங்களிடம் இருக்கிறது. உங்களிடம் இல்லை. நன்றி மறப்பது நல்லதல்ல. அதனாலேதான் எங்களைக் கரை சேர்த்த படகுக்கு நாம் இப்படி நன்றி செலுத்துகிறோம்!'' என்றார்.

''அப்படி என்றால் மேற்கொண்டு என்ன செய்யப்போகிறீங்கள்?''

''இந்தப் படகு இனிமேல் எப்பவும் எங்கள் தலைமேல்தான் இருக்கும்!'' புத்தர் கூறிய ஒரு சிந்தனையை எடுத்து நோக்கலாம்.

'வழி' இருக்கிறது பாருங்கள்... அதையே 'முடிவு' என்று நினைத்து வாழ்நாள் பூராகவும் அதையே பற்றிக்கொண்டு மனிதர்கள் துன்பப்படுகின்றனர் என்பது அவர் கூறும் கருத்து.

ஒரு மனிதன் பிரார்த்தனை செய்கிறான். அதன் மூலமாக அவனுக்கு ஒரு விழிப்புணர்வு கிடைத்து விடுகிறது என்று எடுத்துக் கொள்வோம். அதன்பின் அவனுக்கு எதற்கு அந்த வழிபாடு? கைவிட வேண்டியதுதானே! ஆனால், மனிதன் அப்படிச் செய்வதில்லை. வழிபாட்டையே இலட்சியமாக வைத்துக்கொண்டு அதையே வலுக்கட்டாயமாகப் பின்பற்றுகிறான். அந்த வழிபாட்டுக்கு அவன் ஒரு கைதியாக ஆகிவிடுகிறான். எனவே அதைவிட்டு அவனால் வெளியே வரமுடியவில்லை. வழிபாடு மூலமாக சாதித்து விடலாம் என்று நினைப்பது தவறு என்கிறார் ஓஷோ.

வழிபாடு என்பது ஒரு முள். காலில் குத்திய முள்ளை எடுப்பதற்கு இன்னொரு முள்ளைப் பயன்படுத்துகிறோம். முள்ளை எடுத்தாச்சு! அதன்பிறகு இரண்டு முள்ளையும் வீசி விட வேண்டியதுதானே?

இரண்டு முள்களுக்குமே இனி பயன் இல்லை. பழைய முள் இருந்த இடத்தில் புதிய முள்ளை குத்தி வைத்தால் வலிதான் தொடரும். அப்படிச் செய்கின்றவன் முட்டாள். ஆனால், அப்படிப்பட்ட முட்டாள்களுக்கு உலகத்திலே பஞ்சமே இல்லை என்கிறார் அவர்.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீடான
# கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



ரி. திலீப்குமார்,
விவேகானந்தா கல்லூரி,
கொழும்பு.

பரீட்சை இலக்கம்: 12


## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ **வினாத்தாள்-1** நேரம்: 45 நிமிடங்கள்

* எல்லா வினாக்களுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி விடையளிக்குக.
* பின்வரும் பாடலை வாசித்து சரியான விடையினைத் தெரிவுசெய்க.


சத்தம் தொடர்ந்து போட்டிடுமே
நித்தம் வெளியில் காட்டிடுமே
தத்தி தத்தி சென்றிடுமே
தண்ணீர் என்றால் ஒன்றிடுமே
பாம்பைக் கண்டால் நடுங்கிடுமே
பாய்ந்து ஓடி ஒடுங்கிடுமே.

01. இப்பாடலில் விபரிக்கப்படும் பிராணி எது?



1) 2) 3) 4)

02. கீழ் உள்ள பாடலில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் எது?
நாட்டினிலே நடப்பதெல்லாம்
நல்ல பல செய்தியெல்லாம்
வீட்டினிலே காட்டிவிடும்
விந்தையான பெட்டியிது.




1) 2) 3) 4)

03. நாம் சுத்தமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் கூற்றின் கீழ்க்கோடிடுக.
1) கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
2) இரக்கப்போனாலும் சிரிக்கப்போ.
3) சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
4) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

04. பாலனின் நடத்தைகளை அவதானித்த அவனது வகுப்பாசிரியர் அவனது தாயாரிடம் ''பாலன் எதிர்காலத்தில் சிறந்த ஒழுக்கமுடையவனாக வாழ்ந்து கல்வித்துறையில் பெரும் பதவியில் இருப்பான்.'' என்று கூறினார். இச்சம்பவத்திற்குப் பொருத்தமான பழமொழி,
1) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
3) வளரும் பயிர் முளையில் தெரியும்.
4) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

05. பிழையான வாசிப்பைக்காட்டும் தராசின் கீழ்க் கோடிடுக.





1) 2) 3) 4)

06. 8cm நீளமும், 6cm அகலமும் கொண்ட வெள்ளித்தகட்டின் விலை ரூபா 480 ஆகும். அதன் பாதி நீளம், பாதி அகலம் கொண்ட வெள்ளித்தகட்டின் விலை யாது?
1) ரூபா 240  2) ரூபா 120  3) ரூபா 100  4) ரூபா 360

07. விளையாட்டு ஒன்றிற்காகக் குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களிற்கு A, B, C என ஆங்கில எழுத்துக்கள் தனித்தனியே எழுதப்பட்ட அட்டைகள் கையில் கொடுக்கப்பட்டன. அவர்கள் அனைவரும் சம இடைவெளியில் அவ்வட்டைகளைத் தாங்கிய வண்ணம் வட்டமாக நின்றனர். A என்ற மாணவனுக்கு நேர் எதிரே E என்ற மாணவன் நின்றான் எனின், C என்ற மாணவனுக்கு எதிரே உள்ள மாணவன் யார்?
1) D  2) F  3) G  4) H

08. வட்டமாக நின்ற மாணவர்கள் எத்தனை பேர்?
1) 4 பேர்  2) 6 பேர்  3) 8 பேர்  4) 10 பேர்

09. வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.




1) 2) 3) 4)

* பின்வரும் கணிதச் செய்கையைப் பயன்படுத்தி 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.


```
  x y z
+ x y z
  9 1 8
```
ஆயின்,

10. X x Z இன் பெறுமானம் யாது?
1) 45  2) 36  3) 30  4) 20

11. x + y + z இன் பெறுமானம் யாது?
1) 16  2) 18  3) 20  4) 24

12. 35 அடி ஆழமான கிணறொன்றில் தவறுதலாக தவளை ஒன்று விழுந்துவிட்டது. அது கிணற்றை விட்டு வெளியே வருவதற்கு தினமும் 5 அடி மேலே ஏறினால் ஓர் அடி கீழே சறுக்கும். எனவே, தவளை எத்தனையாவது நாள் கிணற்றை விட்டு வெளியேறும்?
1) 7ஆம் நாள்  2) 8ஆம் நாள்  3) 9ஆம் நாள்  4) 10ஆம் நாள்

* தரப்பட்டுள்ள நிறுத்தல்களை அவதானித்து 13ஆம், 14ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.




13. ○△△△ ஆகியவற்றின் மொத்த நிறை யாது?
1) 2kg 800g  2) 1kg 150g  3) 1kg 300g  4) 1kg 800g

14. ○△ ஆகியவற்றின் மொத்த நிறை யாது?
1) 500g  2) 475g  3) 600g  4) 350g

15. a = 5, b = 3, c = 1, d = 6 இதன்படி b x d = a + b + c + ? + ? வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய எழுத்துக்கள் யாவை?
1) b, d  2) b, a  3) d, a  4) d, c

16. ராஜாவின் சட்டைப்பையில் மூன்று வகையான நாணயங்கள் இருக்கின்றன. அவற்றின் மொத்த பெறுமதி 28 ரூபா ஆகும். அந்நாணயங்கள் எவை?
1) ரூபா 5 நாணயங்கள்-4, ரூபா 2 நாணயங்கள்-3, ஒரு ரூபா நாணயங்கள்-3.
2) ரூபா 5 நாணயங்கள்-5, ரூபா 2 நாணயங்கள்-1, ஒரு ரூபா நாணயங்கள்-2.
3) ரூபா 5 நாணயங்கள்-3, ரூபா 2 நாணயங்கள்-5, ஒரு ரூபா நாணயங்கள்-2.
4) ரூபா 5 நாணயங்கள்-4, ரூபா 2 நாணயங்கள்-2, ஒரு ரூபா நாணயங்கள்-4.

17. மரக்கறி, கத்தரிக்காய் ஆகிய இரண்டுக்கும் இடையேயான தொடர்பை வெளிப்படுத்தும் சரியான உரு.




1) 2) 3) 4)

18. ஒருவர் ஒரு மணித்தியாலத்தில் 5km மாறா வேகத்தில் நடந்து செல்வாராயின், 5 பேர் ஒரு மணித்தியாலத்தில் அதே வேகத்தில் எத்தனை கிலோமீற்றர் நடந்து செல்வார்கள்?
1) 25km  2) 20km  3) 15km  4) 5km

19. 8 வருடங்களிற்கு முன்னர் நிரோவின் வயது 3 ஆகும். இப்பொழுது தந்தையின் வயது நிரோவின் வயதைப்போல் நான்கு மடங்காகும். தற்போது தந்தையின் வயது யாது?
1) 20 வயது  2) 38 வயது  3) 44 வயது  4) 48 வயது

20. எனக்கு மூன்று நண்பர்கள் உள்ளனர். இவ்வருடம் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரது பிறந்த நாளிற்காக வாழ்த்து மடல்களைப் பரிமாறிக்கொண்டோம். எனின், இவ்வருடம் எம்மால் பரிமாறப்பட்ட வாழ்த்துமடல்கள் எத்தனை?
1) 9  2) 12  3) 16  4) 18


21. இரு எண்களின் கூட்டுத்தொகை 13 ஆகும். அவ்விரு எண்களையும் பெருக்கும்போது 42 பெறப்பட்டது எனில், அவ்விரு எண்களும் எவை?
1) 5, 8  2) 4, 9  3) 6, 7  4) 3, 10

22. 8 மாபிள்கள் கொடுத்து ஒரு சிறிய பந்து வாங்கலாம். ஒரு பொம்மை வாங்குவதற்கு 5 சிறிய பந்துகள் கொடுக்க வேண்டும். எனின், மூன்று பொம்மைகள் வாங்கிக் கொடுக்க வேண்டிய மாபிள்கள் எத்தனை?
1) 120 மாபிள்கள்  2) 80 மாபிள்கள்  3) 40 மாபிள்கள்  4) 35 மாபிள்கள்

23. மதனிடம் 74 ரூபா உள்ளது. ரோசியிடம் 58 ரூபா உள்ளது. இவர்கள் இருவரும் சமனாகப்பணம் வைத்திருக்க வேண்டுமாயின், மதன் ரோசிக்கு எத்தனை ரூபா கொடுக்க வேண்டும்?
1) ரூபா 16  2) ரூபா 12  3) ரூபா 10  4) ரூபா 8

24. நண்பகல் ஒன்றைக் காட்டும் வகையில் வரையப்பட்டுள்ள உரு எது?

1) 2) 3) 4)



25. நான் காலை 8 மணியளவில் காரியாலயம் நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது எனது நிழல் என் பின்னால் விழுந்தது எனின், காரியாலயம் அமைந்துள்ள திசை யாது?
1) வடக்கு  2) கிழக்கு  3) தெற்கு  4) மேற்கு

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களையும் கவனியுங்கள்

அது ஒரு சாப்பாட்டுக்கடை. வழமையாக வேலை முடிந்த கையோடு அங்கு வடையையோ, போளியையோ ரீயுடன் வயிற்றுக்குள் தள்ளாவிட்டால் அன்றைநாள் பத்தியப்படாத மாதிரியே இருக்கும். நேரம் 5 மணியாகிவிட்டதால் வயிறு புகையத் தொடங்கியது.

கடைக்குச் சென்று வயிறுக்கு கள்ளத்தீனி போடு மட்டும் இந்தப் புகைச்சலை அடக்கமுடியாது. வழமையாக கடையில் பஜாரடிக்கும் நண்பர்களும் தாங்கள் அந்தக் கடைக்குள் வந்துவிட்டதாக அடிக்கடி மிஸ்கோல் போட்டு எரிகிற வயிற்றுக்கு எண்ணெயை ஊற்றிக்கொண்டிருந்தார்கள்.

இனியும் பொறுக்கமுடியாது. கடை இருந்த பக்கமாக கால்கள் தம்பாட்டில் நடக்கத்தொடங்கின. நான் நினைத்ததை விடவும் கடையில் கூட்டம் மிக அதிகம். எல்லா மேசைகளும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. மிகக்கஷ்டப்பட்டு ஒரு மேசையைக் கண்டுபிடித்து நானும் , ஏற்கனவே என் வருகைக்காகக் காத்திருந்த நண்பர்களும் உட்கார்ந்து கொண்டோம்.

நான் வரும் வரைக்கும் பச்சைத்தண்ணி கூட வாயில் வைக்காமல் காத்திருக்குமளவுக்கு என்னில் எல்லையற்ற அன்பு கொண்டவர்கள் என் நண்பர்கள் என்று தவறாக நினைத்து விடாதீர்கள். இன்றைக்கு கடையில் வடையும் ரீயும் வாங்கிக் கொடுக்கும் செலவை ஒவ்வொரு நாளும் ஒருவர் வீதம் பொறுப்பெடுத்துக் கொள்வோம். இன்றைக்கு என்னுடைய முறை. அதுதான் இத்தனை நேரக் காத்திருப்பு.

மேசையில் உட்கார்ந்து பத்துப் பதினைந்து நிமிடங்களாக தாளம் தட்டிக் கொண்டிருந்ததுதான் மிச்சம். வடையும் வரவில்லை; ரீயும் வரவில்லை. கடைப்பணியாளர்கள் கூட வரவில்லை. அவ்வளவு ஏன்? ஈ, எறும்பு கூட ஏனென்றும் எட்டிப்பார்க்கவில்லை. எவ்வளவு நேரம்தான் பசியோடு பொறுத்திருப்பது. கொஞ்சம் திரும்பிப் பார்த்தோம். எங்களுக்கு பின்னால் இருந்த மேசையில் கடையில் உள்ள எல்லா அயிட்டங்களோடும் அணிவகுத்தபடி நின்றிருந்தனர் பணியாளர்கள்.

மூலம் தள்ளுமளவுக்கு நாங்கள் கத்துவதைக் கூட கேளாதவர்களாக அந்த மேசையில் இருந்தவர்களிடம் அது வேணுமா? இது வேணுமா? என்று வழிந்து கொண்டிருந்தார்கள். மேசையில் இருந்தவர்கள் இந்த உபசரிப்புகளால் உச்சி குளிர்ந்து போனவர்களாக அவர்கள் கொண்டுவரும் பண்டங்களை மேசையில் பரப்பி, அழகு பார்த்துக் கொண்டிருந்தனர். மேசையில் உட்கார்ந்திருந்தவர்கள் அப்படியொன்றும் பெரிய வி.ஐ.பிகள் அல்லர். இங்கிருந்து புலம் பெயர்ந்து சென்று , இப்போது விடுமுறையைக் கழிப்பதற்காகத் தாயகம் வந்திருப்பவர்கள்தான்.

அரை மணித்தியால ஆரவாரத்துக்குப் பிறகு அவர்கள் புறப்பட ஆயத்தமாயினர். செல்லும்போது பணியாளர்களின் மனம் குளிரும்படி அவர்கள் கைகளில் 100 ரூபாய்த்தாள்களை வைத்துவிட்டுத் தான் சென்றார்கள். அதன் பின்னர்தான் எங்கள் மேசையின் பக்கம் பணியாளர்களின் கடைக் கண் பார்வைத் தரிசனம் கிடைத்தது. ஏதோ கடமைக்காக எங்களருகே வந்தார்கள்.

வடையோ?

கேட்ட கேள்வியே ஏன் வந்தனீங்கள்? என்பது போல் - முகத்தில் அடித்ததைப் போல் - இருந்தது.

எங்களின் பதிலுக்காகக் காத்திருக்காமல் மிச்சமாயிருந்த வடைகளையும், சம்பலையும் எங்கள் மேசையில் கொஞ்சம் சத்தம் வரக் கூடிய வகையில் தட்டை எறிந்து விட்டுச் சென்றார் ஒரு பணியாளர். ஏதோ அற்ப புழுவைப் பார்ப்பது போலவே அந்தப் பணியாளர்களின் பார்வை இருந்தது.சத்தம் போடாமல் அந்த வடையை சாப்பிடுவது தான் எங்கள் தலையெழுத்தாக இருந்தது. கடையில் வேலை செய்பவர்களுக்கு 100 ரூபா கொடுக்குமளவுக்கு நாங்க ளென்ன வெளிநாட்டிலிருந்தா வந்திருக்கிறோம்?

## ஓடுகாலி

இத்தகைய சம்பவங்களை உணவகங்களில் மாத்திரமல்லாது யாழ்ப்பாணத்தில் உள்ள அநேக வர்த்தக நிலையங்களிலும் இப்போது சர்வசாதாரணமாக காணமுடியும்.

பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் இப்போது விடுமுறைக் காலம் என்பதால் இங்கிருந்து புலம் பெயர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கு படையெடுக்கத்தொடங்கி விட்டார்கள். அதிலும் இவ்வளவு நாள்களும் இருந்த கிளியரன்ஸ் நடைமுறையும் நீக்கப்பட்டுவிட்டதால் புலம்பெயரிகளின் வரவுவீதம் முன்னைய காலங்களை விடவும் அதிகரித்த நிலையில் உள்ளது. யாழ்ப்பாணத்தில் எங்கு போனாலும் காத்தோட்டமான உடைகளோடு உலாவரும் வெளிநாட்டுக்காரர்களை (எம்மவர்கள்தான்) காணமுடியும். விடுமுறையைக் கழிக்க வந்தவர்கள் என்பதால் அவர்கள் கைகளில் யூரோக்களும், பவுண்ஸ்களும் தாரளமாக புழங்குகின்றன. அதனால் கேட்டுக் கேள்வியின்றி வர்த்தக நிலையங்களில் என்ன விலை சொன்னாலும் மறு பேச்சுப் பேசாமல் , சொன்ன விலைக்கே பொருள்களை வாங்குகின்றனர். வெளிநாட்டுக்காரர்களை இலகுவாக இனங்காண முடியும் என்பதால், அவர்கள் தாம் சொன்ன விலைக்கே பொருள்களை வாங்குவார்கள் என்பதை உணர்ந்து கொண்ட கடைக்காரர்களும் வழமையான விலையை விடவும் அதிகரித்த விலையையே பொருள்களுக்குச் சொல்லும் உத்தியைக் கடைப்பிடிக்கின்றனர். உணவங்களுக்குச் சென்றாலும் காசை வீசுவதற்கு புலம்பெயரிகள் தயங்குவதில்லை. அந்த விசுக்கலின் மயக்கத்தில் தங்கள் பழைய வாடிக்கையாளர்களையே மறந்துவிடுகிறார்கள் கடைக்காரர்கள்.

இந்தியாவில் வேடந்தாங்கல் என்னுமிடத்தில் பறவைகள் சரணாலயம் உண்டு. அங்கு ஒரு சீசனுக்கு வெளிநாட்டில் இருந்து பறவைகள் வந்துவிட்டு சீசன் முடிந்ததும் தத்தம் இடத்துக்குப் பறந்து சென்றுவிடும் இயல்பைக் கொண்டிருப்பதைக் காணமுடியும்.

அதே போன்று விடுமுறை முடிந்ததும் புலம்பெயரிகள் தத்தம் நாடுகளுக்குச் சென்றுவிடுவார்கள். ஆனால் உள்ளூர்க்காரர்கள்தான் எப்போதும் இங்கிருப்ப வர்கள். எனவே எப்போதும் எங்களையும் கொஞ்சம் கவனியுங்கள் கடைக்காரர்களே!

*

*(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

26. அட்டைகளில் சில உருக்கள் வரைந்து முகம் பார்க்கும் கண்ணாடியில் காட்டப்பட்டது. இதில் உருவில் மாற்றம் எதுவும் தென்படாத அட்டையின் கீழ்க்கோடிடுக.

| ←↔→ | →→→ | ←←← | ←←→ |
|---|---|---|---|
| 1) | 2) | 3) | 4) |

27. ''எல்லா மாணவர்களும் ஒழுக்கமுடையவர்'' இக்கூற்றிலிருந்து விமல் ஒரு மாணவன் எனில், விமல் தொடர்பாக எடுக்கக்கூடிய சரியான முறை,
 1) விமல் நன்றாகக் கற்கக்கூடியவன். 2) விமல் திறமைசாலி.
 3) விமல் ஒழுக்கமானவன். 4) விமல் ஒழுக்கமற்றவன்.

28. ஆகாயத்தில் சென்றுகொண்டிருந்த விமானம் திடீரென அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. இதற்குக் காரணமாக அமையக்கூடிய சரியான கூற்று,
 1) எரிபொருள் தீர்ந்துவிட்டமை.
 2) பயணி அவசரமாகத் தரையிறங்க வேண்டியிருந்தமை.
 3) இயந்திரக்கோளாறு காரணமாக.
 4) எல்லோரும் உணவருந்துவதற்காக.

29. வைத்தியசாலையில் நாம் அவதானிக்க முடியாத அறிவித்தல்களில் ஒன்று,
 1) கடிநாய் கவனம். 2) அமைதியை போற்றுக.
 3) புகைத்தல் தடை. 4) ஆயுதங்கள் கொண்டுசெல்லத் தடை.

* 30ஆம், 31ஆம் வினாக்களில் இரு நிகழ்ச்சிகள் ஒழுங்கற்ற முறையில் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்கு முறைப்படி குறிக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

30. A - இரைதேடி உண்டது. B - மாலை கூடு திரும்பியது.
 C - அதிகாலையானது. D- சற்றுநேரம் மரத்தின் மீதிருந்து ஓய்வெடுத்தது.
 E - கூட்டை விட்டுப் பறந்தது.
 1) D, E, C, A, B 2) C, E, A, D, B
 3) C, E, D, A, B 4) C, E, A, B, D

31. A - சதுரத்தை வரைந்தான். B - புள்ளிகளைக் குறித்தான்.
 C - தேவையான பொருள்களை எடுத்தான்.
 D - அடிமட்டத்தால் புள்ளிகளை இணைத்தான்.
 E - பென்சிலை கூர்மையாக்கினான்.
 1) E, C, B, D, A 2) C, E, B, A, D
 3) C, E, A, B, D 4) C, E, B, D, A

32. வேறுபட்ட தொடர்பைக் கொண்ட கூட்டத்தின் கீழ்க்கோடிடுக.
 1) பாடசாலை → ஆசிரியர் → கல்வி
 2) வைத்தியசாலை → வைத்தியர் → மருத்துவம்
 3) நீதிமன்றம் → நீதிபதி → வழக்கு
 4) சந்தை → வியாபாரி → பொருள்

33. 1) கரப்பந்தாட்டம் → விளையாட்டு → கிரிக்கெட்
 2) கத்தரிக்காய் → வெண்டிக்காய் → கரட்
 3) கார் → பஸ் → லொறி
 4) மஞ்சள் → நீலம் → சிவப்பு

34. ''சத்தியம்'' என்ற சொல்லைக்குறிக்கும் மிகப்பொருத்தமான குறியீடு,
 1) ○○○□△ 2) ○○○○△
 3) ○⊙●□△ 4) ○○○□○

* தரப்பட்டுள்ள எழுத்துக்களை அடிப்படையாகக்கொண்டு 35ஆம், 36ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| ங், க், ம், ஞ, ன, ல, தி, ச, க, கோ, ர, து, மி, கி |
|---|

35. பறவைகளில் ஒன்று - ..........................................

36. கடலில் வாழ்வது - ..........................................

* பின்வரும் வரிகளை வாசித்து 37ஆம், 38ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.
 அந்திநேர ஆதவனைப் பார்-அவன்
 தேய்ந்து தேய்ந்து போவதைப் பார்
 செக்கச் சிவந்த வானத்தைப் பார்-அதை
 சிறுமுகில் வந்து மறைப்பதைப் பார்.

37. ''அந்தி நேரம்'' என்பதிலிருந்து விளங்கிக்கொள்வது யாது?
 ..........................................

38. சிறுமுகில் எதை மறைக்கின்றது?
 ..........................................

* 39ஆம், 40ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை எழுதுக.

39. உருவமில்லை, நிறமில்லை, உயிர் வாழ உதவிடுவேன். உக்கிரத்தால் அழித்திடுவேன். உலகினிலே உலாவிடுவேன். நான் யார்?
 ..........................................

40. ஆழ்கடலில் நான் பிறப்பேன், அழகுத்தங்கை அணிகலனில் நான் இருப்பேன். காண்பவர் கண்களைப் பறிக்கும் ஒளியுடையேன். நான் யார்?
 ..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
03 ஒகஸ்ட் 2011 புதன்கிழமை

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான No.1 Prima புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 04.08.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

★ சூட்டிபாம் சென்ரர் - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம் - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பருத்தித்துறை -0771392593
★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி - 0776225944

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944

# மாணவிகளுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள்

சுகாதார அமைச்சின் விஷன் 2020 என்னும் திட்டத்தில் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த இரண்டு மாணவிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

வீரசிங்கம் விதுஷா (வயது-15), தர்மலிங்கம் தனுஷா (வயது- 14) ஆகிய இருவருக்குமான மூக்குக் கண்ணாடிகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளதாகவும் இந்த மாணவர்களை வந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் இராமாவில் நலன்புரி நிலையப் பாடசாலையில் நடத்தப்பட்ட கண்சிகிச்சை முகாமில் தெரிவு செய்யப்பட்ட இந்த இரு மாணவிகளும் தற்போது தமது சொந்த இடத்துக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
05.08.1916

மறைவு:
13.08.2010

**திருமதி தங்கரத்தினம் கந்தசாமி**

*(உடுவில் பகுதி முன்னாள் பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர், அமரர் அ. கந்தசாமியின் பிரியபத்தினி)*

திதி: நாகசதுர்த்தி

வருவதை முன்னறியும் மக ரிஷிகள் போல
மரணத்தை முன்னுரைத்து என்னருகே
இன்று இருங்கள் என்றாய்
ஓடி மறைந்து ஓராண்டே ஆயினும்
ஆற முடியவில்லை உந்தனின் பிரிவை
வீட்டுக்கோர் காவல் தெய்வமாய் இருந்தாய்
பிள்ளைகளுக்கு வழிகாட்டும் நூலகமாய்த் திகழ்ந்தாய்
நாளும் மருதடியானை நினைந்துருகி வாழ்ந்ததனால்
நாகசதுர்த்திப் பெருநாளில் நற்கதி அடைந்தனையோ நற்றாயே!

'சிவை', உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த Roman Catholic உயரம் 5' 6" 29 வயதுடைய MBBS டாக்டருக்கு படித்த மணப்பெண் தேவை.
தொடர்பு Phone No:
0213210788

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டுக்கு 45 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் கீழ் கண்ட வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

1. இரவு காவலாளி (இரவு 6 மணிமுதல் காலை 6 மணிவரை) சம்பளம் பேசித் தீர்க்கலாம்.
2. வீட்டுத் தோட்டப்பராமரிப்பாளர் (காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை) சம்பளம் 10000/=

மே/பா உதயன்
விள. இல- 4165,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஸ்ரீவீரஆஞ்சநேயர்ஜோதிடநிலையம்

'பண்டித் ஆஞ்சனப்பா'

இந்தியாவில் இருந்து வருகை தந்த பிரபல ஜோதிடர் கைரேகை, நாம நட்சத்திரம், வெளிநாட் டுப் பயணம், கல்வி, உத்தியோகம் வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் ஒரு முறை இவரைச் சந்தித்துத் தீர்வு காணுங்கள்.

அறை எண்-100
கிறீகஸ் ஹோட்டல் அன் றெஸ்ரோறன்ற்,
205, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்.
தொ.பே- 0772725004

நேரம் காலை 9 மணி தொடக்கம்
இரவு 7 மணிவரை

## ஓம் சக்தி ஜோதிட நிலையம்

ஜோதிடர் - நரேந்திரன் சுவாமி
தொ.பே.: 0779759393
0756794959

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் ஜாதகம், கைரேகை, கம்பியூட்டர், ஜோதிடம் என்பன நல்ல முறையில் கூறுவார்.
சந்திக்கும் நேரம்: காலை 7 மணி, இரவு 7மணி
தொடர்பு : அமுல் கிறீம் ஹவுஸ் அன் பேக்கரி,
இல.452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்



இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி
**காலம்: 14.08.2011 பி.ப. 2 மணி**
(ஞாயிற்றுக்கிழமை)

பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி சமுகம் தரவும்

ஊரின் கண் மலர்ச்சி எங்கள் இதயத்தின் வளர்ச்சி என்றும்
சிருற்ற பணிகளாலும் சிறந்த நல்லுழைப்பாலும்
வேரின் வழியெம் விழுதுகளுக்கோர் துணையாம்
மேறுற்றுயர்ந்தீர் எம் பெருந்தகையே வாழிய நீர்!

தேவா மணிவிழாச் சபை

வாழ்த்துவோர்: *இணுவில் பொதுநூலகமும் சனசமூக நிலையமும்
இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் அடியார்கள்.*

## சிவ பார்வதி ஜோதிட நிலையம்

*பண்டித் - மஞ்சுநாத சுவாமி*
தொ.பே:- **077 8949044**

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன் - மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றுக்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்றுகூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி, உத்தியோகம், திருமணயோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்துசாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

**சண்ஜெய உணவகம் (மேல்மாடி)**
414, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
(HNB வங்கி அருகில், யாழ்.பஸ் நிலையம் முன்பாக),
நேரம்: காலை 7 மணிமுதல் மாலை 7.30 மணிவரை.
கட்டணம் ரூபா 101/=
(6427)

## NIBM

BUILDING COMPETENCIES

# தேசிய வியாபார முகாமை நிறுவனம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC)
அங்கீகாரம் பெற்ற அரச நிறுவனம் உங்களுக்கும் வாய்ப்புகளை வழங்குகிறது.

### கணினிச் சான்றிதழ் கற்கை நெறிகள்

- Certificate Course in Computer Science
- Certificate Course in Office Packages
- Certificate Course in Internet and Email
- Certificate Course in Photo and Video Editing

தொடர்புகளுக்கு: 077 071 6974, 021 222 0360
021 222 0361, 021 222 0362




இல. 40 கல்லூரி வீதி
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்.



*ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக*

## முதலாவது பிறந்த தின அழைப்பு

நிகழும் மங்களகரமான கர வருஷம்
18 ஆம் நாள் (03.08.2011)
புதன்கிழமை பி.ப.4 மணியளவில்
சிவகுமார் தயாளினி
தம்பதியரின் செல்வப் புத்திரன்
செல்வன்
**லக்ஷிகன்**
தனது பிறந்த நாளை தமது
இல்லத்தில் வெகு விமரிசையாகக்
கொண்டாட இருப்பதால்
அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம்
வருகை தந்து செல்வனை
ஆசீர்வதித்து விழாவை சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை நாடும் :
அப்பா (ராசா), அம்மா,
அப்பம்மா, பெரியப்பா குடும்பம்

தலங்காவற்பிள்ளையார் வீதி,
தாவையடி, திருநெல்வேலி.

## ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின்

### அதிகாரிகளினால் வழங்கப்படும் விளக்கவுரையாடல்

ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அதிகாரிகளினால் லொத்தரி வீசா (கிரீன் காட், Green Card Lottery Visa) நிகழ்ச்சி பற்றிய விளக்கவுரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி நகரங்களில் நடைபெறவுள்ளது. இலவசமாக எவ்வாறு விண்ணப்பிப்பது பற்றிய விளக்கங்கள் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்புடன் வழங்கப்படும்.


அனைவருக்கும் அனுமதி இலவசம்! விளக்கவுரையாடலின் முக்கிய குறிப்புக்கள் கையடக்க தொகுப்பாக இலவசமாக வழங்கப்படும்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி |
|---|---|
| வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். | தேசிய இளைஞர் சேவை மன்றம், இளைஞர் நிலையம், கிளிநொச்சி. |
| ஒகஸ்ட் 06.2011, மாலை 4 மணி | ஒகஸ்ட் 06.2011 காலை 9.30 மணி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லைடன் தீவில் தோற்றம் பெற்ற முதலாவது பெண்கள் பாடசாலை கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி.

ஸ்ரீ



ஈழத்தில் தலையாக விளங்கும் யாழ். குடாநாட்டை அணிசெய்யும் தீவுக்கூட்டத்தின் திலகமெனத் திகழ்வது லைடன் தீவாகும். இங்குள்ள கிராமங்களுள் அழகும் அமைதியும் நிறைந்து சீர்பெற்றுப் புகழ் பரப்பிய பெருமை வாய்ந்த பழம்பெரும் கிராமம் கரம்பொன் என்றால் மிகையாகாது. லைடன் தீவின் இறங்குதுறையில் வரலாற்றுப் பெருமை வாய்ந்த காவலூர் அருகே இருந்த இந்தக் கிராமம் கல்வி அறிவில் சிறந்தோங்கி நாகரிகம் கொண்ட ஒரு முன்மாதிரிக் கிராமமாகத் திகழ்ந்தது.

சனத்தொகைப் பெருக்கமும், நாகரிக வளர்ச்சியும், தேவைகளும் அதிகரிக்க இந்தப் பிரதேச மக்கள் யாழ்.மண்ணில் பணிபுரிந்து வந்த திருக்குடும்பத் துறவியரின் பணியை விரும்பினர். அந்தக் காலத்தில் ஆயராக இருந்த மேன்மைக்குரிய ஆண்டகை கெ.யூலன் அமலமரித்தியாகி என்பவரின் விருப்பத்துக்கு இணங்க 1913 இல் அருட் சகோதரிகள் அடியெடுத்து வைத்தனர். ''ஒலட்டியா மாஸ்ரர்'' எனச் செல்லமாக அழைக்கப்பட்ட யாக்கோபுவால் ''சென் ஆன்ஸ்விலா'' என்ற வீடு, திருக்குடும்பக் கன்னியர் சபைக்கு உபயமாக வழங்கப்பட்டது. இவர்கள் தமது இல்லத்தில் இருந்து தமது கற்பித்தல் பணியை மேற்கொண்டு வந்தனர்.

கல்வியின் அவசியத்தை உணர்ந்து கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்ட உலுவிசச் சட்டம்பியாரால் 1916ஆம் ஆண்டில் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்துக்கு மேற்கே சுருவில் வீதியும் செருக்கன் வீதியும் சந்திக்கும் இடத்தில் திண்ணைப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இது ஒரு தமிழ்க் கலவன் பாடசாலையாக இருந்தது என்பதை முதியோர் வாயிலாக அறியமுடிகிறது.

இங்கு வைரவநாதர் பேர்டினன்ட் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார். சலமோன்பிள்ளை சவரிமுத்து அவருடன் இணைந்து பணியாற்றினார் எனவும் இவர்களின் சேவை மிகவும் பாராட்டப்பட்டதாகவும் விளங்கியது என்பதையும் வாய் மொழிப் பாரம்பரியமாக அறிய முடிகின்றது.

1916 இல் முதன்முறையாகத் திருக்குடும்பத் துறவியர் உலுவிசச் சட்டம்பியாரோடு இணைந்து திண்ணைப் பாடசாலையில் கல்வி கற்பிக்கத் தொடங்கினர். புனித செபஸ்தியார் ஆலய முகப்பில் ஒரு கொட்டிலில் ஆண்களுக்கும் இன்னொரு சிறிய கட்டடத்தில் பெண்களுக்கும் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. ஆண்களுக்குச் சட்டம்பிமாரும், பெண்களுக்கு அருட்சகோதரிகளும் கற்பித்து வந்ததாக அறிய முடிகிறது.

இவ்விதமாக வளர்ந்து வரும்போது ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1926 இல் பெண்களுக்கான் ஓர் ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு '' சிறிய புஸ்ப மகளிர் ஆங்கிலப் பாடசாலை'' எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்தப் பாடசாலை மிஷனரிமாரினாலே தாபரிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது இந்தப் பாடசாலை இடிந்த நிலையில் புனித செபஸ்தியார் ஆலயத்துக்குப் பின்னே காணப்படுகிறது.

லைடன் தீவில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் ஆரம்பப் பாடசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பாடசாலைக்கு அயல் கிராமங்களான நாரந்தனை, சுருவில், ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் அமைந்துள்ள மடங்களில் இருந்து அதிகமானவர்கள் இந்தப் பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்றனர். 1942 இல் அரசினர் றோமன் கத்தோலிக்கப் பெண்கள் ஆங்கிலப் பாடசாலை எனப் பெயரிடப்பட்டு அதிபர் அருட்சகோதரி மரியாவின் கீழ் இயங்கத் தொடங்கியது. இங்கு மூன்று அருட்சகோதரிகளும் நான்கு ஆசிரியர்களும் கல்விகற்பித்து வந்தனர்.

1942 ஆம் ஆண்டு அருட்சகோதரி மரியா அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் தீவுப்பகுதியில் பெண்களுக்கான முதலாவது ஆங்கிலப் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. அயற் கிராமங்களில் இருந்து பெண்கள் இங்கு வந்து ஆறாம் வகுப்பில் சேர்ந்து ஆங்கிலக் கல்வி கற்றனர்.

1945 இல் சகோதரி லூட்ஸ் அதிபராகி பாடசாலையின் வளர்ச்சிக்காகக் கூடிய அக்கறை காட்டினார். 1947 இல் இந்தப் பாடசாலை மூன்றாம் தரப்பாடசாலையாகத் தரம் உயர்ந்தது. 1949 இல் மாணவர் தொகை அதிகரித்ததன் காரணமாக பாடசாலை மூடப்பட்டு இதற்கு 100 யார் தூரத்திலுள்ள பாலக்காட்டுச் சந்தியில் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ஆங்கிலப் பாடசாலை என்னும் பெயரில் புதிய பாடசாலை நிறுவப்பட்டது. புதிதாக நிறுவப்பட்ட பாடசாலை மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது.1955.01.01 இல் அருட்சகோதரி லூசில்லா அதிபரானார்.

1961 இல் இந்தப் பாடசாலை அரசால் சுவீகரிக்கப்பட்டது. எனினும் அருட்சகோதரிகளே தொடர்ந்தும் அதிபராகக் கடமையாற்ற வேண்டும் என்ற உடன் பாடு எட்டப்பட்டது. 1967இல் சகோதரி லூசில்லாவின் இடமாற்றம் காரணமாகச் சகோதரி கொலற் அதிபராகி 1969.02.22 வரை தம்சேவையைத் திறம்படச் செய் தார். தொடர்ந்து காமலீற்றா அதிபராகப் பொறுப்பேற்றார். 1971 இல் புனித செபஸ்தியார் ஆலயத்துக்கு அருகில் இயங்கிய ஆரம்பக் கல்விப் பாடசாலையான தமிழ்க் கலவன் றோ.க. பாடசாலை, யாழ். கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது.

(தொடரும்)

# மரண அறிவித்தல்



## நல்லதம்பி தம்பிப்பிள்ளை

நல்லூர், கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் மருதடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி தம்பிப்பிள்ளை கடந்த (29.07.2011) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீதேவி (பிரான்ஸ்), ஸ்ரீபாஸ்கரன் (டுபாய்), ஸ்ரீநாகேஸ்வரி (சுவிஸ்), ஸ்ரீரஞ்சினி (சுவிஸ்), அசோக்குமார் (பிரான்ஸ்), வசந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீமுருகராஜா (பிரான்ஸ்) , ஸ்ரீலதா, சிவனேசன் (சுவிஸ்), யோகேஸ்வரன் (சுவிஸ்), சர்மினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்ரீஹபீஸ், ஸ்ரீஹரீஸ், பிரவீன், பிரசாத், பிரதீப், சர்மிதா, செந்தூரன், ஸ்ரீமகா, பிரதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும் நாகம்மா, காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சின்னத்துரை, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, குமாரசாமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53, மருதடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
த.வசந்தகுமார் (மகன்)

(6436)

6436

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசியல்வாதிகளை அழைத்து நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும்

## பேராசிரியர் ரொஹான் குணரட்ன வேண்டுகோள்



கொழும்பு, ஓக. 3

தமிழக அரசியல்வாதிகளை நாட்டுக்கு அழைத்து அவர்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

-இவ்வாறு சிங்கப்பூரில் அமைந்துள்ள அரசியல் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான சர்வதேச ஆய்வு நிறுவனத்தின் விசேட நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் எனத் தமிழக முதல்வர் மீண்டும் வலியுறுத்தியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

தமிழக அரசியல்வாதிகள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் இலங்கை அரசு அவர்கள் தொடர்பாக நட்புறவுடன் செயற்படுகின்றது.

தமிழக அரசியல்வாதிகள் மிகவும் முக்கியமான நபர்கள் அல்லர். எம்.ஜி. ராமச்சந்திரன், மு.கருணாநிதி மற்றும் ஜெயலலிதா ஜெயராம் ஆகியோர் மூன்றாம் நிலைத் தலைவர்கள்.

எவ்வாறாயினும் மூன்றாம் நிலைத் தலைவர்கள் என அவர்களை இலங்கை அரசு ஒதுக்கி வைக்கமுடியாது. ஏனெனில், தென்னிந்தியா இலங்கைக்கு மிகவும் அருகில் அமைந்துள்ள நாடு என்பதே இதற்குக் காரணம் .

அவர்கள் எவ்வாறான தீய செயல்களை மேற்கொண்டிருந்தாலும் அவர்களுடன் சிறந்த உறவுகளைப் பேணுவது முக்கியம். புதுடில்லியுடன் பேணும் நட்புறவை சென்னை வரை விஸ்தரிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (சி)



கொழும்பு, வெள்ளவத்தை மயூரபதி பத்திரகாளியம்மன் ஆலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பாற்குடப் பவனி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதமர் டி.எம்.ஜயரட்ண கலந்துகொண்டார்.

# தமிழினியின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு

புலிகள் அமைப்பின் அரசியல்துறை மகளிர் பிரிவுத் தலைவி தமிழினியைத் தொடர்ந்தும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபரான தமிழினி இரண்டு வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விரைவாகத் தாக்கல் செய்யுமாறு சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு உத்தரவிடுமாறு தமிழினி சார்பில் ஆஜரான சட்டத்தரணி மஞ்சுளபதி ராஜா நீதிவானைக் கேட்டுக்கொண்டார்.

இதன்போது, கருத்து வெளியிட்ட பொலிஸார் சந்தேக நபர் தொடர்பான விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டு இது தொடர்பான அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது . இதுவரை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து ஆலோசனைகள் எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

கிளிநொச்சி, உதயநகர், தங்கபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட தமிழினி கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி பாதுகாப்புத் தரப்பினரால் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புனித ரம்ழானை முன்னிட்டு உணவு வங்கித் திட்டம்

கொழும்பு, ஓக.3

புனித ரமழானை முன்னிட்டு அரச சார்பற்ற நிறுவனமான 'முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா' நிறுவனம் 'உணவு வங்கி' என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்த நிறுவனம், வீடுகளில் உணவுப் பொருள்களைச் சேகரித்து கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் உள்ள ஏழைக் குடும்பங்கள் மற்றும் சிறார்களுக்கு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த 'உணவு வங்கி' பம்பலப்பிட்டி, நிமல் வீதியிலுள்ள ஜூம்ஆ பள்ளிவாசலுக்கு முன்னாள் அமைக்கப்படவுள்ளது. இந்த உணவு வங்கியானது புனித ரம்ழான் மாதத்தில் ஒவ்வொரு நாளும் மாலை 7 மணிமுதல் இரவு 10.30 மணி வரை செயற்படும்.

இந்தக் காலப் பகுதியில் நடைபெறும் சமூக நிகழ்வுகள், திருமண வைபவங்கள், பிறந்த நாள் வைபவங்கள் போன்றவற்றில் எஞ்சும் உணவுப் பொருள்களையும் இந்த உணவு வங்கிக்கு வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உணவுப் பொருள்கள் பொதிகளில் அடைக்கப்பட்டு ரம்ழான் மாதத்தின் ஒவ்வொரு இரவுகளிலும், கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்குவழங்கப்படும். இதுதொடர்பான மேலதிக விவரங்களுக்கு 011-2815024 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது 219, நாவல வீதி, நுகேகொடையிலுள்ள முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா நிறுவனத்தையோ தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**SHAMROCK- யாழ்**
கலை, வர்த், கணித, விஞ்.பிரிவுகளுடன்
ENG & GIT
A/L 2013,2012
* கிறிஸ்தவம்
* நாகரிகம்
} T.கஸ்றோ
O/L DAY CLASS
(திரும்பவும் எடுப்பவர்களுக்கு)

**தேவை**
பான்ஸி கடையில் நன்கு அனுபவமுள்ள ஆண் ஒருவர் தேவை. சுன்னாகம் பிரதேசத்துக்குட்பட்டவர்கள் மட்டும்.
தொடர்பு : 0778996559

**தேவை**
யாழ். நகரை அண்மித்ததாக அமைந்துள்ள எமது நிலையத்தின் வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கு சுமார் ஐந்து (05) லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆறு மாதங்களில் திரும்பப் பெறலாம். பொறுப்புத்தரப்படும். வழங்க விரும்புவோர் தயவு செய்து பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0750739635

**காணி விற்பனைக்கு/வாடகைக்கு**
அரியாலையில் A 9 வீதிக்கு அண்மையில் 3 பரப்புக்காணியில் அமைந்த, சகல வசதிகளுடன் கூடிய, 3 அறைகள் கொண்ட விசாலமான வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0775 - 138881, 021- 4910829

**WANTED**
2 BEDROOM ANNEX
OR SMALL COTTAGE
ON RENT FOR 1 YEAR
WITHIN 3 TO 4 KM RADIUS
OF JAFFNA TOWN CENTER,
FOR TWO LADIES.
PLEASE CONTACT
Mary David
Ph. 0214920011or 0779147154

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிவகுரு

(இளைப்பாறிய அதிபர்,J.P) B.A., Dip.in Education



பூநகரி, மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சின்னத்தம்பி நேற்று முன்தினம் (01.08.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூநகரியைச் சேர்ந்த சின்னத்தம்பி- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் மனோன்மணியின் (இளைப்பாறிய ஆசிரியை- தங்கேஸ்வரி) பாசமிகு கணவரும் விவேகானந்தன் (கட்டடக் கலைஞர், மாநகரசபை, கொழும்பு), Dr.திருமதி வத்சலா அமிர்தலிங்கம் (உதவிப்பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), விபுலானந்தன் (பொறியியலாளர், நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை, கொழும்பு), திருமதி கௌசல்யா தர்மகுலசிங்கம் (முன்னாள் ஆசிரியை - கிளி/ முருகானந்தா மகாவித்தியாலயம்) (லண்டன்), பிரமானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி வி.சிவஞானகலாவல்லி (ஆசிரியை- திரு/சீனன்குடா மகாவித்தியாலயம்), தி. அமிர்தலிங்கம் (பெரும்பாக உத்தியோகஸ்தர், ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையம்), Dr.திருமதி சந்திரசுலோசனா (அங்கொடை வைத்தியசாலை), தர்மகுலசிங்கம் (லண்டன்), திருமதி தயாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் சேரலாதன், துஷ்யந்தி, வருஜிகா, திருமருகன், திருக்குமரன், பிரக்தீஸ் வரன், சிவசாம்பவி, சிவசாமளை, வைஷ்ணவி, கௌதம், மாதங்கி, தருண், டர்ஷி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற நடராசா சரஸ்வதி (பூநகரி), றோகினிதேவி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2011) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (6433)(38)

**காணி விற்பனைக்குண்டு**
கொக்குவில், பொற்பதி றோட் உடையார் வீதியில் (100மீற்றர் தூரத்தில்) நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் கூடிய (நில. பர 09) ஒன்பது பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0773621166, 0776354229
(6415)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கணேசபிள்ளை துரைராசசிங்கம்

பிறப்பு: 30.04.1954 இறப்பு: 04.07.2011

ஆயிரம் தான் உறவு இருந்தாலும்-அப்பா
உங்கள் உறவுக்கு ஈடில்லை
நாங்கள் ஓடினோம் ஓடினோம்
உங்களை எம்முடன் வாழவைக்க
ஆனாலும் அந்தக் காலன் எங்களைத் தோற்கடித்துவிட்டான்.
நாங்கள் உயிருள்ளவரை உங்கள் நினைவுகளை
நெஞ்சங்களில் சுமந்திடுவோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக க்கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

வியாவில், காரைநகர். (6432) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுடனான பொருளாதார ஒப்பந்தங்கள் ரத்து செய்ய வேண்டும்



## பிரதமருக்கு வைகோ கோரிக்கை

சென்னை, ஒக.3

லட்சக்கணக்கான ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்த இலங்கை அரசுடன் செய்து கொண்ட பொருளாதார ஒப்பந்தங்கள் அனைத்தையும் இந்தியா ரத்துச் செய்ய வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வைகோ பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

டில்லியில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்கு உள்ளே இருக்கும் பிரதமர் அலுவலகத்தில் நேற்று பிரதமரை வைகோ சந்தித்தார். இந்த சந்திப்பின் போது ம.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தியும் உடன் இருந்துள்ளார்.

அவரிடம் அவர் முல்லைப் பெரியார் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளனுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும், ஈழத்தமிழர் விவகாரம் ஆகிய தொடர்பாக 3 கோரிக்கைகளை விடுத்துள்ளார்.

அவர் விடுத்த கோரிக்கைகளில் ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பாக பின்வரும் விடயங்களை முன்வைத்துள்ளார்.

இலங்கை அரசுக்கு ஆதரவாகவும் தமிழர்களுக்கு எதிராகவும் இந்திய அரசு செயற்பட்டு வருகிறது. இனியாவது உலகரீதியில் இலங்கை அரசுக்குச் சாதகமாக இந்தியா செயற்படக் கூடாது என்று பிரதமரைக் கேட்டுக்கொண்டார்.

அதன்போது பதிலளிக்கையில் பிரதமர் இலங்கைக்கு நம் உதவவில்லை என்றால், அந்த நாட்டில் சீனா கால் பதித்துவிடும் என்றார்.

அப்போது வைகோ, ஏற்கனவே இலங்கைக் கடற்படைப் படகுகளில் வந்த சீனக் கடற்படையினர் தமிழக மீனவர்களைத் தாக்கி உள்ளனர். இலங்கை ஒருபோது எமக்கு ஆதரவாக இருக்காது. சீனா, பாகிஸ்தானோடு தான் நட்புறவு வைத்திருக்கும்- என்றார். மேலும் இலங்கையில் உள்ள தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க வேண்டும். அங்கே முகாமிட்டுள்ள சிங்கள ராணுவத்தை வெளியேற்ற வேண் டும்.

ராஜபக்ஷ மேற்கொண்ட இனப்படுகொலைக் குற்றங்களுக்காக பன்னாட்டு நீதிமன்றத்தில் அவரை விசாரணை செய்ய வேண்டும் என்று இந்தியா குரல் எழுப்ப வேண்டும். இவ்வாறான கோரிக்கைகளை அவர் விடுத்துள்ளார்.

# தமிழில் நூலாக வெளிவந்தது ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை




சென்னை, ஒக.3

இலங்கையில் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா நிபுணர் குழுவால் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான சர்ச்சைக்குரிய அறிக்கையை சென்னையைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனிதம் வெளியீட்டாளர்கள் தமிழில் மொழி பெயர்த்து 'போர்க் குற்றவாளி' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளனர்.

328 பக்கங்களை கொண்ட இந்த புத்தகத்தில் ஐ.நா நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையை மிக எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விளக்கம் அளிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் எஸ்.ஜே. இமானுவல், தமிழர் புனர்வாழ்வமைப்பின் தலைவர் ரெஜி மற்றும் சுவிஸ் ஊடகவியலாளரான ஆர்.துரைரத் தினம் ஆகியோரின் உதவியால் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளியிடப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை பாகுபாட்டு மற்றும் இனப் பிரச்சினைப் படிவங்களுக்கு எதிரான சர்வதேச இயக்கத்தின் தலைவர் நிமல்கா பெனாண்டோ, சுவீடன் உப்பசலாவைச் சேர்ந்த பிட்டர் ஜோல்க் மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள வைத்தியர் பிரைன் செனவிரட்ன ஆகியோர் இந்த நூல் வெளியீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## உடனடி வேலை வாய்ப்பு

ஸ்ரீ கல்கி தையல் நிலையத்தில் தையல் அனுபவமுள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பு, யுக்கி, ஓவலக் தையல் மெசினில் நன்கு அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0771380893 0778837178 டச்சுவீதி, சாவகச்சேரி

# இலங்கைத் தமிழர் மறுவாழ்வு; நிதி திரட்டும் பணியில் பா.ஜ.க.

ஈழத்தமிழர்களின் மறுவாழ்வுக்காக ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் நிதி திரட்டும் பணியில் பாரதீய ஜனதாக் கட்சியும் இணைந்து செயற்படவுள்ளதாக அந்தக்கட்சியின் மாநிலத் துணைத்தலைவர் எச்.ராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கோவையில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேலும் கூறியதாவது:

இலங்கை தமிழர்களின் நலனில் மத்திய அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தவில்லை. இதனால் அங்குள்ளவர்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே ஈழத் தமிழர்களுக்கு உதவும் பணியில் எதிர் வரும் 13 ஆம் திகதி தொடக்கம் தமிழ்நாடு முழுவதுமாக நிதி திரட்டும் பணி இடம் பெறவுள்ளது.

இதற்காக எமது கட்சியும் உதவவுள்ளது. இதேவேளை இலங்கை ராணுவத்தால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து பாரதீய ஜனதா தலைவர் பொன் ராதாகிருஷ்ணன் தலைமையில் எதிர்வரும் 7 ஆம் திகதி ராமேஸ்வரத் தில் நடைபெறும் கடல் முற்றுகைப் போராட் டத்தில் எமது கட்சியினர் ஒன்றாகத் திரண்டு கலந்து கொள்வர் - என்றார் அவர். (வ)

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு சேதுநாதன்



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருநாவுக்கரசு சேதுநாதன் 28.07.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் முத்துவேலு - விஜயலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் மதிவதனியின் ஆருயிர்க் கணவரும் தாரணியின் பாசமிகு தந்தையும் செல்வநாயகன், காலஞ்சென்ற சிவநாதன் மற்றும்தவயோகவள்ளி, வாசுகி, திருமகள், ஜெகநாதன், காயத்திரி (பண்ணாகம்), தில்லைநாதன் (ஜேர்மனி), தயாபரநாதன் (நோர்வே) ஆகியோரின் சகோதரனும் ஜெயவதனி, கௌரிதாசன், ஜெயகௌரி, சிவதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.08.2011 வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 06.08.2011 சனிக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

தகவல்:
மனைவி

## நன்றி நவில்கின்றேன்



23.07.2011ஆம் திகதி நடைபெற்ற வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) இலக்கம் 13 இல் போட்டியிட்ட என்னைக் கூடிய வாக்குகள் அளித்து 05 ஆம் இடத்தைத் தக்கவைத்த குரும்பசிட்டி மக்களுக்கும் அயல் கிராம மக்களுக்கும் எனது வெற்றிக்கு அயராது உழைத்த நண்பர்களுக்குக் கும் ஏனைய வலி.வடக்கு மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொன்னுத்துரை தங்கராஜா
பிரதேச சபை உறுப்பினர்,
வலிகாமம் வடக்கு. (குரும்பசிட்டி)

## Personal class

தரம் 3 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal class உம் Sopken with grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.)

தொடர்பு: நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0754169597

## வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் தரும்

## சோ- கூ-ரே குபேர மணிமேக்கர்ஸ்

கடன் தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக் கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய்களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு - வாகனம், மனை, கடை மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.

விலை ரூபா 5100/= மட்டும்
(இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டது)
உங்கள் இதுப்பிரதிகளுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்:
0771399950

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை நிலையத்துக்கு அனுபவமுள்ளவர்களும் பழக விரும்பும் பெண் விற்பனையாளர்கள் தேவை.

தொடர்பு: 021 222 5578 0777488093

## கட்டட நிர்மாணத் தொழிலாளர் உடன்தேவை

சாவகச்சேரியில் கட்டட நிர்மாண வேலைக்கு மேசன், கம்பி வேலை செய்வோர் (Bar bender), குழாய் வேலை செய்வோர் (Plumber), தச்சுவேலை செய்வோர், சாதாரணத் தொழிலாளர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு: 0773655947 0212270117




உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 772 திகதி 01-08-2011

வெற்றி எண்கள்

09 36 38 46 B (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 10,782,600/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,782,600/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | 750,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 359 | 1,000/= | 359,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 623 | 1,000/= | 623,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15974 | 60/= | 958,440/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8432 | 40/= | 337,280/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 209297 | 20/= | 4,185,940/= |
| ஆங்கில எழுத்து | 30274 | 20/= | 605,480/= |
| | | மொத்தம் ரூ. | 8,619,140/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 600447176-0-20 |
| நுவரேலியா | 600454508-3-13 |
| திருகோணமலை | 600455441-8-28 |
| அம்பாறை | 600450806-6-46 |
| மாத்தளை | 600453297-2-32 |
| கேகாலை | 600445932-4-24 |
| களுத்துறை | 600447281-8-28 |
| மட்டக்களப்பு | 600450469-9-19 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,019,140/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 11,192,480/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஒகஸ்ட் 04 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறமூட்டப்பட்ட அரிசி வகைகளை விற்பனை செய்வோரைக் கைதுசெய்ய நடவடிக்கை

## நுகர்வோர் அதிகார சபைத் தலைவர்

கொழும்பு, ஓக 3

உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் நிறமூட்டப்பட்ட அரிசி வகைகளை உற்பத்தி செய்வோரையும் விற்பனை செய்வோரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் ரூமி மர்ஷூக் கூறியுள்ளார்.

இவ்வாறு நிறமூட்டப்பட்ட அரிசி வகைகளை இனங்காண்பதற்கான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறமூட்டப்பட்ட அரிசி வகைகளினால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதாக சுகாதாரப்பிரிவு அண்மையில் சுட்டிக்காட்டியதன் பிரகாரம் சில விசாரணைக் குழுக்கள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அரிசி வகைகளை விற்பனை செய்யும் அல்லது உற்பத்தி செய்யும் இடங்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தால் 0112399146 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்குமாறு பொது மக்களிடம் நுகர்வோர் விவகார அதிகாரசபை வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் இது தொடர்பான தகவல்களைக் கடிதம் மூலமாகவும் அதிகார சபைக்கு அனுப்பி வைக்க முடியும் என அதிகாரசபையின் தலைவர் ரூமி மர்ஷுக் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# கலேவெல விபத்தில் முதியவர் பலி

கொழும்பு, ஓக 3

கலேவெல கனாதெனை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துவிச்சக்கர வண்டியொன்றும், லொறி ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது துவிச்சக்கர வண்டியில் பயணித்த ரக்கெடியாவ பிரதேசத்தைச் சேர்ந்த 77 வயதான ஒருவரே படுகாயமடைந்த நிலையில் குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் விபத்துக் குறித்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# சட்டவிரோத வீதி விளக்குகள்; 2,673 மில்லியன் ரூபா செலவு

## மின்சக்தி, எரிசக்தி அமைச்சு கூறுகிறது

இலங்கையின் பல வீதிகளில் சட்டவிரோதமாக நான்கு இலட்சத்துக்கும் அதிகமான வீதி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக வருடத்திற்கு 150 கிலோ வாட்ஸ் மின்சாரம் பயன்படுத்தப்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டடியுள்ளது. இதன்பொருட்டு இரண்டாயிரத்து 673 மில்லியன் ரூபா செலவாகுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரப்பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளை இரவு ஏழு மணிமுதல் அதிகாலை ஐந்து மணி வரை மாத்திரம் ஒளிர வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மின்சக்தி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. அவ்வாறு செயற்படாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# அங்கவீனமுற்றோரின் குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு

அங்கவீனமுற்றோரின் குடும்பங்களுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார். அதற்காக 419 மில்லியன் ரூபா அமைச்சுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனவரி மாதத்தில் இருந்து நிலுவைக் கொடுப்பனவுகளுடன் அந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருவதாகவும் இந்தச் செயற்திட்டம் குறித்து அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் உள்ள அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# மிரிஸ்ஸவில் காணாமல் போன ஐந்து மீனவர்கள் மீட்பு

கொழும்பு, ஓக 3

மிரிஸ்ஸ பிரதேசத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்று காணாமல் போனதாகக் கூறப்பட்ட ஐந்து மீனவர்களும் பாதுகாப்பாக மீட்கப் பட்டுள்ளனர்.

அவர்களைக் கண்டுபிடிப்பதற்காக தங்காலை சமுத்திரப் பல்கலைக்கழகம் அண்மையில் விசேட தேடுதல் நடவடிக்கையொன்றை ஆரம்பித்திருந்தது.

மிரிஸ்ஸ பிரதேசத்தில் இருந்து 162 கடல் மைல் தூரத்தில் வைத்து இந்தப் படகு காணாமல் போயுள்ளதாக பல்கலைக்கத்தின் உதவிப் பணிப்பாளர் டபிள்யூ. ஏ.சஞ்ஜீவ தெரிவித்தார்.

ஐந்து நாள்களின் பின்னர் லெனாட் என்ற குறித்த படகு நேற்றுக் காலை பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (ற)

## சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், ஓக.3

கொக்குவில் கிழக்கு சாயி துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும்12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.


**தவறிவிட்டது**

சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருநாதன் தனுஜன் என்பவரது தேசிய அடையாள அட்டை (915650759V) சித்தங்கேணிக்கும் சண்டிலிப்பாய்க்குமிடையில் தவறிவிட்டது. தனுஜன் இம்மாதம் நடைபெறவுள்ள A/L பரீட்சைக்குத் தோற்றவுள்ளதால் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சண்டிலிப்பாயில் உள்ள R.S.தொலைத்தொடர்பு நிலையத்தில் ஒப்படைத்துதவவும்
T:P. 0213002592

**வீடு வாடகைக்கு**

யாழ்.கதீற்றல் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு தளபாடங்களுடன் வாடகைக்குண்டு.
தொடர்பு:0779642468



பொன்னாலை
அருள்மிகு ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலயம்
கரவருஷ ஆவணிமாத திவ்விய
பெருந்திருவிழா

கொடியேற்றம் : ஆடி மாதம் 21 ஆம் நாள் (06.08.2011) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணி
சப்பரத் திருவிழா : ஆடி மாதம் 25 ஆம் நாள் (10.08.2011) புதன்கிழமை இரவு 8.00 மணி
வரலட்சுமி விரதம் : ஆடி மாதம் 27 ஆம் நாள் (12.08.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல்
மஞ்சத்திருவிழா : ஆடி மாதம் 30 ஆம் நாள் (15.08.2011) திங்கட் கிழமை புன்னை வாகன உற்சவம்
அனந்த சயனத்திருவிழா : ஆவணி மாதம் 01 ஆம் நாள் (18.08.2011) வியாழக்கிழமை பகல் சங்காபிஷேகம், சயன உற்சவம் :
வேட்டைத் திருவிழா : ஆவணி மாதம் 4 ஆம் நாள் (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி
தேர்த் திருவிழா : ஆவணி மாதம் 5ஆம் நாள் (22.08.2011) திங்கட்கிழமை
முற்பகல் 10.00 மணிக்கு வசந்தமண்டப பூசை
முற்பகல் 11.30 மணி சுவாமி தேரில் ஏறுதல்
பகல் 1.00 மணி உறியடி உற்சவம்
இரவு 12.00 மணி கிருஷ்ண ஜெயந்தி
அபிஷேகம் பூஜை உற்சவம் தாலாட்டு பஜனை நிகழும்
தீர்த்தம் : ஆவணி மாதம் 6 ஆம் நாள் (23.08.2011) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி திருவடி நிலைக்குப் புறப்படுதல். இரவு 8.00மணிக்கு கொடி இறக்கம்.
சங்காபிஷேகம் : ஆவணி மாதம் 7 ஆம் நாள் (24.08.2011) புதன்கிழமை காலை 9.00மணி 1008 சங்காபிஷேகம், மாலை 6 மணி திருக்கல்யாணம்
ஆவணிக் கடைசி ஞாயிறு: ஆவணி மாதம் 25 ஆம் நாள்(11.09.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி ஆஞ்சநேயர் மூலவருக்கும் சங்காபிஷேகம், பொங்கல் உற்சவம்

தேவஸ்தான உற்சவ பிரதம குரு:
"பிரதிஷ்டா சிரோமணி" "வேதாகம கிரியாகலா பூஷணம்"
ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தாச்சாரியர்

03.08.2011 மண்டலாபிஷேக பூர்த்தி ஆரம்ப நிகழ்வு ஆடி மாதம் 20 ஆம் நாள் (05.08.2011) காலை 8.00 மணிமுதல் மண்டல பூர்த்தி 1008 கலசாபிஷேகம் நிகழத் திருவருள் கை கூடியுள்ளது.

குறிப்பு: தினமும் காலை 9.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் உற்சவம் ஆரம்பமாகும்.

பொன்னாலை சுழிபுரம். "அனைவரும் வருக நாராயணன் அருள் பெறுக" கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா! கோவிந்தா !! தேவஸ்தான பரிபாலன சபை

**மங்களகரமான திறப்பு விழா**

றாம் பரடைஸ்
RAM PARADISE
சகலவிதமான உணவுகள், ஒடர்களும் உடனுக்குடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
இன்று (03.08.2011) 9.00-10.00 மணிவரை உள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
401, Dr.Subramaniyam Road.
kandarodai, Chunnakam.021 7200581

**கட்டார்**

முன்னணி கம்பனி ஒன்றில்
விஷேடமாக தமிழ் ஆண்களுக்கு
உடனடி வேலை வாய்ப்புகள்...!

| | | |
|---|---|---|
| வேலையாட்கள் (திறமையுள்ள) Skilled Labourer | 15 | சம்பளம் Qatar Riyal 900/- + O/T |
| உதவியாலர்கள் Helper | 10 | சம்பளம் Qatar Riyal 800/- + O/T |

அரசாங்க கட்டணம் மாத்திரம் | QR 1 - Rs: 31.50

நேர்முகத் தேர்வு எமது நிறுவனத்தில் இடம் பெறும்

- புதுப்பித்துக்கொள்ளக்கூடிய 2 வருடகால ஒப்பந்தம் (சோதனைக் காலம் முதல் 3 மாதம்)
- 1 நாளைக்கு 8 மணித்தியாலம் வேலை
- கிழமைக்கு 1 நாள் விடுமுறை
- தங்குமிடம் இலவசம்
- வந்து செல்வதற்கு (ஒப்பந்தக் காலம் முடிவில்) விமானச்சீட்டு இலவசம்
- சாப்பாடு வழங்கப்படமாட்டாது
- மருத்துவம் மற்றும் அனைத்து சட்டதிட்டங்களும் கட்டார் நாட்டு ஊழியர் சட்டங்களுக்கு அமைவானது.

உடனடிப் பயணம்

தாமதமின்றி வாருங்கள்..!

WORLD TRUST AGENCIES
இல. 8.1/1. முதலாம் மாடி. புத்தளம் வீதி. குருணாகல்
No.8,1/1, 1st Floor, Puttlam Road, Kurunegala.
Tel: 077-3523540, 072-7610610 Fax: 037-2222472
E-mail: world_trst@yahoo.com
Labour License No: 2170
AL/2170 Advt/10/11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை; யாழ். கிளிநொச்சியில்

வடமாகாண சபையின் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளைமறுதினம் 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் மறுநாள் 6 ஆம் திகதி கிளிநொச்சியிலும் நடைபெறும்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 120 பேருக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை, **யாழ். நகரில்** - நாவலர் வீதியில் மாகாண பொது நிர்வாக **செயலகத்திலும்** கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், **வவுனியா** மாவட்டங்களைச் சேர்ந்த 257 பேருக்கு **கிளிநொச்சி** பிராந்திய ஆணையாளர் அலுவலகத்திலும் இந்த நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

**யாழ்ப்பாண மாவட்டம்**

**நேர்முகப் பரீட்சை நேரம் - மு.ப. 9 மணி**

| | |
|---|---|
| கி.கோபாலகிருஸ்ணன் | 761170406V |
| ஆ.கோகுலன் | 782380591V |
| வா.கணேசானந்தம் | 802180764V |
| இ.செந்தில்மாறன் | 831492074V |
| ச.தர்சினி | 826262230V |
| பா.தங்கவேலு | 840403459V |
| இ.சர்மிளா | 817653863V |
| பி.தர்சினி | 807600850V |
| சு.மயூரன் | 780331003V |
| பு.தங்கவேலாயுதம் | 840023397V |
| பா.முகுந்தன் | 812564277V |
| சி.ரஜிவ் | 842623316V |
| வ.அமிர்தலிங்கம் | 801913482V |
| நி.சிங்கராஜா | 812583328V |
| த.பரராஜசிங்கம் | 763190900V |
| பா.உபேன்ரா | 852501901V |
| ஞா.தேவராசா | 781762598V |
| ப.பஞ்சலிங்கம் | 822471075V |
| சி.ரகேகன் | 850122210V |
| கி.டிலோஜனா | 827481203V |
| அ.பிரியதர்சினி | 835390446V |
| சி.துரைசிங்கம் | 790404165V |
| ப.ரூபேந்திரன் | 761921967V |
| பா.சிவநந்தினி | 787620701V |
| ஞா.ஞானசம்பந்தன் | 751660316V |
| சி.கந்தசாமி | 792383475V |
| கெ.ஆனிதா | 827850942V |
| ர.றாமதாஸ் | 862321286V |
| சு.கலைவினோதன் | 811830321V |
| த.மருதராஜன் | 822711464V |
| ச.ரட்ணசிங்கம் | 830483063V |
| சு.நல்லையா | 752081352V |
| செ.மாலதி | 835862879V |
| பி.வேலாயுதம் | 800083702V |
| த.ஆர்த்தி | 826142324V |
| கு.வீரசிங்கம் | 772403160V |
| க.லோகேஸ்வரன் | 841971760V |
| கி.அருந்தவராஜ் | 722091043V |
| ஞா.கயூரன் | 850643334V |
| அ.செந்தூரன் | 792063152V |
| த.பசுபதி | 770260779V |
| க.மணிமாறன் | 810893737V |
| சி.பிரணவசொரூபி | 816762707V |
| பா.பத்மநாதன் | 812522230V |
| இ.சிவகரன் | 720031914V |
| க.நித்தியா | 827682195V |
| உ.இராஜரட்ணம் | 731800650V |
| மா.சுபாகரன் | 781893870V |
| க.சிவறஞ்சினி | 826112901V |
| மா.ஜெனிற்றா | 858192277V |
| பா.சின்னையா | 721670619V |
| நா.ராமேஸ்வரன் | 800292786V |
| லோ.கி.ஆனந்த் | 781760463V |
| யோ.நிமலன் | 810862246V |
| இ.சஞ்சீவ் | 822044395V |
| பா.மயூரன் | 800613728V |
| கு.பாலமுரளி | 830732241V |
| ப.தபோதினி | 835460509V |
| வை.தர்சினி | 847182334V |
| வ.யோகநாதன் | 793540507V |

**நேர்முகப் பரீட்சை நேரம் - பி.ப. ஒரு மணி**

| | |
|---|---|
| அ.சா.துளயா | 778223007V |
| க.கமலபாபு | 771061575V |
| இ.றமணி | 846103724V |
| க.துஸ்யந்தினி | 786173841V |
| சி.சிறிராகுலன் | 821821495V |
| ப.காண்டீபன் | 782860488V |
| பே.நிவேதிகா | 865682719V |
| க.துளசி | 818254806V |
| ம.சுதாகர் | 830510648V |
| இ.மதன் | 791532612V |
| தி.இராகினி | 807784668V |
| இ.செந்தில் | 831790130V |
| கு.துஸ்யந்தி | 706091688V |
| கு.சத்தியகுமார் | 782380737V |
| செ.செந்தூரன் | 763381242V |
| அ.சிவஞானசேகரன் | 820564227V |
| வராகி | 855041561V |
| இ.நவரூபன் | 803512175V |
| ப.தர்மகுமாரன் | 750590500V |
| சி.அகிலன் | 771240690V |
| கி.கணபதிப்பிள்ளை | 661190248V |
| சி.தீபக் | 825742174V |
| ந.சயந்தன் | 780622547V |
| ச.கோகுலதாசன் | 833442937V |
| கோ.அன்ரோஜீகன் | 801704441V |
| க.பரதுசா | 836972384V |
| ப.சேயோன் | 760620505V |
| தெ.இதயதாரணி | 847914050V |
| தெ.தேவசியாளி | 867161376V |
| தி.கஜேந்திரன் | 801012264V |
| ச.நி.கமலராஜன் | 776700789V |
| அ.லி.ரயனிகாந் | 781443719V |
| ர.பகீரதி | 848572390V |
| அ.சுரேஸ்காந் | 843532810V |
| ஞா.ஆதவன் | 861493458V |
| ஐ.சுயெஸ்கா | 808481502V |
| ம.குமுதினி | 816900964V |
| இ.கந்தசாமி | 802581335V |
| சி.சுஜீவா | 798323520V |
| த.பிரதீபன் | 770181542V |
| இ.இரகுபாலன் | 793282176V |
| ந.பிரதீபன் | 780563168V |
| சு.குலவி | 768261091V |
| ந.வ.சர்லின் | 857711513V |
| இ.கமலதாசன் | 851562583V |
| சி.திலீபன் | 851424300V |
| மோ.ராஜினி | 807433474V |
| ர.கிரிதரன் | 853182834V |
| சி.இந்திரகுமார் | 771283225V |
| உ.சுதர்சினி | 798053949V |
| கு.அற்புத்துறை | 771521282V |
| மதுமிதா | 828211730V |
| வே.நித்தியகீர்த்தி | 761762010V |
| க.மோகனராஜ்குமார் | 702450918V |
| சுரேகா | 815035011V |
| சே.அகல்யா | 826251573V |
| த.கீதலதா | 837731054V |
| வி.விஜிதன் | 773373108V |
| மு.றேவதி | 766730175V |
| சி.சந்திரரூபன் | 773001324V |

**மன்னார் மாவட்டம்**

**நேர்முகப் பரீட்சை நேரம் - மு.ப. 9 மணி**

| | |
|---|---|
| சி.இராஜேஸ்கண்ணா | 782864769V |
| மொ.அ.மு.மொகமட் | 850953759V |
| ஹ.ம.ஸஹிபு | 810614536V |
| மு.நி.முகமட் அனிபா | 831911310V |
| மொ.ஜ.மொ.பர்வீஜ் | 821223598V |
| அ.பிரதாப் | 862462270V |
| தி.திவாகரன் | 782794710V |
| அ.சு.மொகமட் நேரோஸ் | 853630365V |
| ரி.சாகுல் ஹமீட் | 830532447V |
| க.இ.அல்வின் | 812982397V |
| செ.அ.அன்னை திரேசா | 840402525V |
| அ.ஜோதினி | 837740835V |
| ச.ரவிசங்கர் | 822352049V |
| பு.ஜீ.ஆனந்தகுமார் | 800772010V |
| அ.சு.நஸ்ரினா பேகம் | 847770066V |
| இ.கைலாசபதி | 803114986V |
| அ.ஜெ.யூ.கொ.தயாநிதி | 795181393V |
| ஆ.மொ.ரசாளி | 850180881V |
| பு.சிவகௌரி | 738522273V |
| அ.சீமான் | 761023586V |
| மொ.அ.மொ.முபாரக் | 831773383V |
| ரி.மொ.முகுசீா | 841933842V |
| நி.நஸ்ருள்ளா | 850083673V |
| அ.யா.எனில்டா | 766723241V |
| கு.மை.கு.நிஷாந்தினி | 855523477V |
| மொ.டா.மொ.நசீம் | 823493851V |
| க.மொ.ஷிபான் | 870181205V |
| ம.ஜெபநேசன் | 770294703V |
| ப.ஜெ.ராஜ் சிறில் | 820134893V |
| லி.அ.லி.உர்ஹமன் | 860012596V |
| அ.ஜெயசீலன் | 772432496V |
| மொ.க.ரம்சீன் | 852372893V |
| லி.வசந்தராஜா | 802180578V |
| எ.றொ.கிருஷாந்தி | 835192407V |
| மொ.சு.மொ.சஜீ | 822661211V |
| அ.மேரி சிபானி குறூஸ் | 857482913V |
| பா.விஜயராஜ் | 841315065V |
| பி.செ.யூ.ஜெனஸ் பிரியா | 796761512V |
| கு.ம.மரியகொரட்டி | 727701095V |
| அ.பெ.சகாயம் | 830934146V |
| வ.து.ஸ்வகீன் மதி | 742611400V |
| அ.மேரி எருப்பிரஷ்யா | 848023191V |
| மொ.ஜ்.மொ.ஜெயசீலன் | 873131365V |
| செ.சாந்தினி | 845452822V |
| நி.செபஸ்டியான் | 790914414V |
| பி.ரீகன் | 812024558V |
| ம.செல்வராஜ் | 821682215V |
| சி.ஜெயக்குமாரி | 746242638V |
| ஜோ.பி.செபமாலை | 833483439V |
| சி.சபேசன் | 842264430V |
| பொ.ஜெகதீபா | 786570220V |
| போ.சா.டெ.பொர்சிலா | 835823733V |
| சி.சிராஜிதீன் | 857501829V |
| இ.ட.ஜெயசீலன் | 830062866V |
| செ.லோமா | 817894836V |
| எ.வி.ட.மெ.அஸ்வினி டயஸ் | 847550368V |
| பீ.கு.ப.லக்ஷன் | 843482244V |
| ம.இராசநாயகம் | 810904879V |
| அ.ஜான்சி லோகு | 847012269V |
| ச.லோ.எமில்ராஜ் லோகு | 782461834V |

**முல்லைத்தீவு மாவட்டம்**

**நேர்முகப் பரீட்சை நேரம் - பி.ப. ஒரு மணி**

| | |
|---|---|
| அ.சசிகுமார் | 780252294V |
| யோ.உசாந்தன் | 831953152V |
| சு.உதயசீலன் | 722653360V |
| ப.திலீபன் | 835851540V |
| ம.அமிர்தா | 812362577V |
| ச.சுதர்சன் | 862101782V |
| தி.குமுதினி | 788051930V |
| செ.சதீஸ்வரன் | 820093917V |
| வை.ரஜனிக்காந்தன் | 812715020V |
| செ.வாகினி | 772674201V |
| ச.சுதாகரன் | 835911047V |
| அ.ரி.அப்துல் ரகுமான் | 821710634V |
| இ.தனுஜா | 827682667V |
| ந.நிரோகினி | 827900265V |
| ந.கௌரிசங்கரசர்மா | 852512865V |
| சி.விஜிந்தன் | 761051539V |
| இ.சிறிதரன் | 800994292V |
| ப.சேவியர் செல்வராஜா | 802263740V |
| மை.நிஷாந்தினி | 857381777V |
| ச.சுமந்திரன் | 862513088V |
| கு.குணசிங்கம் | 840353583V |
| செ.தமிழ்வாசன் | 820100611V |
| பி.பிரதீஸ்கரன் | 810903210V |
| ரா.அற்புதா | 866872996V |
| இ.ராகவன் | 792344283V |
| தி.மதுவாணி | 778472732V |
| ஏ.ஜீவராசா | 791472652V |
| யோ.கீதா | 836114388V |
| கோ.தியாகராஜா | 850631824V |
| ச.சா.ஹமீது | 772490780V |
| த.அமிர்தலிங்கம் | 722070992V |
| யோ.சுதாகர் | 820142969V |
| அ.கனகசிங்கம் | 721533905V |
| ரெ.வி.வினிபிர்றா திலகேஸ்வரி | 797273228V |
| இ.சுதர்சன் | 833614070V |
| த.உதயன் | 772073038V |
| ம.கருணாகரன் | 763353338X |
| கி.சுதர்சன் | 840393623V |
| க.விஜிந்தன் | 801414311V |
| து.சந்திரமோகன் | 770174880V |
| வி.சரண்யா | 858421497V |
| செ.ஜெசிகுமார் | 740911414V |
| பா.ஜமுனா | 797494470V |
| ம.விஜயகுமார் | 811052426V |
| ச.புஸ்பலலிதா | 838243614V |
| ப.நிருஜா | 816372135V |
| சி.சிந்துஜா | 845672776V |
| இ.குணாகரன் | 801014275V |
| கு.ரபீசன் | 823304846V |
| ச.சதீஸ்வரன் | 842193869V |
| ம.சுகீதரன் | 781153303V |
| வி.சசிரேகா | 828444166V |
| க.மயூரதன் | 761194054V |
| ந.நாகராசா | 761840681V |
| தி.இரவீந்திரன் | 833634070V |
| க.சுதர்சன் | 820591780V |
| த.ஜெகதீஸ்வரன் | 740633481V |
| க.பிரசாந்தி | 836713370V |
| சு.சுகந்தினி | 807230832V |

**வவுனியா மாவட்டம்**

**நேர்முகப் பரீட்சை நேரம் - பி.ப. 2.30 மணி**

| | |
|---|---|
| த.தர்மேந்திரா | 740822519V |
| ந.ரஜீஸ் | 810051620V |
| த.சுஜீவன் | 803232377V |
| ம.கேசவன் | 792040551V |
| இ.சஞ்சீவன் | 772451105V |
| சி.அச்சுதன் | 842663008V |
| கே.கிருஷ்ணராஜ் | 822041477V |
| கி.சர்மிளா | 826731842V |
| க.இந்துஜன் | 861580326V |
| பி.இந்திரராஜ். | 830054421V |
| ந.ஜெயகரன் | 740902814V |
| சி.ஜனன் | 852562161V |
| ர.பிரசாந்தி | 835882608V |
| சி.கஜேந்திரன் | 812671979V |
| சி.கோகுலவாணி | 847641304V |
| சி.கஜேந்திரன் | 822154107V |
| ம.ரஞ்சனா | 828182366V |
| ந.கரன் | 793211252V |
| சி.தினேஸ்குமார் | 842821665V |
| மா.சிறிக்காந்த் | 762143720V |
| ம.ஜனார்த்தனி | 766123546V |
| ஜெ.சுகந்தினி | 825140255V |
| சு.சுமதி | 817571832V |
| சி.அருந்ததி | 847051809V |
| பெ.பிராஜினி றொபின்சன் | 805922087V |
| சி.சிவகரன் | 811172448V |
| பா.பிரதீபன் | 842572053V |
| த.கனகரட்ணம் | 848581550V |
| வே.ஆயகுலன் | 833472321V |
| ந.சுவேதன் | 822101763V |
| க.துஷ்யந்தன் | 840743195V |
| க.பத்மபிரியா | 825310658V |
| அ.கோகிலாதேவி | 738102860V |
| கா.காந்தீபன் | 852083271V |
| செ.விமலராஜா | 720493020V |
| சு.துஷாலினி | 838600654V |
| சி.உதயனன் | 720150115V |
| சி.தட்சாயினி | 855242931V |
| ச.சோபனா | 868070765V |
| [illegible] | 821700760V |
| இ.சுதாகரன் | 862291530V |
| சி.மேகலா | 847943645V |
| து.ஜெயந்தன் | 810142294V |
| சி.சுரேந்திரகுமார் | 842741270V |
| சி.மோகனச்செல்வன் | 840221687V |
| வ.தயாபரன் | 803344132V |
| ச.ஜீவசாந்தினி | 857853660V |
| அ.தவீஷன் | 823312920V |
| கீ.சசித்ரா | 816771927V |
| ம.குகபாலினி | 835553280V |
| உ.நிரோஷினி | 787993710V |
| ப.சத்தியசீலன் | 710120471V |
| ம.ஜெயப்பிரகாஷ் | 801755160V |
| கி.கயல்விழி | 836503627V |
| சி.சுகிர்தன் | 873092653V |
| ஜ.பர்ஷானா | 855892804V |
| சி.சத்தியகீர்த்தி | 770283671V |
| அ.காயத்திரி | 796181397V |
| மு.சதீஸ் | 783502143V |
| தி.சிவகரன் | 772994494V |

**கிளிநொச்சி மாவட்டம்**

**நேர்முகப் பரீட்சை நேரம் - பி.ப. 4 மணி**

| | |
|---|---|
| பு.நாதன் | 753432434V |
| க.சந்திரகுமார் | 803152268V |
| த.கஜேந்திரன் | 790403410V |
| செ.சதீசன் | 782960571V |
| பா.வசந்தன் | 790662091X |
| ச.சுகந்தினி | 828050907V |
| ப.கோபிகிருஷ்னா | 791941741V |
| க.தட்சனாஜினி | 847951699V |
| யோ.சோமசுந்தரம் | 811691674V |
| அ.சத்தியன் | 830014497V |
| ர.சர்மிளா | 816094631V |
| க.பிரபாகரன் | 821761425V |
| தி.பாலச்சந்திரன் | 812554298V |
| வ.ரஞ்சன் | 821894336V |
| சி.சிவராஜ் | 772001258V |
| ந.கார்த்திகா | 827442437V |
| பொ.சிவகுமார் | 741803445V |
| ச.சிவத்திலகன் | 851983864V |
| க.சசிகுமார் | 853302104V |
| ச.பார்த்தீபன் | 840572510V |
| அ.வாசுகி | 807231227V |
| பி.லிசோதா | 845402868V |
| அ.தமிழரசி | 847911476V |
| இ.உதயசெல்வி | 796205032V |
| ப.பர்மிளா | 855232898V |
| சி.சுபேந்திரன் | 783473623V |
| த.சர்மிளா | 817844464V |
| ஆ.பங்கயற்செல்வி | 737232697V |
| ச.ரமேஸ்குமார் | 812725246V |
| இ.ரமேஷ் | 831593555V |
| ப.சுஜீவன் | 741061813V |
| க.கடம்பசோதி | 822412467V |
| சு.வசந்தரூபி | 817141412V |
| நி.வனஜா | 835644294V |
| த.சந்திரிக்கா | 836712943V |
| ம.தமிழினி | 817571158V |
| பி.வினோதினி | 828093975V |
| கோ.அன்புராஜ் | 761140655V |
| வி.தக்சிலாநிதி | 805930063V |
| ஜெ.புஸ்பாவதி | 815321278V |
| ச.ஜெனிதா | 808521806V |
| இ.துஷிந்தன் | 803500827V |
| உ.றாதிகா | 805242752V |
| நி.யசோதா | 796081937V |
| கோ.பாலவேணி | 845563667V |
| கோ.நிரஞ்சனன் | 782724088V |
| ப.பார்த்தீபன் | 783212226V |
| த.சிறிரூபன் | 773135010V |
| கி.கௌசிகா | 826622261V |
| வி.சுவெந்தினி | 817651208V |
| சு.சங்கீதா | 808311992V |
| கு.அகிலன் | 762801663V |
| ப.ஜெகூரன் | 772891334V |
| சு.சுகநீதன் | 812124366V |
| செ.சந்திரேஸ்வரி | 767830971V |
| ய.சுவர்ணா | 827403598V |
| அ.ஜேசுதாசன் | 857782763V |
| பா.தேவரதன் | 862930576V |
| பி.சுகந்தினி | 795805141V |
| சி.உதயரேகா | 836583205V |
| வி.வசந்தன் | 812645650V |
| ந.பிரசாந்தன் | 833664000V |
| சி.அரியதாசன் | 792734189V |
| ச.காந்திமதி | 806963453V |
| பி.உதயவிஜயகுமாரி | 775920483V |
| க.கஜேந்தினி | 746232748V |
| க.மயூரதன் | 771334199V |
| த.ரஜனிகாந்த் | 791125006V |
| தி.ஏரின் க்ளரிஸ்ரா | 778373980V |
| நீ.சசிக்குமார் | 803514852V |
| வி.சாரூபன் | 822823017V |
| கோ.ஜிஹோதினி | 828604959V |
| கு.குலேந்திரராஜா | 810092661V |
| உ.யோகராசா | 781224960V |
| சோ.சுகந்தினி | 838494005V |
| நா.சோமசுந்தரராஜன் | 790016696V |
| ஜெ.சதூஜா | 795442561V |
| கை.துஷ்யந்தன் | 823434430V |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களின் கிரிக்கெட்; நல்லூர் பிரதேச சபை 'ஏ' அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.3

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச சபை 'ஏ' பிரிவு அணி வெற்றி பெற்றது.

கடந்த வெள்ளிக் கிழமை முத்துத்தம்பி பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரை இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச சபை 'ஏ' பிரிவு அணியை எதிர்த்து சாவகச்சேரி நகரசபை அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சாவகச்சேரி நகரசபை அணித் தலைவர் முதலில் களத் தடுப்பில் ஈடுபடுவதாக தீர்மானித்தார்.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச சபை 'ஏ' பிரிவு அணியினர் 12 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களை குவித்தனர்.

இதில் சிந்துராஜ் இரண்டு ஆறுகள், ஒரு நான்கு உட்பட 18 ஓட்டங்களையும், நிரோஜன் இரண்டு ஆறுகள் உட்பட 18 ஓட்டங்களையும் பத்மரூபன் இரண்டு ஆறுகள் உட்பட 14 ஓட்டங்களையும், தயாபரன் இரண்டு ஆறுகள், இரண்டு நான்குகள் உட்பட்ட 21 ஓட்டங்களையும், பிரேம்குமார் ஆட்டம் இழக்காமல் 11 ஓட்டங்களையும், கோகுலசுதன் 6 ஓட்டங்களையும், சாந்தசீலன் 7 ஓட்டங்களையும் சிவசாந்தன் 4 ஓட்டங்களையும், டாக்டர் நடேசராசன் 6 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

129 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்று களம் இறங்கிய சாவகச்சேரி நகரசபை அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 58 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் அகிந்தன் 16 ஓட்டங்களை தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

நான்கு வீரர்கள் ஓட்டம் எதனையும் பெறாமலும் ஏனையோர் ஒற்றை இலக்கத்துடனும் ஆட்டம் இழந்தனர்.

பந்து வீச்சில் நல்லூர் பிரதேச சபை 'ஏ' பிரிவு அணி வீரர்களான நிரோஜன் 2 இலக்கையும், டாக்டர் நடேசராசன் 2 இலக்கையும், சிவாகந்தன் 2 இலக்கையும், சாந்தசீலன், சிந்துராஜ், தயாபரன் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர். (ம-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.3

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி மின் ஒளி விளையாட்டுக் கழகம் மாவட்டரீதியில் மின் ஒளியில் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகிறது.

இதில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

இரவு 7 மணி - கைதடி வளர்மதி வி.க எதிர் புத்தூர் கலைமதி வி.க., இரவு 7.30 மணி - கே. கே. எஸ் ஐக்கிய வி.க.எதிர் கைதடி விநாயகர் வி.க. (ம-23)

# பாடசாலைகளிடையே உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, ஓக. 3

இலங்கை கல்வி அமைச்சு அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளை எதிர்வரும் 8 ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில் பதுளை வின்சன் டயஸ் விளையாட்டரங்கு, பதுளை உதைபந்தாட்ட மைதானம், பதுளை துடுப்பாட்ட விளையாட்டரங்கு என்பவற்றில் நடத்தவுள்ளது.

ஆண்கள், பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வட மாகாணத்தின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**ஆண்கள் -17 வயது பிரிவு**
மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி, ஏழாலை ஸ்ரீ முருகன் மகாவித்தியாலயம், கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**
மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி.

**பெண்கள்** - மானிப்பாய் மகளிர் கல்லூரி, வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயம். (ம-86)



யாழ்.மத்திய கல்லூரியின் 195 ஆவது நிறுவுநர் தினத்தை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் கல்லூரிகளின் பழைய மாணவர் சங்க அணிகளுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தியது. இதில் இறுதி ஆட்டத்தில் சிறந்த களத்தடுப்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் அணி வீரன் மயூரன், சிறந்த துடுப்பாட்ட வீரன், ஆட்டநாயகன், ஆட்டத் தொடர் நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் அணித் தலைவர் மணிவண்ணன் ஆகியோருக்கு நிகழ்வில் பிரமத விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மத்திய கல்லூரி அதிபர் எல். ஓங்கார மூர்த்தி விருது வழங்குகிறார். (ம-23)

வடமாகாண பாடசாலைகள் கிரிக்கெட்

# யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி 49 ஓட்டங்களால் வென்றது

யாழ்ப்பாணம், ஓக.3

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையில் 17 வயதுப் பிரிவுகளுக்கு இடையே நடைபெறும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியால்ய அணி 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கு அமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி முதல் ஓவரில் ஓட்டங்கள் எதையும் பெறாத நிலையில் 2 விக்கெட்டுகளை இழந்து இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்த நிலையில் அணித் தலைவர் விதுர்ஷன், பிரதாபன் ஆகியோரின் நிதானமான ஆட்டம் மூலம் அணி சரிவில் இருந்து மீண்டு கொண்டது.

46 ஓவர்கள் முடிவில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்களை பெற்றது.

பிரதாப், பிரசாத், விதுர்சன் ஆகியோர் தலா 35 ஓட்டங்களையும் கம்சிகாந், 30 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்களான சௌமிதரன், சேரன் ஆகியோர் முறையே தலா 3 விக்கெட்டுகளையும் சிறிவண்ணன், நிரூபன் , டர்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

188 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்று பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 43.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

டர்வின் 38, நிசாந்த ரூபன் 17, யூலிஸ் 14 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி வீரர்களான பிரசாத், 3 விக்கெட்டுகளையும் மாதவன், கம்சிகாந் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (ம-23)

# பாடசாலைகளிடையே சதுரங்கம்; வடமாகாண அணியும் செல்கிறது

வலி.வடக்கு, ஓக.3

இலங்கை கல்வி அமைச்சு அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே ஆண்கள், பெண்களுக்கு சதுரங்கப் போட்டிகளை எதிர்வரும் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் பதுளை மத்திய மகாவித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடத்தவுள்ளது.

ஆண்கள், பெண்களுக்கான சதுரங்கப் போட்டிகளில் வட மாகாணத்தில் இருந்து கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**ஆண்கள்**

**15 வயதுப் பிரிவு**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி,யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி.

**பெண்கள்**

**15 வயதுப் பிரிவு**

வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. (ம-86)

# 4 ஓட்டங்களைத் தவறவிட்ட சென்.ஜோன்ஸ்; 2 ஓட்டங்களால் வென்ற யாழ். இந்து

வலி.வடக்கு, ஓக. 3

கடைசி இரண்டு பந்துகளில் 10 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணி தனது 29 ஆவது பந்தில் ஆறு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணி பெரும் போராட்டத்தின் பின்னர் 2 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 195 ஆவது ஆண்டு நிறுவுநர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கிடையில் நடத்திய ஆறு பேர் பங்கு பற்றும் ஐந்து ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணியும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணி 5 ஓவர்கள் நிறைவில் 2 விக் கெட்டுக்களை இழந்து 67 ஓட்டங்களைப்பெற்றது.

மணிவண்ணன் ஆட்டமிழக்காது 5 நான்குகள் 2 ஆறுகளுடன் 41 ஓட்டங்களையும் ஜனார்த்தனா 15 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த அகிலன் 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

68 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணி 5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

அகிலன் 25, லவேந்திரா, காண்டீபன் ஆகியோர் தலா 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜனார்த்தனா 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாகவும் போட்டியின் தொடர் நாயகனாகவும், போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணியின் தலைவர் மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணியைச் சேர்ந்த காண்டீபன் சிறந்த பந்துவீச்சாளராகவும் மயூரன் சிறந்த களத்தடுப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியேற்ற காலம் முதல் வகை தொகையின்றி ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர். பலர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். பலர் நேரடியாகவே பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இப்பொழுதும் *உதயன்* செய்தி ஆசிரியரைக் கொலை செய்யும் நோக்கத்துடனேயே தாக்கியுள்ளனர்.

இதுவரை காணாமல்போனவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. கொலைகளுடனும், தாக்குதல்களுடனும் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்படவில்லை. எனவே பாதுகாப்புக்குப் பொறுப்பான ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுமே இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்றார் மங்கள சமரவீர.

**மனோ கணேசன்**

யாழ்ப்பாணத்தில் இராணுவத்துக்குத் தெரியாமல் மனிதர்கள் அல்லர், ஒரு எலி கூட அங்கும் இங்கும் அசையமுடியாது. அப்படியான சூழ்நிலையில் *உதயன்* பத்திரிகையின் செய்தி ஆசிரியர் குகநாதனைத் தாக்கியவர்கள் தப்பிச் சென்றது எப்படி? அரச அனுசரணையுடனேயே இந்த மிலேச்சத்தனத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்கிறார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:- கடந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்துக்காக நான் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்தபோது மூத்த ஊடகவியலாளரும் எனது நண்பருமான குகநாதன் *உதயன்* பத்திரிகைக்காக என்னைப் பேட்டி கண்டார். அப்போது கடந்த காலங்களில் அவருக்கு ஏற்பட்ட கொலை அச்சுறுத்தல்கள், *உதயன்* பத்திரிகை அலுவலகம் மீது குண்டர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது உயிரிழந்த சக நண்பர்கள் தொடர்பாக மிகவும் வேதனையுடன் கூறினார். இப்பொழுதும் கூட அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. மேலதிக பாதுகாப்பு கேட்டு கோரிக்கை விடுத்தும் பாதுகாப்புப் பிரிவினரால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் என்னிடம் கூறினார்.

இப்படி அவர் கூறிய சில தினங்களின் பின் குகநாதன் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளார். தாக்கப்பட்ட இடத்தில் இருந்து கிட்டத்தட்ட முப்பது மீற்றர் தூரத்தில் இராணுவச் சோதனை நிலையம் இருக்கின்றது. அப்படியானால் தாக்குதலின் பின்னணியில் இருந்து செயற்பட்டது யார்? 25 வருட அனுபவம் மிக்க ஜனரஞ்சகப் பத்திரிகை *உதயன்*. ஒரு ஊடகம் நினைத்தால் எதையும் செய்யமுடியும் என்பதற்கு உதாரணம் 'உதயன்'.

*உதயனின்* உண்மைத் தன்மையால் குடாநாட்டு மக்கள் *உதயனின்* பக்கமே இருக்கின்றனர். உதயன் மீது மக்கள் கொண்டுள்ள அதீத நம்பிக்கையையும் அதன் வளர்ச்சியையும் ஆரம்பம் முதலே விரும்பாத ஒரு குழுவினரே இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருக்கின்றனர். அதற்கு அரசின் முழு அனுசரணையும் கிடைத்துள்ளது. இதற்கு அரசே பதில் சொல்லவேண்டும் என்றார் மனோ கணேசன்.

**ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர**

யாழ்ப்பாணத்தில் அதி உத்தம ஜனாதிபதி முதல் எல்லா அமைச்சர்களும் கூடாரம் அடித்துக் கொண்டு தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டனர். ஆனால் யாழ்ப்பாண மக்கள் இவர்கள் முகத்தில் சேற்றைப் பூசி அனுப்பி விட்டனர். அரசுக்கு ஏற்பட்ட படுதோல்வி தான் *உதயன்* செய்தி ஆசிரியர் மீதான தாக்குதலுக்கு வழிவகுத்தது என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இது தனிப்பட்ட முறையில் குகநாதன் மீது நடந்த தாக்குதல் அல்ல. ஒரு பலம் மிக்க பத்திரிகை மீதும் ஊடக சுதந்திரம் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் இது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜனநாயக ரீதியில் மக்கள் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்ளும் தைரியம் இல்லாத கோழைகளால் மேற்கொள்ளப்பட்டதே இந்தத் தாக்குதல். இதனுடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது அரசின் கடமை. இந்த விடயத்தில் அசட்டை காட்டாமல் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார் தயாசிறி ஜயசேகர.

**ஜயந்த கெட்டகொட எம்.பி.**

ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த கெட்டகொட கூறுகையில், *உதயன்* செய்தி ஆசிரியர் குகநாதன் மீதான தாக்குதல் உண்மையின் மீது விழுந்த அடி என்றே கூறவேண்டும் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கொட்டகொட. அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மையை வெளிப்படுத்தும் எவையாக இருந்தாலும் அவற்றை அடியோடு அழித்து ஒழித்துவிட வேண்டும் என்பதே இந்த அரசின் கொள்கை.

ஜனநாயக நாட்டில் சுதந்திரமாகப் பேசவும், கருத்துகளைக் கூறவும்கூட முடியாதுள்ளது. இராணுவ அடக்குமுறைகள் அதிகரித்துள்ளன. சட்டமும் ஒழுங்கும் குறைந்து விட்டன. தனிமனித பாதுகாப்பு கேள்விக்குரியதாகிவிட்டது.

ஊடகவியலாளர்கள் கடத்தப்படுதலும், காணாமல் போவதும், கொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் சர்வ சாதாரணமாகி விட்டன. இதனைத் தட்டிக் கேட்க எவரும் இல்லை.

இவற்றை வெளிப்படுத்தும் ஊடகங்களும் அச்சுறுத்தப்படுகின்றன. இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக நன்றாகக் குரல் கொடுப்போம் என்றார் ஜயந்த கெட்டகொட.

இதே கருத்தை முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் துணைவியார் அனோமாவும் தெரிவித்தார்.

**விக்கிரமபாகு கருணாரட்ன**

இப்பொழுது வடக்கில் இராணுவ சர்வாதிகார ஆட்சியே இடம்பெறுகின்றது. அங்கு ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் காணிகளை எல்லாம் இராணுவம் அபகரித்துள்ளது. அதி உயர்பாதுகாப்பு வலயம் என்று தமிழ் மக்களின் வீடுகளை எல்லாம் தன்னகப்படுத்திக் கொண்டுள்ளது என்று தெரிவித்தார் விக்கிரமபாகு கருணாரட்ன.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

இப்படியான நிலையில் புலம்பெயர் தமிழர்களை மீண்டும் வாருங்கள் என்று அழைப்பு விடுக்கின்றது. அவர்கள் நாடு திரும்பினால் தாமும் கொல்லப்படுவோமா என்று அஞ்சுகின்றனர்.

வடக்கில் ஏற்பட்ட தோல்வியைத் தாங்கிக்கொள்ள முடியாத அரசு யாழ். மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளது. இது ஒரு அரசியல் பழிவாங்கல்.

*உதயன்* பத்திரிகை மீது இன்று நேற்று அல்ல, அது ஆரம்பித்த காலம் முதல் தொடர்ச்சியாகப் பல்வேறு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. குகநாதன் தாக்கப்பட்டமையும் அரசின் பங்களிப்புடனேதான் இடம்பெற்றுள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு முகமூடி கிழிக்கப்படவேண்டும் என்றார் விக்கிரமபாகு கருணாரட்ன.

**மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன்**

*உதயன்* பத்திரிகை ஆரம்பித்த காலம் முதலே பலத்த சோதனைகளுக்கு முகம் கொடுத்து எதிர்நீச்சல் போட்டு வெற்றி கண்டுள்ளது என்று தெரிவித்தார் மூத்த ஊடகவியலாளரும் *உதயன்* பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான ந.வித்தியாதரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- யுத்த காலத்திலும்கூட உண்மையான செய்திகளை மக்களுக்குத் துணிச்சலாக வழங்கியது.

பல தடவைகள் நேரடியாகத் தாக்குதல்களுக்கும் முகம் கொடுத்தது. மிலேச்சத்தனமான கூலிப் பட்டாளங்களின் தாக்குதலின்போது சக ஊடகவியலாளர்களை இழந்துள்ளோம். குண்டுவெடிப்புகள், மரண அச்சுறுத்தல்கள் இடம்பெற்ற போதெல்லாம் குகநாதன் மிகவும் தெம்புடன் செயல்பட்டவர்.

இன்று தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களின் இந்தக் கோழைத்தனமான தாக்குதலை ஊடக சமூகமே வன்மையாகக் கண்டிக்கின்றது. விசேடமாகக் கூறவேண்டுமானால், பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் ஆபத்து நிறைந்த வண்டியிலும் துணிச்சலுடன் ஏறிப் பயணம் செய்தவர். அவரது துணிச்சல்கள் பாராட்டப்படவேண்டியவை என்றார் வித்தியாதரன். (உ)

## 17ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



### தம்பிஜயா ரவிச்சந்திரன்

(ராசன்)

திதி: 03.08.2011

சிரித்து சிரித்து எம்மைத் தவிக்க
விட்டாயே!
ஓம் சாந்தி!

**அன்னை மடியில்**
**05.01.1968**
**ஐங்கரன் அடியில்**
**10.08.1994**

நவேந்திரகிரி,
இணுவில் மேற்கு.

**- குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் **திருமதி.வத்சலாதேவி அமிர்தலிங்கம்** அவர்களின் அன்புத் தந்தை

**சின்னத்தம்பி சிவகுரு**


அவர்கள் 01.08.2011 அன்று காலமான செய்தி அறிந்து நாம் அனைவரும் அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கால்நடை உற்பத்தி சுகாதாரத்**
**திணைக்களம், யாழ்.மாவட்டம்.**

**உத்தியோகத்தர்கள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**தோற்றம்**
**24 - 01 - 1952**



**மறைவு**
**04 - 07 - 2011**

அமரர்

### மயில்வாகனம் அம்பிகைபாலன்

கடந்த 04.07.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் திரு. மயில்வாகனம் அம்பிகைபாலன் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (03.08.2011) புதன்கிழமை நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குமிழடி, அல்வாய்

**குடும்பத்தினர்.**

## குப்பிளான் - திருவருள்மிகு
## கற்கரை கற்பக விநாயகர் திருக்கோயில்

### சிற்பத் திருமஞ்சம் வெள்ளோட்ட விழா

மெய்யடியார்களே!

எம்பெருமான் திருவருட்டுணையால் நிகழும் ஆடித் திங்கள் 19ஆம் நாள், பஞ்சமித் திதியும் சித்தயோகமும், அத்த நட்சத்திரமும் கூடிய குருவார நன்னாளில் (2011.08.04) நண்பகல் 12 மணிக்கு மேற்படி திருமஞ்ச வெள்ளோட்டம் நிகழவுள்ளது. யாவரும் தரிசித்து இறையருள் பெறுக.

**உருவாக்கம்: கலாபூஷணம் சு.இராசரத்தினம், திருநெல்வேலி.**

**வெள்ளோட்ட நிகழ்வுகள்**

| | |
|---|---|
| தலைமை: | க.சின்னராசா (ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.) தலைவர்– ஆலய பரிபாலன சபை |
| முற்பகல் 11 மணி முதல் : | சாந்திக் கிரியைகள் |
| நண்பகல் 12 மணி : | **ஆசியுரை** சிவஸ்ரீ கி.வைத்தீஸ்வரக் குருக்கள் |
| நண்பகல் 12.05 மணி : | **வாழ்த்துரை** திருமதி இமெல்டா சுகுமார் (அரச அதிபர் – யாழ்ப்பாணம்) |
| நண்பகல் 12.20 மணி: | **சிறப்புரை** செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுகன் (தலைவர், துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பழை) |
| நன்றியுரை : | ஏ.அனுசாந்தன் (ஆலயச் செயலாளர்) சைவப் புலவர் குப்பிழான் |

குப்பிழான். அரன்பணி வழுவாத ஆலய பரிபாலன சபை.

## வேலை வாய்ப்பு

கணினி ரைப்செற்றிங் செய்யக் கூடியவர் தேவை.
[illegible] சம்பளம் வழங்கப்படும்.

**0772174751**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**பிறப்பு**
**02 . 01 . 1942**



**இறப்பு**
**04 . 07 . 2011**

### அமரர் கந்தையா கந்தசாமி

அன்பாலே எமை அரவணைத்து
பண்பாக வாழ வழி செய்த அப்பாவே!
தினமும் உங்கள் முகம் காணாது – இங்கு
தவிக்கும் உங்கள் மனைவி, பிள்ளைகளை பிரிந்து
விண்ணுலகம் சென்றாலும் – எம்
இதயத்தில் என்றும் இருப்பீர்கள்
ஓர் தெய்வமாக....!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (03.08.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.01, அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுடன்,
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கச்சி செல்லையா



நல்லூரைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி புகையிரத ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கச்சி செல்லையா 28.07.2011 வியாழக்கிழமை சிவலோகபதி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் –சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா – செல்லையாவின் அன்பு மனைவியும் செல்வமுத்து பத்மநாதன், காலஞ்சென்றவர்களான பாக்கியம் சோதிப்பிள்ளை, நடராஜா, அன்னபூரணம் ஆகியோரின் சகோதரியும் ராஜலட்சுமி, சிவநாதன், சிவபாக்கியம், செல்வராணி, கேதீஸ்வரி, விஜயலட்சுமி, சொரூபராணி, சிவகணேசநாதன், காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் பாரித்தம்பி, பராசக்தி, செல்வரட்ணம், ஜெகநாதன், ஜெயராஜன், சசிமலர், காலஞ்சென்றவர்களான ராஜரட்ணம், ராஜேந்திரா பரமநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும் வேலாயுதம், சரிதாநந்தன், வளர்மதி, விமலேந்திரன், சாந்திமதி, தயாபரன், சந்திரவதனா, கிருபானந்தா, Dr.யமுனாநந்தா, கம்சநந்தி, நிஜாநந்தி, Dr.சிவசக்தி, கங்கநந்தி, சந்திரவதனன், ரமேஸ், முரேஸ், றிக்கேஸ், கஜனி, கிஷானி, பஜானி, புவிதா, மீரா, விமோக்கி, ஆகாஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை (02.08.2011) லண்டனில் நடை பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புகையிரத ஒழுங்கை,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
03 ஒகஸ்ட் 2011 புதன்கிழமை

# 15ஆம் நாள் நினைவாக

மலர்வு
1942
*
02
*
15



உதிர்வு
2011
*
07
*
20

## திருமதி கமலநாயகி முருகையா

வட்டுக்கோட்டை, கற்பகச் சோலையைப் பிறப்பிடமாகவும், காரைநகர், பொன்னம்பலம் வீதியை புகுந்த இடமாகவும், 1987-2010 காலப்பகுதியில் ஒட்டுமடம் 571/1, மானிப்பாய் வீதி கமலபதியில் வசித்தவருமான கமலநாயகி இறைசிந்தனையுடன் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் பஜன் பாடகியாகவும் தேவாலயங்களில் பஜனை, திருவாசக முற்றோதல் ஆகியவற்றில் விருப்புடன் பங்கு கொண்டார். 2010.06.18ஆம் திகதி மௌன நிலையடைந்து 2011.07.20இல் சிவசாயி மகாதேவன் பாதத்தினை சேரப்பெற்றார்.

2011.07.21ஆம் திகதி அன்னாரின் காரைநகர் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று சாயி நிலையத் தலைவர் தொண்டர்கள் பஜனை செய்து லிங்கோத்பவ சாயி ஸ்ரீமதி கண்ணன் அம்மா மூலம் பகவான் அருளால் திருநீறு சொரிந்து ஆசீர்வதிக்கப்பட்டு தீயுடன் சங்கமமாகி 3ஆம் நாள் கங்கை சேர் சிதம்பர சமுத்திரத்தில் அஸ்தி கலக்கப்பட்டது.

பஜனைப்பாடல் மூலம் பல்லாயிரம் பேரை கவர்ந்த அன்னாரின் உதிர்வு குறித்து அறிவிக்கமுடியாமைக்கு அன்பர்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கோருகின்றோம்.

அவர் நினைவாக வெளியிடவிருக்கும் கமலமலருக்கு அணி சேர்க்க விரும்பும் கருத்துக்களை கீழ்க்காண் முகவரிக்கு 2011.08.08ஆம் திகதிக்கு முன் அனுப்பி உதவுங்கள்.

அந்தியேட்டிக் கிரியைகள் 2011.08.17 புதன்கிழமை காரைநகர் சாம்பலோடை சிதம்பரம் மண்டபத்தில் நடைபெற்று சிதம்பர தீர்த்தத்தில் சேர்க்கப்படும். 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் சாயிபஜன் அன்னம் வழங்கலில் அன்பர்கள் பங்குகொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையை கூட்டாக நிறைவு செய்யுங்கள்.

இறுதிக்கிரியையில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், சாயி நிலையத் தலைவர், தொண்டர்கள், ஸ்ரீமதி சாயி கண்ணன் அம்மா அவர்களுக்கும் உதிர்வு அறிந்து வருகை தந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த நன்றிகள்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பொன்னம்பலம் வீதி,
ஆதி வீரபத்திரர் கோயில் அருகில்,
காரைநகர்.
தொலைபேசி: 0750475528, 0771944954.

சோடிழந்த அன்றிலின் நிலையில் துணைவர்
மூ.க.முருகையா, ஒய்வுபெற்ற கூட்டுறவு
உதவி ஆணையாளர்.

# மரண அறிவித்தல்

## ஐயாக்குட்டி சரவணமுத்து



புதுக்குடியிருப்பு, சிவநகர், 7ஆம் வட்டாரத்தை நிரந்தர முகவரியாகவும், இல.307/28, கிராம அலுவலர் அலுவலகம் அருகாமை, கூமாங்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஐயாக்குட்டி சரவணமுத்து இந்தியாவில் 30.07.2011 அன்று காலமானார்.

அன்னார் ஐயாக்குட்டி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற திருநாவுக்கரசு மற்றும் நாகேஸ்வரி, வசந்தாதேவி(கிளி), மகாலக்சுமி (இராணி), காலஞ்சென்ற வளர்சிங்கம் மற்றும் சிவபாக்கியம் (சின்னம்மா), வேல்முருகன்(சாமி), பாலகிருஷ்ணன் (பாலன்), பத்மநாதன் (வெள்ளையன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நல்லம்மாவின் பாசமிகு கணவரும், சோமளாதேவி(முள்ளிவாய்க்கால்), சற்குணராசா(ராசன்- கோம்பாவில்), சாந்தினிதேவி(புதுக்குடியிருப்பு), சாந்தகுமார்(வசந்தன்-லண்டன்), சத்தியசீலன்(சிவா-லண்டன்), சசிதரன் (சுதன்- புதுக்குடியிருப்பு), சர்மிளாதேவி(ரதி-புதுக்குடியிருப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவநேசன்(முள்ளிவாய்க்கால்), காந்தமலர்(கோம்பாவில்), சதீஸ் (ப.நோ.கூ.சங்கம்- பரந்தன்), லதாநிதி(லண்டன்), பிரசாந்தி(இலங்கை வங்கி-முல்லைத்தீவு), சிறிதரன்(வலயக்கல்விப் பணிமனை, முல்லைத்தீவு), ஜனனி (யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும், வேனாவர்மன், காலஞ்சென்ற நிரூஜன் மற்றும் நிதுஷா, ஜெயதீபன், ஜசிந்தா, ரூபதர்சிகா, சஞ்சிகா, டஞ்சிகா, பிரதீப், பிரியந்தி, சங்கவி, கருணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்டு தற்காலிக வதிவிடமான கூமாங்குளம் இல்லத்தில் வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக நாளை (04.08.2011) வியாழக்கிழமை நெளுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இரத்தினம் சிவகுமார்



மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவகுமார் (01.08.2011) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் இரத்தினம்- அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு இளைய புதல்வனும் கந்தசாமி-சிவகாமி(ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம், ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபம், சிவகாமி நெற்கபே) தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சியின் பாசமிகு கணவரும், கானன், கவின், கவீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி ப. சாந்தநாயகி(ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் ம.வி), திருமதி மு.வசந்தநாயகி (ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி), திருமதி இ.குமுதநாயகி, உதயகுமார், திருமதி கி.கலைரதி (ஜேர்மனி), திருமதி தே.கலைமதி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செ. பரமலிங்கம்(விநாயகர் பேக்கரி, மீசாலை), வ.முத்துக்குமார்(ஆசிரியர், மீசாலை விக்னேஸ்வரா ம.வி), இ.இராசேந்திரம்(பாலா திரையரங்கு, சாவகச்சேரி), திருமதி உ.சுபத்திரை, க.கிருபாகரன்(ஜேர்மனி), சி.வேதலிங்கம்(பிரான்ஸ்), திருமதி மு. நிர்மலா(ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வரா ம.வி), நிர்மலன் (சுவிஸ்), க.சுபாஸ்கரன், திருமதி கி.சுபாஜினி, திருமதி வி.சுபேதா ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி நி.சிவசக்தி(சுவிஸ்), திருமதி சு.துஷ்யந்தி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், தி.முருகதாஸன்(மதுவரி உத்தியோகத்தர், மதுவரி நிலையம், சாவகச்சேரி. தலைவர், லயன்ஸ் கழகம், சாவகச்சேரி), ந.கிருபாகரன்(ஆசிரியர், மீசாலை விக்னேஸ்வரா ம.வி), பா.விஜியழகன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் இங்கிதன்(U.K), மதுராங்கன், உமையவள், காங்கையன், பிரணவன், சாரங்கா, சஞ்சீகன், கெவின்(ஜேர்மனி), கிரன்(ஜேர்மனி), இலக்கியன்(பிரான்ஸ்), மலரேன்(பிரான்ஸ்), கனிஸ்டன்(பிரான்ஸ்), நிரோஜின்(சுவிஸ்), சிவப்பிரியன்(சுவிஸ்), நிரோஜா(சுவிஸ்), ராகவி ஆகியோரின் மாமனும், கௌசிகா, கோபிகா, விஷ்ணுகா, கம்சிகா, சரணிகா, ஆரணிகா, ஐங்கரன், தாட்சாயினி, அபிஷாயினி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.கந்தசாமி
1ஆம் கட்டை வீதி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

லண்டன் முகவரி:
S.SIVAKUMAR,
44, BEECH WOOD AVENUE,
GREEN FORD, UB6 9UB.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11,664 முன்னாள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றுத் தெரிவித்தார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை சமூகத்தில் ஒன்றிணைப் பதற்கான சமய, சமூக தலைவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையில் திருகோணமலையில் நடைபெற்றபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது நந்திக்கண்டல் களப்பு பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். இவ்வாறு சரணடைந்தவர்களில் 594 சிறுவர் போராளிகள், 2 ஆயிரத்து 33 பெண் போராளிகள் மற்றும் 9 ஆயிரத்து 37 ஆண் போராளிகள் என 11 ஆயிரத்து 664 பேர் புனர்வாழ்வு பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், எமது புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தும், புனர்வாழ்வு பெற்றுள்ள 11 ஆயிரத்து 664 முன்னாள் போராளிகள் அவரவர் வீடுகளுக்குத் திரும்புவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். இதற்கான காரணம் அறியப்படாத நிலையிலேயே இவ்வாறான விழிப்புணர்வு செயற்திட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

- இப்படி அவர் கூறினார்.


### ஆண்டொன்றில் அழியாத நினைவலைகள்



வையகத்தில் 07.07.1947 வானகத்தில் 03.08.2010

அமரர் மனுவேற்பிள்ளை நீக்கிலாஸ்

ஆவணியன்று ஆவிபிரிந்து ஆண்டொன்று ஆனதுவோ?
அன்பு குழைந்த அமுத மொழியும் அறிவுகான்
நன்சொல் உரையும் நம்மை நீங்கி நலிந்ததுவோ?
அப்பா என்றழைக்க ஆற்றாத- எம்
ஆவி பிரியாதோ?

அண்டம் அழிந்து நாம் ஆவி துறந்தாலும்
அழியாது உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.
0214912799

(சி/8369)

இல.01, D-10,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

### 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும்



கடந்த 03.07.2011 ல்
சிவபதமடைந்த எமது அன்னை
அமரர்
முருகேசு
செல்லம்மா

அவர்களது 31ஆம் நாள் நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நெல்லியடி நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் இன்று [03.08.2011] புதன்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெறவிருக்கின்றது. தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

''சதாபொன்ஸ்''
அல்வாய். (சி/8375) குடும்பத்தினர்.

### Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 3000/= |
| * Dip.in Programming Language | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm

Batch I - 03.08.2011 9am or 3Pm Batch II - 05.08.2011 9am or 3Pm
Batch III - 06.08.2011 9am or 3Pm Batch IV - 07.08.2011 9am or 3Pm

C,C++,Java,Java script,VB,Html, Programming Language University Of Madras Bsc
பல்கலைக்கழக மாணவர்களுக்கான Diploma in Computerized Accounting Packages விரிவுரையாளர் - Ash

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444


## சுஷ்மா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் தங்கியிருப்பார்.

இந்தியா சென்றுள்ள இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கும், திருமதி சுஷ்மா சுவராஜுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் டில்லியில் இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டின்போதே திருமதி சுவராஜ் இதனைக் கூறினார்.

இலங்கை விஜயத்தின்போது யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைக் கண்காணிப்பேன் என்றும் அவர் கூறினார். (சி)

## யாழ். குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2010ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின்படி யாழ்ப்பாணத்தில் 3 லட்சம் வாக்காளர்கள் குறைவடைந்துள்ளனர் என்றும், அதன் அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைக்கப்படவுள்ளது என்றும் தேர்தல்கள் செயலகம் இதற்குக் காரணம் கூறியுள்ளது.

யுத்தம் முடிவடைந்து மிகக் குறுகிய காலப்பகுதியில்தான் இந்தச் சனத்தொகை மதிப்பீடு அங்கு மேற் கொள்ளப்பட்டது. யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் இன்னும் பூரணமாகக் குடியமர்த்தப்படவில்லை. கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் அந்த மக்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

அந்த மக்களை முற்றாக மீள்குடியமர்த்திவிட்டே சனத்தொகை மதிப்பீடு செய்யவேண்டும். இப்போது அவசரப்பட்டு சனத்தொகை மதிப்பீட்டைச் செய்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்காக அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறைக்கும் இந்தத் திட்டம் இந்தப் பேச்சுகளைப் பாதிக்கும்.

அதுமாத்திரமன்றி, நாடாளுமன்றத்துக்குத் தமது பிரதிநிதிகளை அனுப்பும் தமது ஜனநாயக உரிமைகளை சிங்கள அரசு பறிக்கின்றது என்று தமிழ் மக்கள், எம்மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பர்.

ஆகவே, இது இப்போது செய்ய வேண்டிய வேலை அல்ல. இதற்கு அவசரம் காட்டவேண்டாம். இந்தத் திட்டத்தை உடன் நிறுத்தவேண்டும்.

தமிழர்களின் நம்பிக்கையை வெல்வதாகவிருந்தால் இவ்வாறான சில்லறைத் தனமான வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டு அரசியல் தீர்வை முன்வைக்கும் வேலையைப் பார்க்க வேண்டும். - என்றார்.


### காணவில்லை

இளஞ்சிவப்பு, முன்பாக கொம்பு வளைந்தது கழுத்திலும் கொம்பிலும் கயிறுகட்டப்பட்ட பால்மாட்டை கடந்த வியாழக்கிழமையில் இருந்த காணவில்லை. கண்டவர்கள் தகவல் தரவும் சம்மானம் வழங்கப்படும்.

B.பிரேமன், பாரதி வீதி, நாயன்மார்கட்டு.
0770782270, 0779073808

### கணினி விற்பனைக்கு

P(IV) 1.7GHZ CPU, 16" LCD Monitor, Keyboard, Mouse, Headphone, Speaker என்பன ஒரு வருட உத்தரவாதத்துடன் 17,750/- மட்டுமே.

SKY COMPUTER 0212221417
162, பிரதான வீதி,யாழ். 0750698608

### அரசறிவியல் கருத்தரங்கு

A/L 2011 ஆம் ஆண்டுக்கான
(புதிய, பழைய பாடத்திட்டம்)

ஆசிரியர் : எஸ்.ரி.தயா B.A. (Hons)

காலம் : 04.08.2011 வியாழன் } 9-12,
05.08.2011 வெள்ளி } 1-5 மணி

இடம் : Academy of Computers Systems
Poonary Junction, Kokuvil East, Kokuvil.

வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.
[illegible]
என்பன வழங்கப்படும்.


## மாநகர சபையின் நிர்ப்பந்தம்

இன்று நடைபெறும் சங்கிலிய மன்னின் சிலை திறப்பு விழாவில் மாநகர சபை ஊழியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளவேண்டும் என்று நிர்வாகம் நிர்ப்பந்தித்துள்ளது என்று அங்கு பணியாற்றுபவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஊழியர்கள் நண்பகல் 12 மணியுடன் கடமையை முடித்துக்கொண்டு வீடு செல்லலாம் என்றும் நேற்று நிர்வாகத்தினர் அனைத்து பிரிவினருக்கும் அறிவித்தல் விடுத்ததாகவும் அவர் கூறினார்.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உத்தரவிட்டார்.

சடலத்தின் மேற்சட்டைப் பையில் இந்திய நாணயமும் இந்தியத் தீப்பெட்டியும் இருந்து எடுக்கப்பட்டன. சடலம் மிகவும் சேதமடைந்த நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-601)

## விளக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தேர்தல்கள் ஆணையாளருக்கு நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வாக்காளர் இடாப்பை அடிப்படையாகக்கொண்டு அண்மைக்காலமாக நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஊடகங்களில் பிழையான செய்திகள் வெளியாகி வருகின்றன. இது தொடர்பாகத் தாங்கள் மிகவும் விழிப்புடன் இருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

யாழ்.மாவட்டத்துக்கு வழங்கப்பட்டிருந்த 9 நாடாளுமன்ற உறுப்பினர்களை 2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பை அடிப்படையாகக்கொண்டு ஆறாகக் குறைக்கத் தேர்தல்கள் செயலகம் முடிவெடுத்திருப்பது தொடர்பாகப் பலர் குழப்படைந்துள்ளனர்.

இதுதொடர்பாகப் பல கட்சிகள் ஊடக அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. பிழையான தகவல்களின் அடிப்படையிலேயே இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன என்று நாம் உணர்கிறோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தில், நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை குறைப்பதானது இனங்களுக்கிடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பான தீர்மானம் தொடர்பாக எமது 'கபே' அமைப்பு உங்களிடம் தெளிவான விளக்கத்தை எதிர்பார்க்கின்றது - எனக் குறிப்பிட்டுள்ளார்.


### கண்ணீர் அஞ்சலி



01.08.2011 அன்று சிவபதம் அடைந்த சமாதான நீதிவானும் இளைப்பாறிய அதிபருமாகிய
பண்டிதர் சின்னத்தம்பி சிவகுரு
B.A. Dip. in Edu.
அவர்களின் பிரிவால் துயருறும் எமது திணைக்கள தலைவர் திருமதி வத்சலாதேவி அமிர்தலிங்கம் உதவிப் பணிப்பாளரும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவிப் பணிப்பாளர் அலுவலகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
யாழ். மாவட்டம்.

உத்தியோகத்தர்கள்.

### நெஞ்சச் சுமைகளோடு கழிந்த ஒருவருடம்

மழலையாய் 11 : 01 : 1953



தெய்வமாய் 13 : 08 : 2010

பொன்னம்பலம் நித்தியானந்தன்

கடைகெட்ட காலன் செயலால்
கலக்கத்தில் உறவுகள்
விடைபெற்றுச் சென்றார் தந்தை
விண்ணோக்கி விதிப்பயனால்
உடைபட்ட உள்ளங்கள் இங்கே
உன்மத்தமாய்! பொழுதெல்லாம்...
நடைபெற்ற நிகழ்வு யாவும் .
கானல் நீரோ? கற்பனையோ?
இல்லம் ஒளிவீசி நிற்க
உம்மை மெழுகாக்கிக்கொண்டீர்
மெல்லநோய் பற்றிய போதும்
மனமது தளராது உழைத்தீர்
எல்லாத் தந்தையரும் உமைப்போலாகுவாரோ?
இல்லை இல்லை நாம் பெற்ற பேறு அது!
சொல்ல முடியாத சோகமதர்ம் தந்தையே
செகமதில் நாம் உமை இழந்தது.........

எம் நெஞ்சக் கருவறையில் நீரே என்றும் தெய்வம் அப்பா.

36/2, நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (6466)

பிரிவால் உருகும் உறவுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0212222809, நேரம்: 8.00am - 6.00pm

**காணியும் வீடும் விற்பனைக்கு**

யாழ். மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியில் இருந்து 50 m தூரத்தில் உள்ள வீடு, வளவு விற்பனைக்கு.

தொடர்புக்கு: 0770760381

**சிறுநீரகம் தேவை**

B+ இரத்தவகையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து 59 வயதான சிறுநீரக நோயாளி ஒருவருக்கு சிறுநீரகம் தேவை.
சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு:
021 3214291, 0212255321

# 650 மில்லியன் ரூபா நிதியை கடனாக வழங்கியது மக்கள் வங்கி

யாழ்ப்பாணம், ஓக. 3

மக்கள் வங்கி வடக்கின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் 650 மில்லியன் ரூபா நிதியை கடனாக வழங்கியுள்ளது.

வடமாகாண மக்களின் அபிவிருத்திப் பணிகளுக்காக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய வடக்கின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இந்த நிதியை மக்கள் வங்கி வழங்கியுள்ளது.

இதில் 650 மில்லியன் நிதியை 4700 பேர் கடனாகப் பெற்றுள்ளனர். அத்துடன் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 80 மில்லியன் நிதியை 1500 பேர் கடனாகப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டங்களின் மூலம் வீடுகட்டுதல், சுய தொழில் வேலை வாய்ப்பு, வியாபாரம் என பல்வேறு தேவைகளுக்காக கடனாகப் பெற்றுள்ளனர் என மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம-313)

# மரண அறிவித்தல்கள்

## குழந்தைவேலு கண்மணி ராஜா



காரைநகர், பலகாட்டை பிறப்பிடமாகவும், வவுனியா பட்டைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு கண்மணி ராஜா நேற்று (02.08.2011) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், மயூரதன் (வவுனியா மத்திய மகாவித்தியாலயம்), யதுஷா (வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2011) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சனாகுளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

வேப்பங்குளம்
6ம் ஒழுங்கை, வவுனியா.

தகவல்:
இ.சிவகுமார்.
(M.M.C)வவுனியா.

## கனகசபாபதி சுந்தரலிங்கம் (பத்தர்)



பூனாறிலேன், கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட க.சுந்தரலிங்கம் (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியலக்சுமியின் அன்புக் கணவரும், பிரபாகரன் (பிரன்ஸ்), சுதாகரன், தயாகரன் (பிரான்ஸ்), நிஷாந்தினி (நோர்வே), உஷாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி (பிரான்ஸ்), உதயகுமாரி, சுபாசினி (பிரான்ஸ்), முரளிதரன் (நோர்வே), சசீந்திரன் ஆகியோரின் மாமனும், அபிஷேக், அக்ஷயா, செந்தூரன், மணிகண்டன், ஆதவன் (பிரான்ஸ்), சேரணுஜன், கயல்விழி, காலஞ்சென்ற திலகஜன் மற்றும் இனோஸ், ஆகாஸ், அபிநயா (பிரான்ஸ்), மயூரி, காசினி (நோர்வே), லேகின் ஆகியோரின் பேரனும், மகாலிங்கம், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, விமலாதேவி, சந்திராதேவி, மற்றும் சறோஜினிதேவி, காலஞ்சென்ற யோக லிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2011) புதன்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூனாறி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
சுதாகரன் (மகன்).

## திருமதி செல்லாச்சி முருகையா



அளவெட்டி மேற்கு பழம் தோட்டத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடாகவும் கொண்ட செல்லாச்சி முருகையா நேற்று (02.08.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குட்டித் தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, கனகம்மா அகியோரின் சாகோதரியும்,ஞானசக்தி, ஞானேஸ்வரி, ஞானமலர், சோமசுந்தரம், நவரத்தினம், ஞானசோதி, ஞானரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயும், சேனாதிராசா, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் ஜெயச் சந்திரன், சாரதா, சிவரேசினி, காலஞ்சென்ற நிரூபசிங்கம் மற்றும் இன்பரத்தினம் ஆகியோரின் மாமியும், திருமதி மாலாதேவி, மதி வதனன் (கிராம அலுவலர், பன்னாலை) பிறேமகுமார், திருமதி மாஜினி மகிந்தன், நந்தகோபன் (ஆசிரியர், தேவிபுரம் அ.த.க பாட சாலை), சரளா, திருமதி ரம்மியா ஸ்ரீகணேஸ், கஜேந்திரன் (முகா மையாளர் யாழ்.கோ கிளை), திருமதி மனோரதி ரவிச்சந் திரன், டிசாந்தினி, சரூபன், சாதனா, கானசுரபி, உமாசுரபி, அபிநயசுரபி, திருமதி கோபிகா தர்மராஜ், பிரோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2011) புதன்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வைரவர் அடைப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழந்தோட்டம்,
அளவெட்டி மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

**யாழ் நகரில் முதன்முறையாக நம்ப முடியாத கட்டணக் கழிவில்**

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

**வழங்கும் கற்கை நெறிகள்**

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses to obtain easy Student visa are in áogress...

100% நல்ல சம்பளம்

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT

FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

G.C.E. O/L or A/L Plus IELTS 5.5 or B1

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.

➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

2½ Years Diploma & Degree @ UK

**IELTS** (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 ½ Months

We guarantee minimum band 5.0 Upwards

**B1 Exam - Student Visa மூலமாக UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission ஆல் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டது.

Duration : 2Months

**SPONSOR /SETTLEMENT VISA - EXAMS**

பிரித்தானியா அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர வதிவிட விசாவை பெற்றுக்கொள்வதற்கான ஆங்கிலப் பரீட்சை தொடர்பான ஆலோசனைகளும், அதற்கான பரீட்சைகளும் (A1, PTE, ESOL) எங்களால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது.

**Diploma in English** (2 Months) **Advanced Diploma in English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

100%

**Spoken English with Grammar - Quick Learning Course** (1½ Month)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு

வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே நேரில் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935/0777585913
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கோசி Hotel மேலே)

அனைத்து வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படுவதால் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்

**கணக்கீட்டுக்கான பிரத்தியேக வகுப்புச் சேவை**

A/L 2012,
A/L 2013, Banking Course (CBF, DBF)
• உங்கள் இடங்களுக்கே வந்து கற்பிக்கப்படும்
0775460907, 0776740450
கணக்கீடு
திரு.பாலகஜன்
H.N.Dip. in Acc.

தொடர்புகளுக்கு:
NEC ஆனைப்பந்தி
BEACON யாழ்நகர்

**வீடு வாடகைக்கு**

அனெக்ஸ் உடன் கூடிய விசாலமான வீடு நல்லூரில் நிறுவனங்களுக்கு, அரச சார்பற்ற திணைக்களங்களுக்கு வாடகைக்கு உண்டு. எதிர்பார்க்கும் மாதவாடகை 40, 000/=
தொ.பே.-0773640941

**பொருளியல் NB. கஜிதரன்**

2012 A/L
MODEL paper CLASS
ஆரம்பம் 04.08.2011 (Thu)

NEC யாழ்நகர் | BPI குருநகர்

★ நேர அட்டவணை அலுவலகத்தில்
★ வாரத்தில் 4 மணித்தியால வகுப்புகள்.

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன்ஸ் சி.முருகதாஸன் அவர்களின் அன்புச் சகலன்

**ரத்தினம் சிவகுமார்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

லயன்ஸ் கழக நண்பர்கள்.

**தேவை**

I.சாரதிகள்.
ஆங்கிலம், சிங்களம் ஓரளவு கதைக்கக் கூடிய சாரதிகள் மூன்றுபேர் தேவை.
(3 வருட அனுபவத்துடன் A.D.தரம் விரும்பத்தக்கது)
II. மேற்பார்வையாளர்கள் (கிளீனிங்)
(தொழில் நுட்ப அனுபவம் 3வருடம் விரும்பத்தக்கது)
நேரில்வரவும்.

TILKO JAFFNA CITY HOTEL (PVT) LTD,
70/6, K.K.S. ROAD, JAFFNA.
பிரதம தபால் அலுவலகத்துக்கு அருகில்

இலங்கையின் முதற்தரப்பாடசாலை ஆசிரியர்களால் நடத்தப்படும்

**தரம் - 5 மாணவர்களுக்கான**

**மாபெரும் கல்விக் கருத்தரங்கு - 2011**

(பல்லூடக திரையில் - விளக்கங்களும் காட்சிகளும்)
காலம்: 09.08.2011, 10.08.2011
நேரம்: காலை 8.30 - பி.ப. 2 மணிவரை
இடம்: SCIENCE HALL
(பதிவுகளுக்கு) கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0716424246,
0776688421
ஆசிரியர்கள்:
திரு.S.B.சுதன் (கொழும்பு இந்துக் கல்லூரி)
திரு.M.அருள் (கொழும்பு இந்துக் கல்லூரி)
தரம் 4 மாணவர்களும் பங்குபற்றிப் பயன்பெறலாம்.
(குறிப்பிட்ட தொகை ஆசனங்கள் இருப்பதால் பதிவுகளுக்கு முந்துங்கள்)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 04.07.2011 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சரவணை மார்க்கண்டு**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (03.08.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ந.ப. 12.00 மணியளவில் யாழ்/அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

82/10, 3 ஆம் ஒழுங்கை
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(மா.தர்மராஜா, மா.நவரத்தினராஜா)

**விற்பனையாகிறது**

பாலர் வகுப்பு படிக்கும் மாணவர்கள் அடுத்த வருடம் தரம் ஒன்று அனுமதிக்கு நேர்முகப்பரீட்சையில் தோற்றி சிறப்புசித்தி பெறக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட ஐந்து வகையான புத்தகங்கள் வெளிவந்துள்ளன. குறைந்த அளவு பிரதிகளே கிடைக்கப் பெற்றுள்ளன. தயவு செய்து எமது வாடிக்கையாளர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
2229881

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிலந்தியின் அதிசயங்கள்

சிலந்திகளைப் பார்த்திருக்காதவர்கள் இருக்கவே முடியாது. உங்கள் வீடுகளை நூல் படைகளின் கூடாரமாக்கும் சிலந்திகளும் உண்டு. கடித்து உயிரைப் பறிக்கும் சிலந்திகளும் உண்டு. இவ்வாறு சிலந்திகளில் ஆயிரம் வகைகள் உண்டு.

**வீட்டுச் சிலந்தி**

வீட்டுச் சிலந்திகள் இருள்படர்ந்த இடங்களை அதிகம் விரும்பும். வீட்டுக் கூரையிலோ அல்லது ஜன்னல் பக்கமோ வலையைக் கட்டி முடித்ததும் ஓர் ஓரமாக அமர்ந்து பூச்சிகள் வரும் வரை காத்திருக்கும்.



பெரிய பூச்சிகள் கிடைத்தால் அவற்றின்மேல் அதிக அளவு நூலைப் போட்டுப் பிடித்துக்கொள்ளும்.

**பிளாக் விடோ**

இது கறுப்புக் கண்ணாடி போல் இருக்கும். இந்த சிலந்தியின் சிறப்பம்சம் என்னவெனில் ஆண் சிலந்திக்கும் பெண் சிலந்திக்கும் பல வித்தியாசங்கள் உள்ளன. பெண் சிலந்திகள் ஆண் சிலந்திகளை விடச் சற்றுப் பெரியவை.

பெண் சிலந்திகளின் வயிற்றுப் பகுதியில் ஒரு சிவப்பு வட்டம் இருக்கும். ஆண் சிலந்திகளுக்கு இருபுறமும் சிவப்பு மற்றும் வெள்ளையில் கோடுகள் காணப்படும். பொதுவாக இவை தனிமையையே அதிகம் விரும்புகின்றன. வலையில் சின்ன அதிர்வு ஏற்பட்டாலும் ஓரமாக பதுங்கிக்கொள்ளும் இந்த வகைச் சிலந்திகள் விஷமுள்ளவை. ஆனால், ஆரோக்கியமானவர்களை ஒன்றும் செய்யாது. பெண் சிலந்தி மட்டும் தான் கடிக்கும்.

**தோட்டச் சிலந்தி**

இவை தோட்டங்களிலும் புல்வெளிகளிலும் வாழ்வதோடு கறுப்பு மற்றும் மஞ்சள் கோடுகளுடன் காணப்படும்.

இவை தமது வலையின் நடுப் பகுதியில் சற்று அதிக வலிமையாக இருக்கக் கூடியதாக வலையைக் கட்டிவிட்டு அந்த இடத்தில் பெண் சிலந்தி அமர்ந்து கொள்ளும். ஆண் சிலந்தி பெண் சிலந்தியைச் சுற்றி வலையை மேலும் பெரிதாக்கிக் கொண்டே போகும்.

**தங்கக்கம்பி சிலந்தி**

இதைப் பூச்சிலந்தி என்றும் சொல்வார்கள். மஞ்சள் உடலில் சிவப்பு புள்ளிகள் இருக்கும். கண்களுக்கு இடையேயும் சிவப்பு வண்ணம் காணப்படும். இவை புல்வெளி, வயல், தோட்டங்களில் வெள்ளை, மஞ்சள் மலர்களின் மேல் மலர்ந்திருக்கும். பூவி லுள்ள தேனைக் குடிக்க பூச்சிகள் வந்ததும் பிடித்து அவற்றின் உடலினுள் விஷத்தை ஏற்றும். இந்த விஷம் பூச்சியின் உடலில் உள்ள பாகங்கள் அனைத்தையும் உருக்கித் திரவமாக மாற்றிய பிறகு அந்தத் திரவத்தை அப்படியே உறிஞ்சிக் குடிக்கும்.

**பச்சைச் சிலந்தி**

இவை வயல்களிலும் காடுகளிலும் காணப்படும். புதர்களிலும் சின்னச் செடிகளிலும் கூட இருப்பதோடு வேகமாக ஓடக்கூடியது. இச்சிலந்திகள் பூச்சிகளை பூனை போல் பதுங்கிச் சென்று பிடித்து உண்ணும் சக்தி வாய்ந்தவை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையின் விரிவாக்கல் கிளை நேற்றுமுன்தினம் உரும்பிராயில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.இ.டி.சுமணசிறியுடன் வங்கியாளர்கள் இணைந்து கிளையை நாடாவை வெட்டித்திறந்து வைக்கின்றனர். (ம-313)

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு பெருமை சேர்த்த பேராசிரியராக விளங்கியவர் சிவத்தம்பி

யாழ்ப்பாணம், ஒக.3

பெருமை பெற்ற பேராசிரியர்கள் மத்தியில் யாழ்.பல்கலைக்கழகத்துக்குப் பெருமை சேர்த்த பேராசிரியராக பேராசிரியர் கா.சிவத்தம்பி விளங்கினார்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் என்.ஞானக்குமரன் இவ்வாறு தெரிவித்தார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பியின் அஞ்சலி நிகழ்வு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகத்தை அனைத்துத் திசைகளிலும் அறிய வைத்த பெருமைக்குரியவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி. வகுப்பை எப்போதும் கலகலப்பாக வைத்திருக்கும் தனித்துவம் அவரிடம் நிரம்பிக் காணப்பட்டது. இவர் தமிழ் என்ற வட்டத்துக்குள் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் அனைத்துத் துறைகளிலும் ஈடுபட்டார். சமகால வாழ்வியலுடன் தொடர்புபட்டு இயங்கி வந்தார்.

அறிவின் ஆழம், புலமை, ஆளுமைத்திறன் இதுதான் அவரின் தனித்துவம். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பல பேராசிரியர்களை உருவாக்கியிருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தால்பலபேராசிரியர்கள் புகழ்பெற்றார்கள். ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு பெருமை சேர்த்த பெருமை பேராசிரியர் கா.சிவத்தம்பியையே சாரும்.

எனவே பேராசிரியரின் வழியில் ஒழுகி அவர் விட்டுச்சென்ற பாதையில் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும். - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே. தேவராசா, விஞ்ஞான பீடாதிபதி எஸ்.கந்தசாமி உட்பட பேராசிரியர்கள், விரிவுரையாளர் பலரும் உரையாற்றினர். (ம-319)

# தாம் கற்றுக்கொண்ட வைத்தியத்தையே சுதேச வைத்தியர் மேற்கொள்ளவேண்டும்

## இலங்கை ஆயுள்வேத மருத்துவ சபையால் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஒக.3

"சுதேச வைத்தியர்கள் தாம் கற்றுக்கொண்ட சுதேச மருந்து வகைகளை பிரயோகித்தே நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்.

இதனைத் தவிர்த்து ஆங்கில மருந்து வகைகளைப் பிரயோகித்து வைத்தியம் செய்வதை அனுமதிக்க முடியாது.

இந்த வகையில் சுதேச வைத்தியர்கள் நடந்துகொள்வது மக்கள் சுதேச வைத்திய முறை மீது வைத்துள்ள நம்பிக்கையை இல்லாமல் அழிப்பதுடன், தாம் கற்றுக்கொண்ட வைத்திய முறைக்கு செய்யும் துரோகமுமாகும்.

இவ்வாறு கூறினார் இலங்கை ஆயுள்வேத மருத்துவச் சபையின் பணிப்பாளர் ஆர்.எஸ். ஜெயவர்த்தனா.

வடக்கு மாகாணத்தில் சுதேச வைத்தியர்கள், பரம்பரை வைத்தியர்களை பதிவு செய்தலும் அனுமதி வழங்கலும் தொடர்பான நடமாடும் சேவையின் இறுதிநாள் அமர்வு கைதடி சித்தமருந்து போதனாவைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வட மாகாண சுதேச வைத்திய திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி சியாமா துரைரத்தினம் தலைமையில் நடைபெற்ற நடமாடும் சேவையின் கலந்துரையாடலில் ஆயுள்வேத சபையின் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்தாவது:

சுதேச மருத்துவர்கள் மற்றும் பரம்பரை வைத்தியர்களை பதிவு செய்வதன் மூலம் அவர்களுக்கான தொழில் ரீதியான பாதுகாப்பும் பல்வேறு சலுகைகளும் கிடைக்கவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் ஜனாதிபதியின் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வட பகுதியில் நான் அவதானித்த வகையிலும் எனக்குக் கிடைத்த தகவலின் படியும் ஆயுள்வேதம், சுதேச மருத்துவம், பரம்பரை வைத்தியம் என்பன தூய்மையான முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

சுதேச மருத்துவத் துறையில் கற்றவர்கள், பரம்பரை வைத்தியர்கள், சுதேச மருந்துகளை, ஆயுள்வேத மருந்துகளை, அரிய வகை மூலிகைகளின் பயன்பாட்டை முற்றாகக் கைவிட்டு ஆங்கில மருந்துகளை பயன்படுத்தி வைத்தியம் செய்யும் நிலைமையும் காணப்படுகின்றது.

இந்த சுதேச மருத்துவத்துறைக்கு சுதேச மருத்துவர்கள் செய்யும் துரோகம் மட்டுமல்ல, மக்கள் சுதேச வைத்தியத்துறை மீது கொண்டுள்ள நம்பிக்கையைச் சீரழிக்கும் செயற்பாடாகும்.

கற்றதுறை மீது நம்பிக்கை வைத்து தமது சேவையை மக்களுக்கு வழங்கவேண்டும்.

இதன் மூலம் தாம் கற்றுக் கொண்ட துறையையும் வளர்த்து தம்மையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் சுதேச வைத்தியர்கள் துறைசாரா நிலையில் ஆங்கில மருந்துவகைகளைப் பயன்படுத்தி நோயாளர்களுக்கு கிசிச்சை அளிப்பதை அனுமதிக்க முடியாது.

அவ்வாறு நடப்பவர்கள் மீது ஆயுள்வேத மருந்துவச் சபை ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும். சட்ட நடவடிக்கைகளுக்கும் அவர்கள் உள்ளாக்கப்படுவர்.

சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை பயன்படுத்துவது தொடர்பான முறைப்பாடுகள், புகார்களை பொதுமக்கள் ஆயுள்வேத சபைக்கும் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துக்கும் அறியத் தரலாம். அது தொடர்பாக மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆங்கில வைத்தியத்துறையில் கற்றுப் பட்டம் பெற்ற பின்னர்தான் ஆங்கில மருந்து வகைகளை பிரயோகிக்க முடியும்.

இதனைக் கருத்தில் கொண்டு சுதேச மருத்துவர்கள் தமது வைத்தியசேவையை வழங்க வேண்டும். - எனக் கூறினார். (ம-11)

# வலிகாமம் வலய மனைப்பொருளியல் போட்டி முடிவுகள்

சுன்னாகம், ஒக.3

வலிகாமம் வலயத்தால் நடத்தப்பட்ட மனைப்பொருளியல் அறிவுப் போட்டியின் வலய மட்டப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. வெற்றி பெற்றவர்களின் விவரத்தின் ஒரு தொகுதி கடந்த 27 ஆம் திகதி பிரசுரமானது. அதன் தொடர்ச்சி வருமாறு:

**தரம்:-11**

தி.அனுயா (வட்டு. இந்துக் கல்லூரி), பு.ஹர்சனா (அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்), ம.சாதுஷா (அராலி இந்துக் கல்லூரி)

**தரம்:-12**

செ.வினுசா (வட்டு. இந்துக் கல்லூரி), ம.திபிஜா (சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

**தரம்:-13**

ம.டர்சிகா (வட்டு. இந்துக் கல்லூரி).

**சண்டிலிப்பாய் கோட்டம் - தரம்-10**

ம.சரண்யா (ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலயம்), ம.தர்சிகா (இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), பா.சிவ காமசுந்தரி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**தரம்-11**

அ.லூட்ஸ் பியூஜினி (இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்), பு.லக்சனா (மானிப்பாய் சென்.ஆன்ஸ்றோ.க.), ஜெ.நிதுஷா (பண்டத்தரிப்பு யசிந்தா).

**தரம்-12**

ச.ஜெனனி (மாதகல் சென். யோசப் ம.வி), தர்மினி (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), வே.கஜனி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**தரம்-13**

தி.மயூரதி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), யோ.தர்சிக்கா (இளவாலை கன்னியர் மடம் ம.வி), அ.அனுசியா (மானிப்பாய் மெமோறியல் கல்லூரி). (38)

## சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சை

அச்சுவேலி, ஒக. 3

இலங்கை சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. கொழும்பில் 30 நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப் பட்டிருப்பதாகவும், இதுவரை அனுமதி அட்டை கிடைக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது. (த-11)

## சட்டமாணி தெரிவுப் பரீட்சை முடிவுகள்

நாவற்குழி, ஒக. 3

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சட்டமாணி கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

www.ou.ac.lk என்னும் இணையத்தளத்தில் இதனைப் பார்வையிடலாம்.

யாழ். பிராந்திய நிலையத்துக்கு 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-121)

## மின்தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக. 3

வீதியில் நின்ற மரத்தில் ஏறி மரக்கிளையை வெட்டிய போது அது சரிந்து மின்கம்பியில் விழுந்ததால் மின் தாக்குதலுக்கு உள்ளாகி தூக்கி எறியப்பட்ட நபர் படுகாயமடைந்து சிகிச்சைக்கென தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த மா.செல்வராசா (வயது - 48) என்பவரே படுகாயமடைந்தார்.

உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (த-4)

## தரம் -5 மாணவர்களுக்கு பரீட்சை

தென்மராட்சி, ஒக. 3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மதிப்பீட்டுப் பரீட்சை கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றது.

வலயத்தைச் சேர்ந்த 650 மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org